221

நாடக ராணி

பிரேம்சந்த்

நாடக ராணி

(சிறுகதைகள்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 NOV 1944
MADRAS

பிரேம்சந்த்

கா. ஸ்ரீ. ஸ்ரீ.
மொழிபெயர்த்தது

894.8113

கலைமகள்

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை.

பதிப்புரிமை] மே, 1944 [விலை ரூ. 1/4-

031,3

PRINTED AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS,
AT TIRUBHUVANAM, TIRUVADAMARUDUR POST.

வாழ்க்கையும் கலையும்

கதைச் சக்கரவர்த்தியான பிரேம்சந்தின் கதைகளில், புருஷனும் பிரகிருதியும்போல, கடலும் அலையும் போல, வாழ்க்கையும் கலையும் இணைந்துள்ளன. வாழ்க்கையம்சம் இல்லாத கலையையோ, கலையம்சமற்ற வாழ்க்கையையோ அவர் என்றும் விரும்பியதில்லை. அதனால்தான் உலக வாழ்க்கைக்கு அவர் கலையும், அவர் கலைக்கு உலக வாழ்க்கையும் பயன்பட்டன.

கோடாநுகோடியாக வியாபாரம் செய்து, கடைசியில் பெரு நஷ்டமடைந்து, வீடுவாசல்கள் சொத்து சுதந்தரங்களையெல்லாம் இழந்து, வாழ்வில் உற்சாகமற்றுப்போன மார்வாடி ஒருவர், ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் 'வீலர் புக் ஸ்டா'லில், தம்மிடம் இருந்த கடைசி எட்டணாவைக் கொடுத்து, பிரேம்சந்தின் கதை வெளியாகி யிருந்த ஒரு மலரை வாங்கினார்; படித்தார். அந்தக் கதை அவருக்கு அபாரமான உற்சாகத்தையும் தன்னம்பிக்கையையும் கொடுத்தது. சொற்ப முதலோடு அவர் மீண்டும் வியாபாரத்தைத் தொடங்கி லக்ஷாதிபதியானார்.

கங்கைக் கரையில் உயிரிழக்க வந்த ஓர் இளைஞனை அவருடைய கடிதம் காத்தது. 'காதல் காதல்' என்று பிதற்றிக்கொண்டு கோணல் வழியில் சென்று திண்டாடியவர்களுக்கெல்லாம் அவர் கதைகள் நேரான பாதையைக் காட்டின. அந்தப் பாதையில் திரும்பி அவர்கள் சுகம் பெற்றார்கள். அவருடைய கலை இவ்விதம் உலக வாழ்க்கைக்குப் பயன்பட்டது. ஆங்கிலேயரும், ருஷியரும், உக்கிரேனியரும், ஜப்பானி யரும் தத்தம் பாஷைகளில் மொழிபெயர்த்து அவர் கதைகளைப் படிக்கின்றனர்.

சினிமாப் படங்களுக்குக் கதை எழுத, அவரைப் பம்பாய்க்கு அழைத்துச் சென்றனர். வாழ்க்கையில் தியாக இன்பத்தைக் கண்டவருக்கு அந்தப் பெருத்த சம்பளம் பிரமாதமாகத் தோற்றவில்லை. தாம் கண்ட வாழ்க்கைச் சித்திரங்களுக்கு முரணாக, அவர் கலையை மாற்ற விரும்பவில்லை. வேலையை அடுத்த கணமே ராஜீநாமாச் செய்துவிட்டு, காசி வந்து சேர்ந்தார்.

லக்ஷ்யமும் உண்மையும் இணைந்து, நவ ரஸங்கள் ததும்பும் அவருடைய ஏழு கதைகள் இந்தத் தொகுதியில் உள்ளன. ரஸிகர் களுக்கு இவை நல்விருந்தாகும்.

சென்னை,
31-5-'44

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

பொருளடக்கம்

		பக்கம்
நாடக ராணி	...	1
ரகசியம்	...	16
ரஸிகர்	...	35
உண்மை	...	43
ஜாலவித்தை	...	55
மிஸ் பத்மா	...	59
மன நிலை	...	68

21 NOV 1944

நாடக ராணி

1

நாடக மேடையில் திரை விழுந்தது. தாரா சகுந்தலையாக நடித்து, காண்போர் நெஞ்சைக் கொள்ளைகொண்டுவிட்டாள். சகுந்தலை துஷ்யந்தனுக்கு எதிரே நின்று, வெறுப்பும் துயரமும் அசட்டையும் அவளுடைய உணர்ச்சிகளைத் தூண்ட, நெருப்புப் பொறிபோன்ற சொற்களில் தன் ஆவேசத்தை வெளிப்படுத்திய சமயத்தில், நாடகம் பார்க்க வந்த ஜனங்கள் சாதாரணமான பொதுவிதிகளை மீறி மேடையை நோக்கிப் பைத்தியம்போல ஓடவும், அவள் புகழைப் பாடவும் தலைப்பட்டார்கள். மேடைமேல் ஏறி, தாராவின் கமலபாதங்களில் தலை சாய்த்தவர் பலர். மேடை முழுவதும் பூக்கள் மயமாக இருந்தது; விதவிதமான ஆபரணங்கள் மழையாகப் பொழிந்தன.

அந்த நிமிஷத்திலே மேனகையின் ஆகாய விமானம் கீழே இறங்கி, அவளைத் தூக்கிக்கொண்டு பறக்கவில்லையென்றால், அந்த நெக்கரிக்கும் கும்பலில் ஏழெட்டுப் பேர் துவையலாகி இருப்பார்கள். நாடகக் கம்பெனியின் மானேஜர் உடனே மேடைக்கு வந்து, பொது மக்களின் ரஸிகத் தன்மையையும் ஆதரவையும் பாராட்டி, மறுநாள் மீண்டும் இந்த நாடகமே நடக்கும் என்று சொன்ன பின்புதான், ஜனங்களுடைய வெறி சற்றுத் தணிந்தது. ஆனால், அந்தச் சமயத்திலுங்கூட ஓர் இளைஞன் அரங்கத்தில் நின்றிருந்தான். நல்ல உயரம்; ஒளி வீசும் முகம்; உருக்கிவிட்ட தங்கத்தைப் போன்ற நிறம்; தேவர்களைப் பழிக்கும் பேரெழில்; கடைந்தெடுத்தாற்போன்ற உடலமைப்பு; கம்பீரமான ஆகிருதி. அவன் ஓர் இளைய ஜமீன்தாராக இருக்கவேண்டும் என்று தோற்றியது.

நாடகம் பார்க்க வந்த ஜனத்திரள் முழுவதும் வெளியே சென்ற பிறகு, அவன் மானேஜரைப் பார்த்து, "ஒரு நிமிஷம், நான் தாராதேவியைச் சந்திக்க முடியுமா?" என்று கேட்டான்.

"அந்த மாதிரி வாடிக்கை எங்கள் கம்பெனியில் இல்லை" என்று மானேஜர் அசட்டையாகவே பதில் சொன்னார்.

"என்னுடைய கடிதமொன்றை அவரிடம் அனுப்ப முடியுமா?"

"மன்னியுங்கள், ஐயா ; அதுவும் எங்கள் விதிகளுக்கு மாறானது" என்று மானேஜர் பழைய குரலிலேயே சொன்னார்.

அந்த இளைஞன் அப்புறம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை ; ஆசாபங்கத்தோடு மேடையிலிருந்து கீழே இறங்கி, வெளியே போகப் புறப்பட்டான். அப்போது மானேஜர், "சற்று நில்லுங்கள். உங்கள் விலாசச் சீட்டு எங்கே ?" என்று கேட்டார்.

இளைஞன் ஒரு காகிதத் துணுக்கைச் சட்டைப் பையிலிருந்து எடுத்து அதில் ஏதோ எழுதிக் கொடுத்தான்.

மானேஜர் மேலாக அதைப் பார்த்தார் : "நிர்மலகாந்தன், ஓ. பி. இ., இளைய ஜமீன்தார்." அவருடைய கடுமை மென்மையாக மாறியது. ஜமீன்தார் நிர்மலகாந்தர் அந்த நகரத்துக்கே திலகமாக விளங்குபவர் ; இலக்கிய மணி ; சிறந்த சங்கீத ரஸிகர் ; புலவர்களுக்கெல்லாம் மணிமகுடம் ; வருஷத்துக்குப் பத்து லக்ஷம் ரூபாய் வருமானம் உடையவர். நாட்டில் எத்தனையோ ஸ்தாபனங்கள் அவருடைய நன்கொடையால் நடக்கின்றன. அப்படிப்பட்டவர் இப்போது பிச்சைக்காரனைப்போல நிற்கிறார். தாம் அவரை அசட்டை செய்ததற்காக, மானேஜர் வருத்தமுற்றார் ; வணக்கத்தோடு, "என்னை மன்னிக்கவேண்டும். பெருங்குற்றம் செய்துவிட்டேன். இப்போதே தாராதேவியிடம் தங்கள் விலாசச் சீட்டைக் கொடுத்துவிட்டு வருகிறேன்" என்றார்.

ஜமீன்தார் கையமர்த்தி, அவரைப் போகவொட்டாமல் நிறுத்தி, "இருக்கட்டும் ; இப்போது வேண்டாம். நான் நாளைக்கு மாலை ஐந்து மணிக்கு வருவேன். இப்போது தாராதேவி மிகவும் களைப்போடு இருப்பார்கள் ; அவர்கள் இளைப்பாறும் நேரம் அல்லவா இது ?" என்றார்.

"தங்கள் விஷயத்தில் அவர் இதை ஒரு தொந்தரவு என்றே நினைக்கமாட்டார். இதோ, ஒரு நிமிஷத்தில் வந்துவிட்டேன்" என்றார் மானேஜர்.

ஆனால், தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட பின்பு, இனிமேல் தமது ஆத்திரத்தை மறைப்பதுதான் நல்லது என்று ஜமீன்தார் கருதினார். மானேஜருடைய பெருந்தன்மையைப் புகழ்ந்துவிட்டு, மறுநாள் வருவதாகக் கூறி, அவர் அங்கிருந்து நடையைக் கட்டினார்.

2

சுத்தமாகப் பெருக்கி, அழகாக அலங்கரித்த ஓர் அறையில் மேஜைக்கு எதிரே ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவளாய், தாரா உட்கார்ந்திருந்தாள். இரவு நிகழ்ந்த காட்சி அவள் கண்முன்

நடனமாடியது. வாழ்க்கையில் எல்லா நாட்களுமா இப்படி இருக்கின்றன! எத்தனை பேர் அருகில் வந்து அவளைப் பார்க்கத் தவித்தார்கள்! ஒருவர்மேல் மற்றவர் விழுந்து அடித்துக்கொண்டு ஓடி வந்தார்களே! அத்தனை பேரையும் அவள் தன் காலினால் தூக்கி எறிந்துவிட்டாள்; ஆம், உதைத்து எறிந்துவிட்டாள். ஆனால், அந்தக் கூட்டத்தில் ஒரு தெய்விக வடிவம் மட்டும் அசையாமலே நின்றிருந்தது. அந்த மனிதனின் கண்களிலே எவ்வளவு ஆழ்ந்த அன்பு! எவ்வளவு உறுதியான தீர்மானம்! அவனுடைய இரு கண்களும் அவள் உள்ளத்தைக் குத்தினவே! 'இன்று அவரை மீண்டும் பார்ப்பேனா?' என்று அவள் தன்னையே கேட்டாள். 'பார்த்தேனாயின், ஒரு தடவையாவது பேசாமல், அவரைப் போகவிடமாட்டேன்' என்று சொல்லிக்கொண்டாள்.

நிலைக்கண்ணாடியில் அவள் தன் வதனத்தைப் பார்த்தாள்; தாமரை பூத்தாற்போல இருந்தது. 'முப்பத்தைந்து வஸந்தங்களைப் பார்த்த மலர் இது' என்று யாராவது சொல்ல முடியுமா? அந்தத் தளதளப்பும், மென்மையும், சஞ்சலத் தன்மையும், இனிமையும் எந்த இளவயசு மங்கையையும் தோற்கடித்துவிடுமே! தாரா மீண்டும் ஒரு முறை தன் உள்ளத்தில் காதல் விளக்கை ஏற்றினாள். இருபது ஆண்டுகளுக்கு முன்னால், கடுமையான அநுபவம் ஒன்றை அவள் தன் காதல் வாழ்க்கையில் கண்டாள். அப்போதிலிருந்து அவள் ஒருவிதத்தில் கைம்பெண்ணைப் போல வாழ்ந்து வரலானாள். தன் உள்ளத்தை அவளுக்குப் பறி கொடுக்க நினைத்த காதலர்களுக்குக் கணக்கு வழக்கில்லை. ஆனால், அவள் எவனையும் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அவர்களுடைய காதலில் கபட நாற்றம் வீசியது. ஆயினும் ஏனோ, இன்று அவளுடைய புலனடக்கம் வழிகொடுத்துவிட்டது. இருபது ஆண்டுகளுக்கு முன்னால் அநுபவித்த அந்த இனிய வேதனையைத்தான் இன்று மீட்டும் அவள் உள்ளம் உணர்ந்தது. ஓர் ஆண்மகனின் சுந்தர வடிவம் அவள் கண்களில் புதைந்தது; நெஞ்சத் திரையில் இடங்கொண்டது. அவனை எந்த விதத்திலும் அவளால் மறக்க முடியவில்லை. மோட்டார்காரில் போகும்போது அவனை அவள் கண்டிருந்தாளாயின், ஒருவேளை, கவனித்திருக்கவே மாட்டாள். ஆனால், அவன் காதற் பரிசைக் கையில் ஏந்தித் தன் எதிரே நிற்பதைக் கண்டதும், அவளுக்குத் தாங்கவில்லை.

திடீரென்று வேலைக்காரி வந்து, "அம்மா, நேற்றிரவு கிடைத்த பொருள்களையெல்லாம் அப்படியே எடுத்து வைத்திருக்கிறேன்; கொண்டுவரட்டுமா?" என்றாள்.

''வேண்டாம்; என்னிடம் எதையும் கொண்டுவர வேண்டாம். ஆமாம்; என்ன என்ன பொருள்கள் கிடைத்திருக்கின்றன ?'' என்றாள் தாரா.

''ஒரே போராகக் குவித்து வைத்திருக்கிறேன், அம்மா! ஒன்று, இரண்டா, சொல்வதற்கு? மோகராக்கள், ப்ரூச்சுகள், கொண்டையூசிகள், பித்தான்கள், லாக்கெட்கள், மோதிரங்கள் – இப்படி எத்தனையோ ரகங்கள்! ஒரு சிறு பேழையில் அழகிய முத்துமாலை ஒன்று இருக்கிறது. இன்றுவரையில் நான் அப்படிப் பட்ட மாலையைப் பார்த்ததே இல்லை. எல்லாவற்றையும் எடுத்துப் பெட்டியில் வைத்திருக்கிறேன்.''

''சரி, அந்தப் பெட்டியை இங்கே கொண்டுவா'' என்றாள் தாரா.

வேலைக்காரி பெட்டியைக் கொண்டுவந்து மேஜைமேல் வைத்தாள். அதற்குள், வேலைக்காரப் பையன் தாராவிடம் ஒரு சீட்டைக் கொணர்ந்து கொடுத்தான். அவள் அதை ஆவலோடு பார்த்தாள்: ''நிர்மலகாந்தன், ஓ. பி. இ., இளைய ஜமீன்தார்.''

''இந்தச் சீட்டை உன்னிடம் யார் கொடுத்தார்கள்? ஜரிகைத் தலைப்பாகை அணிந்திருந்தாரே, அவரா கொடுத்தார்?'' என்று தாரா பையனைக் கேட்டாள்.

''மானேஜர் ஐயா கொடுத்தார்'' என்று சொல்லிவிட்டுப் பையன் ஓட்டம் பிடித்தான்.

பெட்டியிலிருந்து, முதல் முதலில் தென்பட்ட அந்தப் பேழையைத்தான் தாரா எடுத்தாள்; திறந்து பார்த்தாள்: அருமையான முத்துக்கள் கோத்த அழகிய மாலை! அந்தப் பேழையின் மூலையில் சீட்டு ஒன்று இருந்தது. அதை 'லபக்'கென்று எடுத்துப் படித்தாள்: ''நிர்மலகாந்தன்.........'' சீட்டு அவள் கையிலிருந்து நழுவி விழுந்தது. நாற்காலியிலிருந்து தாவி எழுந்து, மிகவும் வேகமாகப் பல அறைகளையும் தாழ்வாரங்களையும் கடந்து, அவள் மானேஜரின் முன்னே போய் நின்றாள். மானேஜர் எழுந்து நின்று அவளை வரவேற்று, ''நேற்றிரவு உங்கள் நடிப்பு அபாரம்! உங்களை எவ்வளவு போற்றினாலும் போதாது!'' என்றார்.

தாரா நின்றவாறே, ''ஜமீன்தார் நிர்மலகாந்தர் வெளியே நிற்கிறாரா என்ன? பையன் சீட்டைக் கொடுத்ததும் ஓடிப்போய் விட்டான்; அவனை ஒன்றுமே கேட்க முடியவில்லை''' என்றாள்.

''இரவு நீங்கள் போனதுமே அவருடைய சீட்டுக் கிடைத்தது.''

"அப்போதே ஏன் இதை நீங்கள் என்னிடம் அனுப்ப வில்லை ?"

மானேஜர் தாழ்ந்த குரலில், "நீங்கள் இளைப்பாறிக்கொண் டிருந்ததால், உங்களைத் தொந்தரவுபடுத்துவது சரியல்ல என்று நினைத்தேன். எனக்கு ஒரு பயமுங்கூட. அவருக்கு உங்களை அறிமுகப்படுத்தினால், இந்தக் கம்பெனியைவிட்டு நீங்கள் போய் விடுவீர்களோ என்ற பயம். நான் ஒரு பெண்ணாக இருந்தால், அந்த க்ஷணமே அவர் பின்னால் போய்விட்டிருப்பேன். இத் தகைய தெய்விக அழகு வாய்ந்தவனை இதுவரையில் நான் கண்ட தில்லை. ஜரிகைத் தலைப்பாகை அணிந்து உங்கள் முன்னால் நின்றிருந்தாரே, அவர்தாம்! நீங்கள்கூடப் பார்த்தீர்களே ?" என்றார்.

தாரா பாதித் தூக்கத்தில் பேசுபவள்போல, "ஆமாம் பார்த்தேன். அவர் மறுபடியும் வருவாரா ?" என்றாள்.

"இன்று மாலை ஐந்து மணிக்கு வருவார். இந்த நகரத்தில், மிகப் பெரிய பணக்காரர் அவர்; நிரம்பப் படித்தவர்."

"இன்று நான் ஒத்திகைக்கு வரமாட்டேன்" என்று கூறி, தாரா அங்கிருந்து போய்விட்டாள்.

3

ஜமீன்தார் வரும் சமயம். தாரா நிலைக்கண்ணாடியின்முன் உட்கார்ந்திருக்கிறாள். பணிப்பெண் அவளைச் சிங்காரித்துக் கொண்டிருக்கிறாள். அலங்காரம் செய்துகொள்வதுகூட இந்தக் காலத்தில் ஒரு கலை. முன்காலத்தில் பெண்கள் தம்மை அழகு செய்துகொள்ளும் வழக்கமே வேறு. கவிகளும், சித்திரகாரர் களும், ரஸிகர்களும் அதற்கு எல்லை கோலியிருந்தார்கள். கண் களுக்குக் கட்டாயம் மையிட்டுக்கொள்ள வேண்டும்; கையில் மஞ்சள் பூசி, பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பிட்டு நிறம் தீட்டிக் கொள்ளவேண்டும். இன்ன இன்ன இடத்தில் இன்ன இன்ன அணிகலனைத்தான் அணியவேண்டும் என்று விதி. இன்று அந்தச் சாஸ்திரம் மலையேறிவிட்டது. இந்தக் காலத்தில் ஒவ்வொரு பெண்ணும் தன் சுவைக்கும் அறிவுக்கும் ஏற்றபடி, மற்ற வர்களைவிட உயர்வாகச் சிங்காரித்துக்கொள்ள முடியும். எந்த உபாயத்தினால் தன் அழகை மிகக் கவர்ச்சிகரமாகச் செய்வது என்பதே அவளுடைய நோக்கமாக இருக்கும். தாரா இந்தக் கலையில் மிகவும் தேர்ச்சி பெற்றவள். பதினைந்து வருஷமாக அவள் இந்தக் கம்பெனியில் இருக்கிறாள். ஆண்களின் உள்ளத்தோடு விளையாடுவதில்தானே அவள் இந்த வாழ்க் கையைக் கழித்திருக்கிறாள் ?

எவ்விதமான கடைக்கண் நோக்கினுல், எவ்விதமான முறுவலினுல், எவ்விதமான அங்க வளைவினுல், கூந்தலை எவ்விதம் பரப்புவதனுல் ஆண்களின் நெஞ்சம் துடிதுடித்து மடியும் என்பதை அறியும் கலையில் அவளுக்கு மிஞ்சியவர் இல்லை. இன்று அவள் தன் அம்பருத்தூணியிலிருந்து ஒவ்வோர் அம்பாகப் பொறுக்கிப் பொறுக்கி எடுத்து, உள்ளத்தைப் பிளக்கும் கூரிய ஆயுதங்களினுல் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். நடுக் கூடத்துக்கு அந்த அழகு ராணி வந்தபோது, உலகத்து இனிமையெல்லாம் ஒன்ருக உருவெடுத்து, நடமாடுவதுபோல இருந்தது. அவள் மேஜையருகே நின்று, ஜமீன்தாரின் சீட்டைப் பார்த்தாள். அவள் காதுகள் காரின் சத்தத்தை எதிர்நோக்கி யிருந்தன. ஜமீன்தார் அதே க்ஷணத்தில் வந்து, தான் நிற்கும் அந்த நிலையிலேயே தன்னைப் பார்க்க வேண்டுமென்று அவள் விரும்பினுள். அவள் நின்ற அந்த நிலையில், அவளுடைய ஒவ்வோர் அங்கத்தின் பூர்ண எழிலையும் அவர் கண் கொள்ளாமல் பருக முடியும். அலங்காரம் செய்துகொள்ளும் தன் கலைத்திறனைக் கொண்டு, அவள் காலனை வென்றுவிட்டிருந்தாள். இந்தச் சஞ்சல மங்கைக்கு அவ்வளவு வயசாகிவிட்டது என்று யாராவது சொல்ல முடியுமா? உள்ளம் அமைதியை வேண்டும்போது, ஏதாவது ஒரு புகலைப் பெற ஆவல் உண்டாகிறது; அதன் கர்வமெல்லாம் வணக்கத்தின் முன்பு அடங்கிப் போகிறது.

தாரா அப்படியொன்றும் நெடுநேரம் காத்திருக்கவில்லை. ஜமீன்தாருக்கும் அவளைக் காண மிகவும் ஆவல்தான். பத்து நிமிஷத்துக்கெல்லாம் கீழே காரின் சத்தம் கேட்டது. தாரா தன்னைச் சமாளித்துக்கொண்டாள். கணநேரத்தில் ஜமீன்தார் அந்த அறைக்குள் வந்துவிட்டார். மரியாதைக்காகக் கை குலுக்குவதைக்கூட அவள் மறந்தாள். வயசானுலுங்கூட, காதலில் உள்ள பரபரப்பும் அஜாக்கிரதையும் ஒருபோதும் குறைவதில்லை. நாணத்தோடு நிற்கும் இள நங்கையைப்போல, அவள் தலை குனிந்துகொண்டாள்.

ஜமீன்தார் அவளுடைய அழகிய கழுத்தையும், அங்கே மிளிரும் - தாம் பரிசளித்த - முத்துமாலையையும் கண்டார். தம் ஜன்மத்தில் அவர் எப்போதும் இவ்வளவு ஆனந்தம் அடைந்ததில்லை; தம் வாழ்க்கை லக்ஷ்யம் முற்றும் நிறைவேறிவிட்டதாக அந்தக் கணத்தில் அவருக்குத் தோற்றியது.

"இந்த நேரத்தில் நான் வீணுக உங்களைக் கஷ்டப்படுத்துகிறேன்; மன்னிக்கவேண்டும். நீங்கள் இளைப்பாறும் நேரம் இது" என்ருர் ஜமீன்தார்.

தாரா தலையிலிருந்து நழுவிய முன்றானையை நேர் செய்து கொண்டே, "தங்களைக் கண்டதைவிட வேறு ஆனந்தம் எனக்கு என்ன இருக்கிறது? தாங்கள் அளித்த பரிசுக்கு நன்றி. இனி எப்போதாவது ஒரு சமயம் தங்கள் பேட்டி கிடைக்கும் அல்லவா?" என்றாள்.

நிர்மலகாந்தர் நகைத்தவண்ணம், "எப்போதாவது ஒரு சமயமா? தினந்தோறும் வருவேன். உங்களுக்கு ஒருவேளை என்னைப் பார்க்க இஷ்டம் இல்லாமல் இருக்கலாம்; ஆனால் நான் நாள் தவறாமல் ஒரு தடவையாவது இங்கே வந்து தலைவணங்கி விட்டுத்தான் போவேன்" என்றார்.

"மனத்தைக் களிப்பிக்கும் மற்றொரு பொருள் கண்ணுக்குத் தென்படாத வரையில், வந்துகொண்டிருப்பீர்கள். அப்படித் தானே?" என்று தாராவும் நகைத்தவாறே கேட்டாள்.

"என்னைப் பொறுத்தவரையில் இது பொழுது போக்குக்கான விஷயம் அல்ல; என் வாழ்வும் சாவும் இந்தப் பிரச்னையில் அடங்கி யுள்ளன. நீ இதை விளையாட்டென்று நினைக்கலாம்; ஆனாலும் பரவாயில்லை. உன் மனக் களிப்புக்காக என் உயிரையே உதவக் கூடுமானால், என் வாழ்க்கை பயன்பெற்றது என்று நினைப்பேன்" என்றார் ஜமீன்தார்.

இந்தக் காதலை நிலை நிறுத்தும் பொருட்டு இருவரும் பிரதிக்கினை செய்துகொண்டார்கள். சிற்றுண்டி ஆயிற்று; மறு நாள் சாப்பாட்டுக்கு வருவதாகக் கூறி, ஜமீன்தார் விடைபெற்றுச் சென்றார்.

4

ஒரு மாதம் கடந்தது. ஜமீன்தார் ஒரு நாளைக்குப் பல தடவை வருவார். கணப்பொழுதுகூட அவளைப் பிரிந்திருக்க அவரால் முடியவில்லை. சில சமயம் அவர்கள் இருவரும் ஆற்றில் உல்லாசப் படகில் உலாவுவார்கள்; சில சமயம் பூங்காவில் பசும் புல்லுத் தரையில் அமர்ந்து மணிக் கணக்காகப் பேசிக்கொண் டிருப்பார்கள்; சில சமயங்களில் ஆடலும் பாடலுமாக இருக்கும். நாள்தோறும் புதிய புதிய காரியத் திட்டங்கள் வகுப்பார்கள். தாரா ஜமீன்தாரை வசப்படுத்திப் பணமாகவே குவித்துக்கொண் டிருக்கிறாள் என்று ஊர் முழுவதும் பேச்சு. ஆனால், அவளுக்கு வாஸ்தவத்தில் ஜமீன்தாரின் காதல்தான் அபாரமான சம்பத்தாக இருந்தது; அதன்முன்பு உலகத்து ஐசுவரியங்கள் யாவும் அவளுக்குத் துச்சமென்று தோற்றின. அவரைப் பெற்று அவள் யாதும் குறையற்றவள் ஆனாள்.

ஆனால், ஒரு மாதகாலம் இந்தக் காதற் சிந்தையில் சுழன்றுங் கூட, தாராவுக்கு அவள் மனப்பூர்வமாக விரும்பிய பொருள் கிடைக்கவில்லை. அவள் தினந்தோறும் ஜமீன்தாருடைய காதற் பேச்சுக்களைக்கேட்டுவந்தாள்; அந்தக் காதல்தான் எத்தகையது! வரம்பற்ற, ஒப்பற்ற காதல்; களங்கமற்ற காதல்! ஆயினும், அந்தப் பேச்சுக்களில் 'திருமணம்' என்ற சொல் தவறியும் வரவில்லை.

தாகம் உள்ளவனுக்குக் கடைத்தெருவில் தண்ணீர் தவிர மற்ற எல்லாப் பொருள்களும் கிடைப்பதால் என்ன பிரயோஜனம்? தண்ணீரைத் தவிர வேறு எந்தப் பொருளால்தான் அவனுக்குத் திருப்தி உண்டாகும்? தாகம் தணிந்தபின்பு ஒருவேளை மற்றப் பொருள்களை அவன் விரும்பக்கூடும். ஆனால், வேட்கையுற்ற வனுக்கு, எல்லாவற்றிலும் மதிப்பு மிக்க பொருள் தண்ணீர் தானே!

ஜமீன்தார் தனக்காக உயிரையும் கொடுப்பார் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால், 'விவாகம்' என்ற வார்த்தையே ஏன் அவர் வாயிலிருந்து வருவதில்லை? வாயால் சொல்லக் கூச்சமாக இருந்தால், தமது கருத்தை ஒரு கடிதத்தில் எழுதி, அவளுக்குத் தெரிவித்திருக்கலாமே! அப்படியானால், அவளை ஒரு விளையாட்டுப் பண்டமாக வைத்துக் கொள்வதுதான் அவருடைய கருத்தா? சே! இந்த அவமானத்தை அவள் பொறுக்கமாட்டாள். அவர் உத்தரவிட்டால் அவள் நெருப்பில் குதிக்கவும் தயார்; ஆனால் இவ்வித அவமானத்தை அவள் சகிக்க மாட்டாள். அவள் இஷ்டப்பட்டிருந்தால் இதற்கு முன்பே எவனாவது ஒரு மைனர் பணக்காரனோடு நாலாறு மாசம் இருந்து, அவனைப் பிய்த்தெடுத்து லட்சக்கணக்காகப் பணத்தை மூட்டை கட்டியிருக்கலாமே! அதெல்லாம் முடியாது. அவளுடைய காதலுக்குப் பதிலாகக் காதல்தான் வேண்டும். ஜமீன்தாரோடு அவள் இத்தகைய வெட்கங்கெட்ட வாழ்க்கையை நடத்த முடியாது.

இளைய ஜமீன்தாரின் உறவினர்களும் அப்படி ஒன்றும் அஜாக்கிரதையாக இருந்துவிடவில்லை. எவ்விதத்திலாயினும் தாராவின் பிடியிலிருந்து அவரைத் தப்புவிக்க முயன்றார்கள். அவருக்கு விவாகம் முடித்துவிடுவதுதானே வெற்றிகரமான உபாயம்? அதைத்தான் அவர்கள் செய்தார்கள்.

ஜமீன்தார் இந்த நாடக ராணியை மணந்துகொள்வாரோ என்ற பயம் அவர்களுக்கு இல்லை; ஸம்ஸ்தானத்தில் ஒரு பகுதியை இவளுக்கோ அல்லது இவளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கோ

தத்தம் செய்துவிட்டால் ஆபத்தாயிற்றே என்றுதான் அவர்கள் பயந்தனர். நாலு பக்கமுமாக அவர்கள் ஜமீன்தாரை நெருக்கினர்கள். ஐரோப்பிய அதிகாரிகள்கூட, அவர் விவாகம் செய்து கொள்ளத்தான் வேண்டும் என்று ஆலோசனை கூறினர்கள்.

அன்று மாலையில் ஜமீன்தார் தாராவிடம் சென்று, "இதைக் கேள், தாரா; உன்னிடம் ஒரு விஷயம் சொல்கிறேன். நீ மறுக்கக் கூடாது" என்றார்.

தாராவின் உள்ளம் பொங்கியது. "என்ன விஷயம் சொல்லுங்களேன்? தங்களுக்காக எதை வேண்டுமாயினும் கொடுத்து, என்னைப் பாக்கியவதியாகக் கருதுவேன்" என்றாள்.

அவர் அந்த வார்த்தையைச் சொன்னதுதான் தாமதம்; தாரா உடனே அதற்கு ஒப்புக்கொண்டாள். ஆனந்தம் பெருகியோடும் நிலையில் அழுதுகொண்டே அவருடைய அடிகளில் பணிந்தாள்.

5

சற்று நேரம் கழித்து, "எனக்கு நம்பிக்கையே போய் விட்டிருந்தது. நீங்கள் வெகுகாலம் என்னைப் பரீக்ஷை செய்து விட்டீர்கள்!" என்றாள் தாரா.

கேட்கத் தகாத பேச்சைக்கேட்டுவிட்டவர்போல, ஜமீன்தார் உதட்டைக் கடித்துக்கொண்டார். "அப்படியல்ல, தாரா. நீ என் கோரிக்கையை ஏற்றுக் கொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு இருந்திருந்தால், முதல் நாளே நான் உன்முன்பு காதற் பிச்சைக்காகக் கை நீட்டியிருப்பேன். ஆனால் நான் உனக்கு ஏற்றவனல்ல என்று நினைத்தேன். நீ நற்குணக் கனி; நானோ.... நான் எப்படிப்பட்டவன் என்பதுதான் உனக்குத் தெரியுமே! வாழ்நாள் முழுவதும் உன்னை வழிபடுவதென்று தீர்மானித்தேன். ஒருகால் நீயே பிரசன்னமாகி, நான் கேட்காமலே எனக்கு வரம் அளிக்கக்கூடும் என்று நினைத்தேன். நான் உன்னைக் காதலிக் கிறேனே, இது ஒன்றுதான் என்னிடம் உள்ள குணம். இலக்கியம், சங்கீதம், மதம் ஆகிய விஷயங்களைப்பற்றிய உன் கருத்துக்களைக் கேட்கும்போது நான் திகைத்துப் போகிறேன்; என் அறியாமையைக் கண்டு வெட்கப்படுகிறேன். என்னுடைய நோக்கத்தில், நீ இந்த உலகத்துப் பொருள் அல்ல; தெய்விக நங்கை. இந்த நிமிஷத்தில் எனக்கு ஏன் சந்தோஷத்தால் பைத்தியம் பிடிக்கவில்லை என்று ஆச்சரியமாக இருக்கிறது" என்றார்.

ஜமீன்தார் பிறகு வெகுநேரம் வரையில் தம் மனத்தில் இருந்ததைப் பேசிக்கொண்டிருந்தார். இத்தனை வேகமாக அவர் என்றுமே பேசியதில்லை.

தாரா தலை குனிந்து கேட்டுக்கொண் டிருந்தாள். அவள் முகத்தில் மகிழ்ச்சிக்குப் பதிலாக, வெட்கம் கலந்த வருத்தமே தோற்றியது. 'இவர் இவ்வளவு நேர்மையான உள்ளம் படைத்திருக்கிறாரே ; கபடம் என்பது லவலேசமும் இல்லையே ! என்ன வணக்கம் ! என்ன பெருந்தன்மை !' என்று அவள் நினைத்தாள்.

"அப்படியானால், என் பாக்கியம் என்று உதயமாகும், தாரா ? தயை செய் ; வெகு நாளைக்கு ஒத்திப் போட்டுவிடாதே" என்றார் ஜமீன்தார்.

தாரா அவருடைய நீர்மையைக் கண்டு இரங்கி, ஏதோ சிந்தித்தவளாய், "சட்டம் ஒன்று இருக்கிறதே; அதற்கு என்ன செய்வீர்கள் ?" என்றாள்.

ஜமீன்தார் பளிச்சென்று, "அதைப்பற்றி உனக்குக் கவலையே வேண்டாம், தாரா ! வக்கீல்களையெல்லாம் கேட்டாயிற்று. உன்னையும் என்னையும் காதற்பிணையில் கட்டுப்படுத்தும் சட்டமொன்று இருக்கிறது. அதற்கு 'ஸிவில் மாரிஜ்' என்று பெயர். ஏன், நாளை கழித்து மறுநாள் காலையே அந்தச் சுப முகூர்த்தம் வந்துவிடட்டுமே ; என்ன சொல்கிறாய் ?" என்றார்.

தாரா தலை குனிந்து நின்றாள். ஒன்றுமே பேசவில்லை.

"நான் காலையில் வருவேன். தயாராக இரு."

தாரா அப்படியே நின்றாள். அவள் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை.

ஜமீன்தார் போய்விட்டார்; ஆனால் தாரா அங்கேயே, சிலையைப்போல, நின்றாள். ஆண்களின் உள்ளத்தோடு அம்மானை ஆடுவதில் வல்லவளான அந்தக் காரிகை, இன்று ஏனோ இப்படிப் பேச்சற்று நிற்கிறாளே !

6

விவாகத்துக்கு இன்னும் ஒரே நாள்தான் பாக்கி. நாலு பக்கங்களிலிருந்தும் தாராவுக்கு வாழ்த்துச் செய்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. நாடகம் பார்க்க வரும் பொதுமக்கள் யாவரும் அவரவர் சக்திக்கு ஏற்ப, அவளுக்கு நல்ல நல்ல பரிசுகள் அனுப்பியிருக்கிறார்கள். ஜமீன்தார் ஆபரணங்கள் நிறைந்த ஒரு நகைப்பெட்டியை அவளுக்கு அன்பளிப்பாக அனுப்பியிருக்கிறார். அவருடைய அந்தரங்க நண்பர்கள் சிலர் அருமையான அணிகலன்களை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் தாராவின் எழில் வதனத்தில் துளியும் மகிழ்ச்சி இல்லை. அவள் சோர்வுற்று, ஏதோ துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறாள்.

வெகு நேரமாக அவள் மனத்தில் பல கேள்விகள் கிளம்பிய வண்ணமாக இருக்கின்றன. 'ஜமீன்தாரிடம் நான் நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா? எனக்காகத் தம் குல வழக்கத்தைத் துறந்து, உறவினர்களுடைய சம்பந்தத்தை விட்டொழித்து, பனித் துளியைப்போல மாசற்றும், மலையைப்போலப் பரந்த நோக்கமும் உள்ள அந்தக் காதல் தெய்வத்தையா நான் வஞ்சிப்பது? மாட்டேன்; அவ்வளவு இழிதொழிலை நான் செய்ய முடியாது. என் வாழ்க்கையில் எத்தனையோ இளைஞர்களைக் காதலிப்பதாக நான் பாசாங்கு செய்தேன்; காதற் பித்துப் பிடித்து அலையும் பலருக்குப் பசுஞ்சோலையைக் காட்டி ஏமாற்றினேன். ஆனால், இம்மாதிரியான தர்ம சங்கடம் எப்போதுமே என் மனத்தில் உண்டானதில்லை; இவ்விதமாக என் உள்ளம் என்னை வெறுத்த தில்லை. இத்தகைய அன்பு எனக்கு வேறு எங்கும் கிடைக்கவில்லை என்பதைத் தவிர, இதற்கு வேறு காரணம் இல்லையே!

'ஜமீன்தாரின் வாழ்க்கையை இன்பமயமாக்க என்னால் முடியுமா? ஆம்; கட்டாயம் முடியும். இந்த விஷயத்தில் எனக்குத் துளியும் சந்தேகம் இல்லை. பக்தியினால் அசாத்தியமான காரியமும் உண்டோ? ஆனால் இயற்கையை யாரும் ஏமாற்ற முடியாதே? அஸ்தமனமாகும் சூரியனிடத்தில் நடுப்பகலைப் போன்ற ஒளி இருக்குமா? அது அசம்பாவிதம். சுறுசுறுப்பு, சஞ்சலத் தன்மை, வேடிக்கை, நேர்மையான வடிவம், ஊக்கம், தியாகம், தன்னம்பிக்கை - ஆகிய யாவும் கலந்த ஒரு பொருளை - இளமையை – நான் எங்கிருந்து கொண்டுவருவது? நான் எவ்வளவுதான் விரும்பினாலுங்கூட, ஜமீன்தாரின் வாழ்க்கையை என்னால் இன்பமயமாக்க முடியாது. கிழட்டு மாட்டையும் காளையையும் ஒரு வண்டியில் பிணைத்தால், அது சரிப்பட்டு வராதே!

'ஐயோ! நான் ஏன் இவ்வளவு தூரம் இந்த விஷயத்தை முற்றவிட்டேன்? செயற்கை அலங்காரங்களினாலும், போலிச் சாதனங்களினாலும் அவரை ஏன் ஏமாற்றினேன்? இவ்வளவு தூரம் செய்தான பின்பு, "நான் நிறம் தீட்டிய பொம்மை; இளமை என்னை விட்டுப் போய் எக்காலமோ ஆகிவிட்டது; இப்போது அதன் சுவடுதான் மிச்சம் இருக்கிறது" என்று, எந்த மூஞ்சியைக்கொண்டு அவரிடம் சொல்வது?' என்றெல்லாம் அவள் யோசிக்கலானாள்.

இரவு மணி பன்னிரண்டு அடித்தது. தாரா மேஜைக்கு முன்னால், சிந்தையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தாள். மேஜைமீது பரிசுகளின் குவியல் கிடந்தது. அவள் எதையும் கண்ணெடுத்துப்

பார்க்கவில்லை. நேற்றுவரையில் அவளுக்கு இந்த அலங்காரப் பொருள்கள் உயிராக இருந்தன. காலத்தின் சுவடுகளை அழித்து, மினுமினுக்கும் தன் இளமை விளக்கை எரியச் செய்யும் பொருள்களையே அவள் எப்போதும் விரும்பித் தேடிவந்தாள். ஆனால், இன்று அந்தப் பொருள்களைக் காண்பதே அவளுக்கு வெறுப்பாக இருந்தது. காதல் என்பது உண்மை; உண்மையும் பொய்யும் ஒன்ருக ஒரே இடத்தில் வாழ முடியாது.

'இங்கிருந்து ஓடிப்போய்விட்டால் என்ன? எங்காவது கண்காணுத இடத்துக்குப் போய்விடுவேன். ஜமீன்தாருக்கு விவாகமானதும், திரும்பி அவரிடம் வந்து என் வரலாறு முழுவதையும் சொல்வேன். நான் போய்விட்ட செய்தியைக் கேட்டதுமே அவருக்கு இடி விழுந்தாற்போலத்தான் இருக்கும். ஐயோ! அவர் நிலைமை அப்போது என்ன ஆகுமோ! ஆனால், எனக்கு இதைத் தவிர வேறு வழி இல்லை. இனி அழுது அழுது என் வாழ்க்கையைக் கழிப்பேன்; நான் எவ்வளவு துன்புற்ருலும் என்காதலனை வஞ்சிக்க மாட்டேன். இந்தத் தெய்விகக் காதலின் நினைவு, இந்த வேதனை — இது ஒன்றே எனக்குப் போதும். இதைவிட அதிகமாகப் பெற எனக்கு உரிமை இல்லை' என்று தாரா நினைத்தாள்.

''அம்மா, சாப்பாடு ஆறிப்போகிறதே; மணி பன்னிரண்டு ஆயிற்று. பசித்த வரையில் கொஞ்சம் சாப்பிடுங்கள்'' என்ருள் பணிப் பெண்.

''வேண்டாம்; எனக்குக் கொஞ்சமும் பசியே இல்லை. நீ போய்ச் சாப்பிடு'' என்ருள் தாரா.

''அம்மா, என்னை மறந்துவிடாதீர்கள். நானும் உங்களோடு வருவேன்.''

''நல்ல நல்ல ஆடையாபரணங்கள் தயார்ப்படுத்தி வைத் திருக்கிருயா?''

''எனக்கு நல்ல ஆடை எதற்கு, ஆபரணம் எதற்கு, அம்மா! உங்களுடைய பழந்துணி எதையாவது கொடுங்கள். அது போதும்'' என்று கூறி, பணிப்பெண் போய்விட்டாள்.

தாரா கடிகாரத்தைப் பார்த்தாள். மணி பன்னிரண்டுக்கு மேல் ஆயிற்று. இன்னும் ஆறு மணி நேரம் பாக்கி. பொழுது விடிந்ததும், ஜமீன்தார் அவளை விவாக மண்டபத்துக்கு அழைத்துச் செல்ல வந்துவிடுவார். ஐயோ கடவுளே! இத்தனை நாளாக எந்தப் பொருளைக் கொடுக்காமல் அவளை வஞ்சித்து வைத்தாயோ அதை ஏன் இன்று திடீரென்று அவள்முன் கொணர்ந்து வைத்தாய்? இதுவும் உன் லீலை போலும்!

தாரா ஒரு வெள்ளைச் சேலையை அணிந்துகொண்டாள். அணிகலன்கள் யாவற்றையும் கழற்றி வைத்தாள். வெந்நீர் தயாராக இருந்தது. சோப்புத் தேய்த்து முகத்தைக் கழுவிக் கொண்டாள். நிலைக்கண்ணாடியின்முன் போய் நின்றாள். கண்களை மயக்கிய அந்தத் தளதளப்பு எங்கே, காந்தி எங்கே! அதே உருவந் தான் இதுவும்; ஆனால் அந்தக் காந்தி இல்லையே! இனி அவள் இளமையைத் தாங்குவதாகப் பாசாங்கு செய்ய முடியுமா?

இனிமேல் அங்கே ஒரு கணம் தங்குவதுகூட அவளுக்குப் பெரும்பாரமாக இருந்தது. மேஜைமீது குவிந்துகிடந்த ஆபரணங் களும் அலங்காரப் பொருள்களும் அவளை விழுங்குவனபோலத் தோற்றின. அந்தச் செயற்கை வாழ்க்கை அவளுக்குச் சகிக்க வில்லை. வெட்டிவேர்த் தட்டிகளாலும், மின்சார விசிறிகளாலும் 'ஜில்'லென்று இருந்த அந்த மாளிகை அவளுக்கு எரிதழலாகத் தோற்றியது.

'எங்கே ஓடிப்போவது? ரெயில் மார்க்கமாகப் போனால், காலையில் ஜமீன்தாரின் ஆட்கள் நாலுபுறமும் ஓடித் திரிந்து என்னைக் கண்டுபிடித்துவிடுவார்களே? யாரும் நினைக்கவே முடியாத வழியே போய்விடவேண்டும்' என்று அவள் கருதினாள்.

தாராவின் உள்ளத்தில் பெருமிதம் ததும்பிக்கொண்டிருந்தது. அவளுக்குச் சற்றேனும் துன்பம் இல்லை; ஆசாபங்கம் இல்லை. அவள் மீண்டும் ஜமீன்தாரைச் சந்திப்பாள்; ஆனால் அது தன்னலம் இல்லாத சந்திப்பாக இருக்கும். காதல் காட்டிய கடமைப் பாதையில் அவள் போகிறாள். அவளுக்குத் துன்பம் ஏது? ஆசாபங்கந்தான் ஏது?

திடீரென்று அவளுக்கு ஒரு நினைவு வந்தது. 'என்னைக் காணாமல், ஜமீன்தார் மிகவும் துன்பப்பட்டுத் தம் உயிருக்கே ஆபத்தைத் தேடிக்கொண்டால் என்ன செய்வது?' என்று நினைத்தபோதே அவளுக்கு மெய் சிலிர்த்தது. ஒரு கணம் அவள் மனம் நடுங்கியது. அவள் மீண்டும் மேஜையருகில் உட்கார்ந்து, இந்தக் கடிதத்தை எழுத ஆரம்பித்தாள்:

காதல,

என்னை மன்னிக்கவேண்டும். நான் தங்களுக்கு அடி யாளாக இருக்க ஏற்றவள் அல்ல. இந்த வாழ்க்கையில் நான் எதிர்பார்க்கவே முடியாத காதலின் உருவத்தைத் தாங்கள் எனக்குக் காட்டினீர்கள். இது ஒன்றே எனக்குப் போதும். நான் வாழும்வரையில் தங்கள் காதலில் மூழ்கியிருப்பேன். காதல் நினைவிலே, காதல் நுகர்ச்சியைவிட அதிகமான இனிமையும் இன்பமும் உள்ளன என்று எனக்குத் தெரிகிறது. நான் மீண்டும் வருவேன்; மீண்டும் தங்களைக் காண்பேன்; ஆனால்,

அந்த நிலையில் தாங்கள் விவாகம் செய்துகொண்டிருப்பீர்கள். நான் திரும்பி வருவதற்கு இதுதான் நிபந்தனை.

என் உயிருக்கு உயிரே, என்மீது கோபம் கொள்ள வேண்டாம். எனக்காகத் தாங்கள் அனுப்பிய இந்த அணிகலன்களை, என் சார்பாக மணப்பெண்ணுக்கு அளித்துச் செல்கிறேன். தாங்கள் காதற் பரிசாக முதல் முதலில் கொடுத்த முத்துமாலையை மட்டும் என்னோடு எடுத்துக்கொண்டு போகிறேன். தங்களிடம் கை கூப்பிச் சொல்கிறேன்: என்னைத் தேடவேண்டாம். நான் தங்களுடையவள்; என்றும் தங்களுடையவளாகவே இருப்பேன்......

தங்கள்,

தாரா.

இந்தக் கடிதத்தைத் தாரா மேஜைமேல் வைத்தாள்; முத்துமாலையைக் கழுத்தில் அணிந்துகொண்டு வெளியே வந்தாள். நாடகமேடையிலிருந்து சங்கீதத்தின் இன்னிசை மிதந்து வந்துகொண்டிருந்தது. கணப் பொழுது, அவள் கால்கள் நிலைத்து நின்றன. பதினைந்து வருஷத்துப் பழைய சம்பந்தத்தை இன்று அவள் படீரென்று அறுக்கப் போகிறாள். எதிரே மானேஜர் வருவதை அவள் கண்டாள். அவள் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது. வேகமாகத் தாவி, சுவர் மறைவில் ஒளிந்துகொண்டாள். மானேஜர் போய்விட்ட பின்பு, அவள் அந்தக் கட்டிட எல்லையைக் கடந்து வெளியே வந்தாள். தெருக்களின் வழியே சிறிது தூரம் சென்று, கங்கையை நோக்கிச் செல்லும் பாதையில் நடந்தாள்.

கங்கைக் கரையில் எங்கும் ஒரே அமைதியாக இருந்தது. ஏழெட்டுப் பைராகிகள் கணப்புகளின் அருகே படுத்திருந்தார்கள். ஏழெட்டு யாத்திரிகர்கள் தரையில் கம்பளத்தை விரித்துப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தனர். நீண்ட சர்ப்பத்தைப் போல் கங்கை ஊர்ந்துகொண்டிருந்தது. கரையில் சிறிய படகு ஒன்று மிதந்துகொண்டிருந்தது. படகோட்டி அதில் உட்கார்ந்திருந்தான்.

"என்ன அப்பா, அக்கரைக்குப் படகு விடுவாயா?" என்று தாரா அவனைக் கேட்டாள்.

"இரவு இவ்வளவு நேரம் கழித்துப் படகு போகாதே, அம்மா!" என்றான் அவன்.

இரட்டிப்புக் கூலி கொடுப்பதாகச் சொன்னதும், அவன் துடுப்பை எடுத்தான்; படகை அவிழ்த்துக்கொண்டே, "அக்கரையில் எங்கே போகவேண்டும், அம்மா?" என்று கேட்டான்.

"அக்கரையில் உள்ள ஒரு கிராமத்துக்குப் போகவேண்டும்."

"இந்த நிசி வேளையில் வண்டித் துணை எதுவும் கிடைக்காதே, அம்மா !"

"பரவாயில்லை; நீ என்னை அக்கரைக்குக் கொண்டு விட்டுவிடு."

அவன் படகை அவிழ்த்துவிட்டான். தாரா அதில் உட்கார்ந்தாள். கனவு லோகத்தில் மண்டலமிடும் ஜீவனைப்போல, படகு மெதுவாக நகர்ந்து சென்றது.

அதே சமயத்தில் ஏகாதசிச் சந்திரனும், பூமிக்கு அக்கரையிலிருந்து தன்னுடைய பளபளக்கும் படகைச் செலுத்திக் கொண்டே, வானக் கடலைக் கடக்க ஆரம்பித்தான்.

21 NOV 1944
MADRAS

ரகசியம்

1

விமலன் ஸேவாசிரமத்தின் வாசலில் வந்ததும், சட்டையிலிருந்து கைக்குட்டையை எடுத்து, தலையிற் படிந்திருந்த தூசியைத் துடைத்தான்; பிறகு அதைக்கொண்டே செருப்பிலிருந்த புழுதியைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான். தினமும் காலையில் உலாவிவிட்டு வரும்போது, அவன் ஸேவாசிரமத்தை ஒருமுறை மேலாகப் பார்ப்பது வழக்கம். அவன்தான் இந்த ஆசிரமத்தை ஏற்படுத்தியவன்; நடத்துபவனுங்கூட.

அப்போது ஆசிரமத்து வேலை தொடங்கிவிட்டது. உபாத்தியாயினிகள் பெண் குழந்தைகளுக்குப் பாடம் கற்பித்துக்கொண்டிருந்தனர். தோட்டக்காரன் பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக்கொண்டிருந்தான். ஏதோ ஒரு வகுப்புப் பெண்கள் பசுமையான புல்லுத் தரையில் ஓடி விளையாடிக்கொண்டிருந்தனர். பெண் குழந்தைகளின் ஆரோக்கிய விஷயத்தில் விமலனுக்கு எப்போதும் கவனம் அதிகம்.

விமலன் ஒரு நிமிஷம் அங்கே நின்று மனப் பூரிப்போடு அந்தக் குழந்தைகளின் விளையாட்டுக்களைப் பார்த்துவிட்டு, காரியாலயத்தில் வந்து உட்கார்ந்தான். முதல் நாள் வந்த தபால்களை, குமாஸ்தா அவன் முன் வைத்தான். விமலன் எல்லாக் கடிதங்களையும் ஒவ்வொன்ருகப் பிரித்து மேலெழுந்த வாரியாகப் படித்துவிட்டு வைத்தான். கவலையினுலும் நிராசையினுலும் அவன் வதனம் மங்கியது. பணத்துக்காக அவன் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்த விண்ணப்பத்துக்கு ஒன்றும் பயனே ஏற்படவில்லை. 'இந்த ஸ்தாபனம் எப்படி நடக்கும்? ஜனங்கள் ஏன் இவ்வளவு கஞ்சத்தனம் செய்கிருர்கள்? இந்தப் பணிக்காக என் உடலையும் மனத்தையும் உரிமையாக்கி இருக்கிறேன். என்னிடம் இருந்த யாவற்றையும் இந்த ஆசிரமத்துக்குக் காணிக்கையாகக் கொடுத்தாயிற்று. ஜனங்கள் என்னிடமிருந்து இன்னும் என்ன எதிர்பார்க்கிருர்கள்? இன்னமும் நான் அவர்களுடைய இரக்கத்துக்கும் நம்பிக்கைக்கும் உரியவன் ஆகவில்லையா?' என்ற சிந்தையிலேயே மூழ்கியவனய், அவன் அங்கிருந்து எழுந்து வீட்டுக்கு வந்தான்.

மீண்டும் அவன் யோசிக்கலானுன் : 'இந்தச் சங்கடத்தை எப்படி நீக்குவது ? வருஷம் தொடங்கி இன்னும் ஆறு மாசங்கள் ஆகவில்லே. இதற்குள் ஆசிரமத்தின்பேரில் பன்னீராயிரம் ரூபாய் கடன். இந்த வருஷம் முடிவதற்குள் அது இருபதினுயிரத்துக்கு ஏறும். குழந்தைகளின் சம்பளத்தில் தலேக்கு ஒரு ரூபாய் ஏற்றினுல் ஐந்நூறு ரூபாய் வருமானம் வரலாம். ஹாஸ்டல் கட்டணத்தில் இரண்டு ரூபாய் உயர்த்தினுல், அது வேறு ஐந்நூறு ரூபாய் வரும். இப்படிச் செய்தால் ஆசிரமத்து வருமானம் வருஷத்துக்குப் பன்னீராயிரம் ரூபாய் அதிகமாகும். ஆனுல், ஏழைப் பெண் குழந்தைகளுக்கு வெறுமே பேருக்குக் கொஞ்சம் 'பீஸ்' வாங்கிக் கொண்டு உயர்ந்த கல்விப் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற என்னுடைய லக்ஷ்யம் அப்போது எதற்குப் பிரயோஜனம் ? சோற்றுத் துணிக்குப் போதுமான சம்பளத்துக்கு, வேலே செய்ய இசையும் உபாத்தியாயினிகள் ஓரளவுக்குக் கிடைத்தார்களானுல் எவ்வளவோ நல்லதாயிற்றே ! இவ்வளவு பெரிய தேசத்தில் இத்தகைய பெண்மணிகள் பத்துப் பதினேந்து பேர்கள்கூடவா இருக்கமாட்டார்கள் ? எத்தனேயோ பத்திரிகைகளில் 'தேவை' விளம்பரம் கொடுத்தும், இன்று வரையில் யாரும் பதிலே எழுதவில்லேயே ? இனி, 'பீஸை' உயர்த்துவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது ?'

இப்படி அவன் யோசித்துக்கொண் டிருக்கையில் வாசலில் ஒரு ஜட்காவண்டி வந்து நின்றது. அதிலிருந்து ஒரு பெண்மணி இறங்கி உள்ளே வந்தாள். விமலன் அறையிலிருந்து வெளியே வந்து அவளே வரவேற்று, அறைக்குள் அழைத்துப்போய் நாற்காலியில் உட்கார வைத்தான். அவள் அழகியல்ல என்ருலும், முகத்தில் சான்ருண்மையின் ஒளியும் உயர் குலப் பிறப்பின் மேன்மையும் பொலிவுற்றன. சாதாரண உயரம் ; மென்மையான தேகம் ; சண்பக நிறம் ; மலர்ந்த முகம்; அழகிய அலங்காரம்; ஆனுல் அந்தச் செயற்கை யலங்காரத்திலும் எளிமையின் தோற்றம் ! ஸேவாசிரமம் ஆரம்பித்ததிலிருந்து உயர்குலப் பெண்மணிகள் அடிக்கடி அவனேப் பார்க்க வருவது வழக்கந்தான்.

அந்தப் பெண்மணி நாற்காலியில் உட்கார்ந்துகொண்டே, "முதலில் என் பெயரைச் சொல்லிவிடுகிறேன். என் பெயர் மஞ்சுளா. சில நாளேக்குமுன் 'லீடரி'ல் தங்கள் விளம்பரத்தைப் பார்த்தேன். அதற்காகத்தான் தங்களிடம் வந்திருக்கிறேன். தங்களேப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு வெகு நாளாகவே உண்டு ; ஆனுல் ஒழிவே இல்லே; அதோடு தங்களுடைய நல்ல பொழுதை வீணுக்க விரும்பவில்லே. பெண்களின் தொண்டில் தங்களுக்கு உள்ள ஈடுபாடும் தியாகமும் என்

மனத்தில் பெரும் சிரத்தையைத் தோற்றுவித்திருக்கின்றன. அதை நான் வெளியிட்டால், அது ஒருவேளை தங்களுக்கு ஸ்தோத்திரமாகத் தோற்றும். இவ்விதத் தொண்டு புரியவேண்டும் என்ற ஆசை எனக்கும் வெகு நாளாய் உண்டு; ஆனால் நான் நினைக்கும் அளவுக்கு என்னால் செய்ய முடியவில்லை. தங்கள் தூண்டுதலால் நானும் ஏதாவது செய்வது சாத்தியமாகக் கூடும்'' என்றாள்.

விமலன் அமைதியாகத் தொண்டு செய்யும் வர்க்கத்தைச் சேர்ந்தவன். தன் புகழைக் கேட்பது அவனுக்கு மிகவும் கடுமையான பரீக்ஷை. அப்போது அவனுடைய நிலை, தண்ணீரில் மூழ்கித் தவிப்பவனுடைய நிலையை ஒத்திருக்கும். அவனும் யாரையும் அவர்கள் எதிரில் புகழமாட்டான். ஆகையால் புகழாசை பிடித்தவர்கள் அவனைக் குறுகிய மனப்பான்மையுள்ளவன் என்று நினைத்தார்கள். மறைவில் அவன் எல்லோரையும் புகழுவான். ஆனால் ஒன்று: யார் எதிரிலும் அவர்களுடைய தோஷங்களைப்பற்றிச் சொல்லிவிடுவான். பிறரிடமும் அவன் இதைத்தான் எதிர்பார்த்தான்.

ஆடிக்கொண் டிருந்த தன் காலை அவன் பூமியில் பதிய வைத்துக்கொண்டே, ''ரொம்பவும் நல்லதாயிற்று. நீங்கள் ஆனந்தமாக வரலாம். ஸேவாசிரமத்தின் பொருளாதார நிலைமை உங்களுக்குத் தெரிந்திருக்குமே?'' என்றான்.

''நான் அந்த எண்ணத்தோடு இங்கே வரவில்லை.''

''எனக்கு அது முன்னமே தெரியும்; ஆனாலும் நம்பிக்கை ஏற்படவில்லை. அதனால்தான் கேட்டேன். சரி, உங்கள் ஊர் இதுதானா?''

மஞ்சுளாவின் சொந்த ஊர் லக்னௌ. அவள் ஜாலந்தர் பெண் பாடசாலையில் படித்தவள். ஆங்கிலத்தில் நல்ல பயிற்சி. வீட்டு வேலைகளிலும் தேர்ந்தவள். எல்லாவற்றிலும் பெரிய விஷயம், அவள் உள்ளத்தில் ததும்பிக்கொண்டிருந்த தொண்டு செய்யவேண்டுமென்ற ஊக்கம். இத்தகைய பெண்மணி ஸேவாசிரமத்தின் பாரத்தைத் தன்மீது ஏற்றுக்கொள்ள முன் வரும்போது, கேட்கவும் வேண்டுமா?

ஆனால், விமலனுடைய மனத்தில் ஒரு கேள்வி எழுந்தது. ''உங்கள் கணவரும் உங்களோடு கூடவே இருப்பாரா?'' என்று அவன் கேட்டான்.

சாதாரணக் கேள்விதான்; மஞ்சுளாவுக்கு அது அநாகரிகம் என்று பட்டது. ''இல்லை; அவர் லக்னௌவிலேயே இருப்பார். அவருக்கு ஒரு பாங்கில் வேலை. நல்ல சம்பளம்'' என்று அவள் பதில் சொன்னாள்.

விமலனுடைய மனத்தில் எழுந்த கேள்வி பின்னும் சிக்கலாகப் போயிற்று : 'நல்ல சம்பளம் வாங்கும் ஒருவனுடைய மனைவி அவனை விட்டுத் தான்மட்டும் தனியே காசியில் இருக்க விரும்புவானேன் ?'

"சரி !" என்றுதான் வாயிலிருந்து வந்தது.

மஞ்சுளா அவனுடைய மனப்போக்கை அறிந்தவள்போல, "தங்களுக்கு ஒருவேளை இது விசித்திரமாகத் தோன்றலாம் ; ஆனால், பெண் தன் கணவனுடைய கொடுக்கையே பிடித்துக் கொண்டிருப்பதுதான் கல்யாணத்தின் லக்ஷணம் என்று தாங்கள் கருதுகிறீர்களா ?" என்றாள்.

"நான் எந்தக் காலத்தும் அப்படி நினைக்கவில்லை" என்று ஆவேசத்தோடு சொன்னான் விமலன்.

"என் தேவைகளைக் குறைத்துப் பூஜ்யம் வரையில் என்னால் கொண்டு போக முடியுமென்றால், நான் ஏன் இன்னொருவருக்குப் பாரமாக இருக்க வேண்டும் ?"

"ரொம்ப சரி !"

"எங்கள் இருவரிடையே அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு எத்தனையோ காரணங்கள். பக்தியையும் வழிபாட்டையும் மனித வாழ்க்கையின் லக்ஷ்யங்களாக நான் கருதுகிறேன். 'இது மோசடி' என்கிறார் அவர். கடவுளிடத்தில் கூட அவருக்கு நம்பிக்கை இல்லை. இந்தியக் கலைப்பண்பை நான் மிகவும் உயர்வாக மதிக்கிறேன். அவருக்கு நம் கலைப் பண்பில் குற்றங்களே தென்படுகின்றன. இப்படிப்பட்டவரோடு எனக்கு எப்படிச் சரிப்படும் ?"

விமலன்கூட, பக்தியையும் வழிபாட்டையும் புரட்டென்று கருதுபவன்தான். இந்தச் சிறு விஷயத்துக்காக மனைவி கணவனை விட்டுப் பிரிவதை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை. கணவன்மார் வேறு மதத்தில் சேர்ந்த பின்பும், தம் விரதத்தை விடாமல் காத்த எத்தனையோ பெண்மணிகளைப்பற்றி அவனுக்குத் தெரியும். இந்தப் பிரச்னையின் லௌகிக அம்சத்தைத்தான் அவன் யோசித்தான். "நீங்கள் இங்கிருப்பதில் அவருக்கு எவ்வித ஆக்ஷேபமும் இராதே ?" என்று கேட்டான்.

"இவ்வித ஆக்ஷேபங்களை நான் சட்டையே செய்வதில்லை. ஆணுக்குச் சுதந்தரம் உண்டென்றால் பெண்ணுக்கும் உண்டு" என்று மஞ்சுளா கர்வத்தோடு சொன்னாள்.

பிறகு அவள் சற்றுத் தாழ்ந்து, பரிதாபமான குரலில், "நானும் அவரும் மூன்று வருஷங்களாகவே ஒதுங்கியிருக்கிறோம் என்று சொல்லவேண்டும். ஒரே வீட்டில் வசிக்கிறோம்; ஆனால் பேசுவதில்லை. அவர் நோய்வாய்ப் பட்டபோது நான் அவருக்குச்

சுச்ருஷைகள் செய்திருக்கிறேன். அவருக்குத் துன்பம் நேர்ந்த போதெல்லாம் உண்மையான அநுதாபத்தோடு நடந்துகொண்டிருக்கிறேன். ஆனால், நான் செத்தால்கூட அவருக்குத் துயரம் உண்டாகாது; 'இவ்வளவாவது பீடை விட்டுத் தொலைந்ததே!' என்று சந்தோஷப்படுவார். அவர் எனக்குச் சோறு போட்டுத் துணி வாங்கிக் கொடுக்கிறாரே என்றுதான்......'' என்னும்போது அவள் நெஞ்சம் தழுதழுத்தது.

கணப்பொழுது, அவள் பேசாமல் தரையை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். விமலன் தன்னை இழிவாகவும், தாழ்ந்தவளென்றும், தன் வாழ்க்கையில் உள்ள அந்தரங்க ரகசியங்களைப் பறையறைவிக்கும் இழுக்குள்ளவளென்றும் நினைத்துவிடுவானோ என்று அவள் பயந்தாள். அவன் மனத்திலிருந்து இந்தக் கலக்கத்தை நீக்குவது அவசியமாக இருந்தது. ஆகவே அவள் அவனிடம், ''இன்றுவரையில் யாரிடமும் நான் இதைச் சொன்னதில்லை. பெற்ற தாயிடங்கூட என் மனத்துயரை வெளியிட்டதில்லை. உண்மையாகக் கூறுகிறேன்: என் வாயால் இந்த விஷயத்தைக் கேட்ட முதல் ஆசாமி தாங்கள்தாம். இவ்வளவு தைரியத்தோடு நான் இதை வெளியிட்டதற்குக் காரணம், தாங்கள் ஈவிரக்கங் கொண்டவர்கள் என்பதையும், ஒரு பெண்ணின் போக்கிடமற்ற தன்மையைத் தெரிந்துகொள்ளும் இயல்பு வாய்ந்தவர்கள் என்பதையும் அறிந்திருந்ததேயாகும்'' என்றாள்.

விமலன் வெட்கமுற்று, ''நீங்கள் என்னைப்பற்றி இத்தனை மேன்மையாகக் கருதுவது உங்களுடைய அருள்'' என்றான்.

மஞ்சுளாவிடம் அவனுக்குச் சிரத்தை உதயமாயிற்று. கொள்கைக்காகத் துணிவு காட்டக்கூடிய ஒரு பெண்மணியை வெகு நாட்களுக்குப் பின்பு அவன் காண முடிந்தது. அவன் தன் மனத்துக்குள்ளேயே சமூகத்துக்கு எதிராகப் புரட்சி செய்து வந்தவன். ஸேவாசிரமங்கூட அவனுடைய மானஸிகப் புரட்சியின் பயன்தான். இத்தகைய பெண்மணியின் கையில் அவன் ஸேவாசிரமத்தை மிக்க மகிழ்ச்சியோடு ஒப்பிக்கமுடியும். மஞ்சுளா வீட்டிலிருந்து இதற்குத் தயாராகியே வந்திருந்தாள்.

2

மஞ்சுளாவின் வாழ்க்கையில் ஆத்ம சமர்ப்பணத்தின் தன்மை மிகுதியாக இருந்தது. இந்த உயரிய கருத்தை நிறைவேற்றுவதற்குரிய சாதனமாகவே அவள் உடலைக் கருதினாள். உலகத்தில் தலையாய எந்த ஐசுவரியமும் அவளுக்கு அமைதி அளிக்கவில்லை. மற்ற எல்லாப் பிராணிகளையும்போல அவரும் கேளிக்கைகளை விரும்புகிறார் என்ற ஒரே காரணத்தினால்தான்

மிஸ்டர் மெஹராவை அவள் வெறுத்தாள். 'ஆசாபாசங்களிலே மிதப்பதுதான் 'வாழ்க்கை' என்பது அவர் கொள்கை. தன் னலத்தை நிறைவேற்றுகையில் நீதியோ அல்லது மதமோ குறுக் கிடுவதை அவரால் பொறுக்க முடியாது. அவரிடத்தில் சிறிது தாராளத்தன்மை இருந்து, மஞ்சுளாவோடு அபிப்பிராய பேதம் கொண்டிருந்தும் அவளுடைய கருத்துக்களை அவர் ஆதரித்திருந் தாரானால் — அவ்வளவேன், வெறுமே வாய் வார்த்தைக்கு அவள் பக்கமாகப் பேசியிருந்தால்கூட - அவளுடைய வாழ்க்கை இன்ப மயமாக இருந்திருக்குமே! ஆனால், அந்த மகாபுருஷருக்குத் தம் மனைவியிடம் கொஞ்சமாவது அநுதாபம் இருந்தால்தானே! ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவள் வழிக்கு அவர் குறுக்கே நிற்பார். அவள் மனத்துக்குள்ளேயே குமுறிக் குமைவாள். கடைசியாக, அவளுடைய கருத்துக்கள் வளர்ச்சிக்கு மார்க்க மின்றி, கோணல் மாணலான வழிகளில் படரலாயின. இந்தக் குறையை அவள் கலையுருவாக அமைத்திருந்தாளாயின், அவ ளுடைய ஆத்மாவுக்கு அதில் அமைதி கிட்டியிருந்திருக்கும்; வாழ்க்கையில் கிடைக்காத பொருளைக் கலையில் பெற்று அவள் மகிழ்வுற்றிருக்கக்கூடும். ஆனால் அவளிடத்தில் கலாசிருஷ்டிக்குத் தேவையான கற்பனையும் திறனும் இல்லை. அவளுடைய ஆத்மா கூட்டில் அடைபட்ட பறவையைப்போல எப்போதும் தவிதவித் தது. வாழ்க்கையில் வெறுப்புற்று உட்கார்ந்துவிட முடியாதபடி, அவளுடைய அகம்பாவம் மூடிக்கிடந்தது. அவள் தன் சுய உருவைச் சுதந்தரமாகவும் தனியாகவும் வைத்துக்கொள்ள விரும்பினாள். தன்னிடத்திலும் ஏதோ ஒன்று இருக்கிறது என்று நினைப்பதில் அவளுக்குப் பெருமிதமும் உல்லாசமும் உண்டாயின. ஏதாவது ஒரு மரத்தைக் கொழுகொம்பாகப் பற்றி வாழும் கொடியல்ல அவள். அவளுக்குத் தனிப்பட்ட ஒரு வாழ்வு உண்டு; தனிப்பட்ட ஒரு வேலைத்திட்டம் உண்டு.

ஆனால், அவள் இந்த யதார்த்த உலகுக்கு வந்ததும், ஆத்ம சமர்ப்பணத்தைப்பற்றி, தான் அதுவரையில் உள்ளத்தில் நினைந்திருந்த கருத்து முற்றும் தவறானது என்பதை உணர்ந்து கொண்டாள். கொஞ்சம் முகஸ்துதி செய்தால் எவ்வளவோ உதவி செய்யக்கூடியவர்கள் அடிக்கடி ஸேவா சிரமத்துக்கு வந்துகொண்டுதான் இருந்தார்கள்; ஆனால் மஞ்சு ளாவின் தற்பெருமை, முகஸ்துதி செய்ய எவ்விதத்திலும் உடம் படவில்லை. அவர்களுடைய புகழ்மாலைகளைத் தாங்கும் வர வேற்புப் பத்திரங்களைப் படிப்பதென்ன, அவர்கள் மாளிகைக்குப் போய் ஸேவாசிரமத்தை மேற்பார்வையிடுமாறு அவர்களை வருந்தி அழைப்பதென்ன, ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போய் அவர்களை வரவேற்பதென்ன — இத்தகைய வேலைகளை அவள்

மனப்பூர்வமாக வெறுத்தாள். ஆனால், ஆசிரமத்தை நடத்தும் பொறுப்பு அவளிடத்தில் இருந்தமையால், அவள் தன் மனத்தை அடக்கி, கடமையாகிய ஆதர்சத்தை முன்னால் வைத்துக்கொண்டு தனக்குப் பிடிக்காத இவ்வேலைகளையெல்லாம் செய்யத்தான் வேண்டியிருந்தது ; தன் புரட்சிப் பான்மையைக் கூடியவரையில் மறைக்கத்தான் வேண்டியிருந்தது. ஆனால், வேலையில் மனம் செல்லாத இடத்தில் உல்லாசமும் ஆர்வமும் எங்கிருந்து வரும்? எந்த நிபந்தனைகளிடம் பயந்துகொண்டு அவள் இங்கே ஓடிவந்தாளோ, அவை இப்போது பின்னும் மோசமான உருவத்தோடு அவளை விரட்டலாயின. அவள் மனத்தில் கசப்பு ஏற்பட்டு, மும்முரமாகத் தொண்டு செய்ய வேண்டுமென்ற நினைவு மங்கிக்கொண்டே வந்தது.

இதற்கு முற்றும் மாறாக விமலன் இருந்ததை அவள் கண்டாள். அவன் எப்போதும் முகம் சிணுங்குவதில்லை. எப்போதும் முறுவல் பூத்த முகம், தியாகத்தோடு கூடிய நல்லெண்ணம், செய்கையில் தன்னை மறந்த தன்மை. சின்னஞ்சிறு வேலைக்குக்கூட எந்நேரமும் தயாராக இருப்பான். ஆசிரமத்துக் குழந்தைகளுக்கோ உபாத்தியாயினிகளுக்கோ நோய் வந்துவிட்டால் அவர்களுக்குச் சுச்ருஷை செய்வதில் முனைந்திருப்பான். அநுதாபத்தின் எவ்வளவு பெருங் களஞ்சியந்தான் அவனிடம் இருக்குமோ! எவ்வளவு ஈந்தாலும் அது குறைவதே இல்லை. அவன் மனத்தில் எவ்விதமான ஐயந்திரிபுகளுக்கும் இடமில்லை. அவன் ஒரு வழியைப் பிடித்துக்கொண்டான் ; அதன் மீதே அடி வைத்துப் போய்க்கொண் டிருக்கிறான். இந்த வழியே தன் லக்ஷ்யத்தை எட்ட முடியுமென்று அவன் நம்புகிறான். வழியில் சந்திக்கும் யாத்திரிகர்களைத் தன் தோழர்களாக்கிக் கொள்கிறான். தான் கொண்டுவந்த சோற்று மூட்டையிலிருந்து அவர்களுக்கும் உணவைப் பங்கிட்டுக் கொடுத்துச் சாப்பிடுவதில் அவனுக்குப் பரம ஆனந்தம். நிமிஷந்தோறும் அவன் எத்தனையோ தொந்தரவுகளைப் பொறுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது ; முகஸ்துதி செய்ய வேண்டியிருக்கிறது ; அவமானங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது ; தகுதி அற்றவர்களின் முன்னால் தலை குனிய வேண்டியிருக்கிறது : பிச்சையெடுக்க வேண்டியிருக்கிறது ; ஆனால் இதற்கெல்லாம் அவன் வருத்தப்படுவதே இல்லை. எப்போதும் நிராசையடைவதில்லை. விரோதம் பாராட்டுவதில்லை. ஆயிரக்கணக்கான அடிகள் பட்டும் பழையபடியே எழும்பி ஓடும்படியான ஒரு பொருள் அவனிடம் இருக்கிறது. உபாத்தியாயினிகள் மிகவும் சாதாரண விஷயங்களுக்கெல்லாம் அடிக்கடி குறை சொல்லிக்கொள்ள வருவார்கள் ; சில சமயம் கோபித்துக்கொள்வார்கள் ; ஆசிரமத்திலிருந்து விடைபெற்றுப்

போகவும் விரும்புவார்கள். வண்ணான் சரியாகத் துணி வெளுக்கா விட்டாலோ, வேலைக்காரி அவர்கள் புடைவையை அழுக்காக்கி விட்டாலோ, காவற்காரன் அவர்களுடைய நாயை விரட்டி ஓட்டினாலோ, அவர்கள் அறையை வேலைக்காரி பெருக்கா விட்டாலோ, அல்லது இடையன் பாலில் தண்ணீரைக் கலந்து விட்டாலோ - இம்மாதிரியான விஷயத்தில் ஆசிரமத்து அதிகாரி களிடம் என்ன குற்றம் இருக்கிறது? ஆனால் இதை வைத்துக் கொண்டே அழுகையும் கூச்சலும் வலுக்கும்; ஊரையே ஒன்று கூட்டிவிடுவார்கள். விமலன் வந்து தொண்டனைப்போலக் கெஞ்சிக் கூத்தாடி அவர்கள் கோபத்தைத் தணிப்பான். அவர் களுடைய வசவைக் கேட்டுக்கொண்டே சிரிப்பான். இவற்றின் பயனாக, அவனிடம் உபாத்தியாயினிகளுக்கு மேன்மேலும் நம்பிக்கை வளர்ந்தது. அவர்கள் அவனைத் தம் மேலதிகாரியாக எண்ணாமல், தம் நண்பனென்றும், உற்றானென்றும் கருதி வந்தார்கள்.

ஆனால், மஞ்சுளா விமலனிடமிருந்து சிறிது ஒதுங்கியே இருக்கிறாள். அவனிடம் அவள் எவ்விதமான குறையும் சொல்வ தில்லை; எந்த விஷயத்திலும் அவன் ஆலோசனையைக் கேட்ப தில்லை. 'ஆத்மாவின் வீழ்ச்சி' என்று கூறி, உலகாநுபவத்தை அவள் இழிவாக நினைத்தபோதிலும், அதுதான் உண்மையில் மலர்ச்சியுள்ள மனிதத் தன்மையின் உருவம் என்பது அவளுக்கு மனமாரத் தெரியும். ஆயினும் தன் கொள்கையிலிருக்கும் பற்றை விட்டுவிடுவது அவளுக்கு மிகவும் கஷ்டமான வேலை. இந்தப் பற்று இருந்துங்கூட விமலனுடைய தூய, தன்னலமற்ற விவகார ஞானம் அவளை வலுவில் தன் புறமாக ஆகர்ஷிக்கிறது. சாதாரண மனிதர்களின் விஷயத்தில், அவள் தன் அநுபவத்தினால் மனத்தில் வரைந்திருந்த எல்லைக் கோடுகளை விமலன் தாண்டிவிட்டிருந்தான். தன்னலமென்பது அவனிடம் லவலேசமும் இல்லை. கர்வம் அவனைத் தீண்டவே இல்லை. அவனுடைய தியாகத்துக்கு எல்லை இல்லை. மஞ்சுளாவின் பாரமார்த்திக வாழ்க்கையில், இதுதான் மனிதனுடைய மிக உயர்ந்த லக்ஷ்யம். ஆனால் விமலன் அந்த லக்ஷ்யத்துக்கு அருகில் இருப்பதைக் கண்டு, அவளுக்கு ஒருவிதமான தோல்வி மனப்பான்மை உண்டாயிற்று. லக்ஷ்யத்தின் பெருமையெல்லாம், அது எட்டக்கூடாத நிலையில் இருக்கும் வரையில்தான். அது கிட்டிவிட்டால், பிறகு அதற்கு லக்ஷ்யம் என்று என்ன பெயர்? மஞ்சுளா லக்ஷ்யக் கற்பனையைப் பின்னும் உயர்ந்ததாக்கிக்கொண்டு, விமலன் அந்த லக்ஷ்யத்தி லிருந்து இன்னமும் வெகு தூரத்திலிருப்பதாக நினைந்து, தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்ள விரும்புகிறாள்; ஆயினுங்கூட விமலன் வலுக்கட்டாயமாக அவளுடைய சிரத்தைக்கு உரியவனாகி

விடுகிறுன். தான் வெள்ளத்தோடு போகாமல் தப்பித்துக் கொள்ளவேண்டுமென்று அவள் ஒரு மரக்கட்டையைப் பிடிக்கப் போக, அவள் கால்கள் பெயர்ந்தவுடனே அதுவும் விலகிப் போயிற்று; அவள் மற்ருெரு முறை தப்ப முயலும்போது, கடைசியாக அவளுக்கு இந்த ஆதாரம் கிடைத்தது.

அவளுடைய வேலைகளில் விமலனுக்குத் திருப்தி இல்லை என்பதை அவள் தன் கூரிய பார்வையால் அறிந்துகொண்டிருக் கிறுள். அப்படியிருக்க, அவன் ஏன் அவளைப்பற்றிக் குறை சொல்வதில்லை. வேலைகள் ஒழுங்காக நடைபெருமைக்கு ஏன் காரணங்கள் கேட்பதில்லை? அந்தக் கூரிய பார்வையைக் கொண்டே அவள் தன் அழகில் விமலன் ஈடுபடாமலில்லை என்பதையும் தெரிந்துகொண் டிருக்கிறுள். பின்னே ஏன் இத்தனை சாந்தம்? இவ்வளவு பராமுகம்? அவன் ஒன்று, வஞ்சகக் காரனுக இருக்கவேண்டும், அல்லது பயங்கொள்ளியாக இருக்க வேண்டும் என்பது இதனுல் தெளிவாகவில்லையா? மற்றவர் களோடு அவன் எவ்வளவு தாராளமாகப் பழகுகிறுன்? எவ்வளவு அநுதாபத்தோடு குழைகிறுன்? மஞ்சுளாவிடமிருந்து மட்டும் அவன் ஒதுங்கி ஒதுங்கிப் போவானேன்? மேலுக்கு எதையாவது பேசிவிட்டு நடப்பானேன்? நிஷ்கபடமான அந்த முதல் நாளைய நடவடிக்கை இப்போது எங்கே மறைந்துபோயிற்று? மஞ்சு ளாவைப் பற்றித் தனக்கு அக்கறையே இல்லையென்றும், பணக் காரர்களின் தலைவாசலில் அவள் தலைகுனியாத ஒரு காரணத் துக்காக அவளிடம் தான் கோபங் கொண்டிருப்பதையும் அவன் காட்டிக்கொள்ள விரும்புகிறுனு? அப்படியாயின், அந்த முக ஸ்துதி வேலை அவனேடு இருக்கட்டும்! மஞ்சுளா தொண்டு செய்வாள் – சுய அபிமானத்தை விடாமல்தான்!

ஒரு நாள் காலையில் அவள் தோட்டத்தில் உலாவிக்கொண் டிருக்கையில் விமலன் அவளுக்கு வந்தனம் செய்து, ஸேவா சிரமத்தின் ஆண்டுவிழா நெருங்கி வருவதையும், அதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்பதையும் தெரிவித்தான்.

மஞ்சுளா அசட்டை தட்டும் குரலில், "இந்த விழா பிரதி வருஷமுந்தானே நடக்கிறது?" என்ருள்.

"ஆமாம், பிரதி வருஷமும் நடக்கிறது. ஆனுல் இந்தத் தடவை அதிக விமரிசையோடு நடத்துவதாக யோசனை" என்ருன் விமலன்.

"என்னுல் முடிந்ததைச் செய்ய வஞ்சனை இல்லை. தங்க ளுக்குத்தான் தெரியுமே, நான் இவ்விஷயத்தில் அதிகம் தேர்ச்சி பெற்றவள் அல்ல என்பது."

"இதை வெற்றிகரமாக முடிக்கும் பொறுப்பு முழுவதும் உங்களுடையதுதான்."

''என் பொறுப்பா!''

''ஆமாம். நீங்கள் மனசு வைத்தால் இந்த ஆசிரமம் ஒரேயடியாக முன்னேற முடியுமே!''

''என் விஷயத்தில் தாங்கள் இப்படிக் கருதியிருப்பது தவறு.'

''நான் கருதியிருப்பது தவறு, அல்லது நீங்கள் கருதியிருப்பது தான் தவறு என்பது சீக்கிரமே தெரிந்துபோகும்'' என்றான் விமலன், நம்பிக்கை நிரம்பிய குரலில்.

அன்றுதான் முதல் தடவையாக விமலன் மஞ்சுளாவைத் தூண்டிவிட்டான். ஸேவாசிரமத்தை அவள் கையில் ஒப்பித்த நாளிலிருந்து, அவன் அது விஷயமாக அவளுக்கு எந்தக் கட்டளையும் இட்டதில்லை. அப்படிச் செய்ய அவனுக்குத் தைரியமே உண்டாகவில்லை. இருவரும் சந்திக்கும் போதெல்லாம் மேலெழுந்த வாரியான பேச்சுக்களே நிகழும். மஞ்சுளா ஏற்கனவே செய்துள்ள தியாகமே யதேஷ்டமென்றும், அதற்கு மேலும் அவள் தலையில் சுமையை வைப்பது அநியாயமென்றும் விமலன் ஒருவேளை கருதியிருக்கலாம். அல்லது, மஞ்சுளாவின் மனம் இந்த ஸ்தாபனத்தில் ஒன்றிப் போனபின்பு ஏதாவது சொல்லலாம் என்று அவன் ஒருகால் தக்க சமயத்தை எதிர்பார்த்திருக்கலாம். விநயமாகவும் வற்புறுத்தியும் அவன் இட்ட கட்டளை அவளுக்கு ஒரு புதிய ஊக்கத்தைத் தந்தது. ஸேவாசிரமத்தை அவள் எப்போதும் இவ்வளவு சொந்தமாகக் கருதியதில்லை. விமலனிடம் அவள் கொண்டிருந்த தீய எண்ணங்கள் பாசியைப் போல விலகின. விழாவுக்கான ஏற்பாடுகள் செய்வதில் அவள் முற்றும் ஆழ்ந்துவிட்டாள். அன்று வரையில் ஆசிரமத்து வேலைகளில் தான் அவ்வளவு விட்டேற்றியாக இருந்ததை நினைத்து அவளுக்கே ஆச்சரியம் உண்டாயிற்று. ஒரு வாரகாலம், இரவும் பகலும் அதிதிகளை வரவேற்று உபசரிப்பதிலேயே அவள் ஆழ்ந்திருந்தாள். சாப்பிடக்கூட அவளுக்கு ஓய்வு இல்லை. பதினொரு மணிக்குச் சாப்பிடவேண்டியவள், பிற்பகல் நாலு மணிக்கு இலையில் உட்காருவாள். யாராவது ஓர் அதிதி இந்த வண்டியிலோ அந்த வண்டியிலோ வந்த பிரகாரந்தான். இரவு வேளையில்கூட அவள் அடிக்கடி ஸ்டேஷனுக்குப் போகவேண்டியிருந்தது. இதற்குமேல், குழந்தைகளின் நாட்டியக் கதம்பத்துக்கு ஒத்திகைகள் வேறு. போதாக் குறைக்கு, அவள் தன் பிரசங்கத்தையும் தயாரித்துக்கொள்ள வேண்டும். இந்தக் கடுந் தவத்துக்கு ஏற்ற பலன் கிடைத்தது. விழா எல்லா விதங்களிலும் வெற்றிகரமாக நிறைவேறியது. பல்லாயிரக் கணக்கில் நன்கொடைகள் கிடைத்தன. ஆனால், அதிதிகள் யாவரும் விடைபெற்றுச் சென்ற அன்றைத்தினமே, மஞ்சுளா ஒரு புதிய

அதிதியை வரவேற்கவேண்டியதாயிற்று. மூன்று நாள் வரையில் அவள் கட்டிலை விட்டு எழுந்திருக்கவே இல்லை. இம்மாதிரியான ஜுரம் அவளுக்கு என்றும் வந்ததில்லை. மூன்றே நாட்களில், வருஷக்கணக்காக வியாதியில் படுத்தவளைப்போல ஆகிவிட்டாள்.

விமலனும் ஓடியாடிப் பாடு பட்டான். முதலில் பந்தல் போடுவதற்கும், விருந்தாளிகள் சௌகரியமாகத் தங்கிப்போக ஏற்பாடுகள் செய்வதற்குமே சில நாட்கள் பிடித்தன. விழா முடிவுற்றதும், எங்கெங்கிருந்தோ கொண்டுவந்த சாமான்களை யெல்லாம் பத்திரமாக அங்கங்கே கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டியிருந்தது. மஞ்சுளாவுக்கு நன்றிகூற வருவதற்குக்கூட அவனுக்கு நேரமில்லை. அவளுக்கு உடம்பு சரியில்லை என்று யாரோ அவனிடம் சொன்னார்கள். ஓயாத உழைப்பினால் ஏற்பட்ட அலுப்பாக இருக்கும் என்று நினைத்து அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால், நாலாம் நாள், 'ஜுரம் இன்னும் இறங்கவில்லை; வேகமாக அடிக்கிறது' என்ற செய்தி கிடைத்ததுமே அவன் தலைதெறிக்க ஓடிப்போய், அவள்முன் குற்றவாளியைப்போல நின்றான். "இப்போது எப்படி இருக்கிறது உடம்பு? நீங்கள் என்னைக் கூப்பிட்டு அனுப்புவதற்கு என்ன?" என்று கேட்டான்.

மஞ்சுளாவுக்குத் திடீரென ஜுரம் தணிந்துவிட்டதுபோலத் தோற்றியது. தலைவலியும் சிறிது குறைந்தாற்போல இருந்தது. படுத்தவாறு, வசமிழந்த கண்களால் அவனைப் பார்த்துக் கொண்டே, "உட்காருங்கள்; தாங்கள் ஏன் நிற்கிறீர்கள்? இல்லாவிட்டால், நானும் எழுந்திருக்க வேண்டியதுதான்!" என்றாள்.

தன் வசத்தில் இருந்தால், அவளுடைய முழு வெப்பையும் நோயையும் தான் வாங்கிக்கொண் டிருக்கக்கூடும் என்று கூறுபவன்போல, விமலன் அவளைப் பார்த்தான். பிறகு அவன் உருக்கத்தோடு, "வேண்டாம், வேண்டாம்; நீங்கள் படுத்திருங்கள். இதோ நான் உட்காருகிறேன். குற்றம் முழுவதும் என்னுடையதே. நான்தான் உங்களை இந்தத் துன்பத்தில் ஆழ்த்தினேன். என்னை மன்னிக்கவேண்டும். நானே செய்ய வேண்டியிருந்த வேலைகளை உங்களைக்கொண்டு வாங்கினேன். இப்போதே போய் டாக்டரை அழைத்து வருகிறேன். விஷயம் இப்படி என்று தெரியாமல், வீண் வேலைகளில் மாட்டிக்கொண் டிருந்தேன்..." என்று சொல்லி, முதுகைத் திருப்புவதற்குள், மஞ்சுளா கையை ஆட்டி அவனை நிறுத்தினாள்.

"வேண்டாம், வேண்டாம். டாக்டரே தேவையில்லை. தாங்கள் துளிகூடக் கவலைப்படவேண்டாம். எனக்கு ஒரு

நோயும் இல்லை. நாளைக்கே நான் எழுந்து உட்கார்ந்துவிடுவேன்'' என்ருள்.

அவள் மனத்தில் எத்தனையோ எண்ணங்கள் எழுந்தன; ஆனால் அவள் உதடுகளை அழுந்த மூடிக்கொண்டாள். அந்த ஆவேசத்தில் என்ன பேசிவிடுவோமோ என்று அவளுக்குப் பயம். இதுவரையில் விமலன் அவளைத் தெய்வ மங்கையாகவே மதித்து அவள்முன் தலை வணங்கி வந்தான். அவளிடமிருந்து அவன் ஒதுங்கியே இருந்தான் என்பது உண்மை; ஆனால் அதற்குக் காரணம், அவளருகில் அவன் வர விரும்பவில்லை என்பதல்ல. தன் எளிமையிலும், நற்குணங்களிலும் ஆழ்ந்தவனாய், ஒருவேளை அவள் அதை அநுசிதம் என்று கருதிவிடுவாளோ என்ற கலக்கத்தினால்தான் அவளை நெருங்க அவன் கூச்சப்பட்டான். விமலன் தன் மனத்துக்குள் அவளை எந்த உயர்ந்த ஆசனத்தின்மீது உட்கார்த்தி வைத்திருக்கிருனே, அதிலிருந்து அவள் கீழே இறங்கலாமா? தான் எவ்வளவு ஸாத்துவிகன், பரந்த அறிவுள்ளவன் என்பதை விமலன் அறியவில்லை. கற்பிற் சிறந்த ஒரு காரிகையைப்போல, ஆகாயத்தில் பறப்பதும், மாசு மறுவற்றதும், நிஷ்கபடமுமான மங்கிய நிழலுருவை இத்தகைய மனிதனுடைய நினைவில் அவள் பதியவைக்க விரும்புவது ஒரு பெரிய மாயந்தான்!

அவள் அவனிடம் வேடிக்கையாக, ''என்ன இருந்தாலும், தாங்கள் மனிதர்; நான் மரப்பாச்சி!'' என்ருள்.

''அல்லவே அல்ல, நீங்கள் தெய்வம்.''

''அல்ல, நான் ஒரு பேதைப் பெண்.''

''நீங்கள் செய்து காட்டிய வேலையை நான் நூறு ஜன்மங்கள் எடுத்தும் செய்ய முடிந்திராது.''

''இதற்கு என்ன காரணம் என்பதையும் யோசித்துப் பாருங்கள். இது பெண்ணின் வெற்றியல்ல; அவளுடைய தோல்வியே. இந்தக் குற்றங்களோடுகூடவே நான் பெண்ணாக இராமல் ஓர் ஆண் பிள்ளையாக இருந்திருந்தால், இப்போது கிடைத்துள்ள வெற்றியில் கால் பங்குகூட அப்போது கிடைத்திராது. இது என் வெற்றியல்ல; என் பெண்மையின் வெற்றி. எழில் என்பது ஸாரமற்ற ஒரு பொருள்; தானாக இயங்கும் சக்தி அதற்கு இல்லை. அது ஒரு மாயம், ஓர் ஏமாற்றம். பல வீனங்களை மறைக்கும் திரைதான் அது!''

விமலன் உணர்ச்சிப் பெருக்கோடு, ''மஞ்சுளா தேவியாரே, இதென்ன நீங்கள் இப்படிச் சொல்கிறீர்களே? எழில் என்பது உலகத்தில் மிக உயர்வான ஒரு பேருண்மை. எழிலை ஒரு பேராபத்தாக எண்ணி நம் நாட்டுப் பெரியோர்களும், புலவர்

களும் மனித வர்க்கத்துக்கே தீங்கிழைத்து விட்டார்கள்'' என்ருன்.

மஞ்சுளாவின் அழகிய வடிவம் பெருமிதத்தினல் பூரிப் படைந்தது. எழிலைப் பொய்யென்று நினைக்க முயன்றபோ தெல்லாம் அவள் தோல்வி யடைந்துதான் வந்தாள். தன்னுடைய நிஷ்டையினுலும் பக்தியினுலும் தன் எழிலுக்காக அவள் பிராயச்சித்தம் செய்துவந்தாளோ என்று கூறும்படியாகவே அவள் போக்கு இருந்தது. எழிலைப்பற்றிய இந்த நிரூபணம், நிமிஷ நேரம்வரையில் அவளை மயக்கிவிட்டது. ஆனுல் அவள் தன்னைச் சமாளித்துக்கொண்டு, ''ஐயா, தாங்கள் மயக்கத்தில் இருக்கிறீர்கள். என்னை மன்னிக்கவேண்டும். ஆனுல், இந்த சௌந்தரியோபாசனை உங்களுக்கெல்லாம் ஒன்றும் புதிதல்ல. ஆண்கள் எப்போதுமே உடலழகை வழிபட்டுத்தான் வந்திருக்கி ருர்கள். சில புலவர்களும் மகாத்மாக்களும் உடலழகை நிந்தித் திருக்கலாம்; ஆனுல், பெரும்பாலும் ஆண் மக்கள் யாவரும், தாம் புணர்ச்சியில் பற்றுள்ளவர்கள் என்பதையே காட்டிக் கொண்டிருக்கிருர்கள். அவ்வளவென்ன, அவர்கள் புணர்ச்சியைக் கருதி மதத்தைக்கூட அசட்டை செய்துவிட்டார்கள். அப்புறம், அந்தப் புலவர்களும் மகாத்மாக்களும் இருக்கிருர்களே, தம் வாயினுலோ பேனுவினுலோ எழிலுக்குப் பகையாக விஷத்தைக் கக்கியவர்கள் - அவர்கள்கூட மனத்துக்குள்ளாக அதை ஆராதித் துக்கொண்டுதான் இருந்திருக்கிருர்கள். எழில் அவர்களைப் பரீக்ஷித்துப் பார்த்தபோதெல்லாம், அதுதான் அவர்களுடைய பெருந்தவத்தை வென்றிருக்கிறது. ஆயினுங்கூட, பொய்யான பொருள் எப்போதும் பொய்தான். எழில் வெறுமே புறக்கண் களைத்தான் கவர முடியும். ஞானிகளின் அகக்கண்களுக்கு முன்னுல் அதற்கு எவ்வித மதிப்பும் இல்லை. குறைந்த பக்ஷம், தங்களைப் பொறுத்தவரையில், தங்கள் வாயால் ரூபசௌந்தரி யத்தின் வர்ணனையை நான் கேட்க விரும்பவில்லை. ஏனெனில், நான் தங்களைத் தேவராக மதிக்கிறேன். என் மனத்தில் தங்கள் மீது சிரத்தையை வளர்த்திருக்கிறேன்'' என்ருள்.

விமலன் பித்துப் பிடித்தவன்போல் தரையை உற்றுப் பார்த்தான்; உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தான், மயக்கம் எய்திய நிலையில் இருப்பவன் போல். பிறகு அவன் திடுக்கிட்டு விழித்தெழுந்து, குற்றவாளியைப்போல் தலை குனிந்தவண்ணம், தயங்கித் தயங்கி அடியெடுத்துவைத்து, அந்த அறையிலிருந்து வெளியே சென்ருன்.

மஞ்சுளா? அவள் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

3

அன்றையிலிருந்து விமலனுடைய ஆர்வம் முழுவதும், செய்கைத் திறன் முழுவதும் திடீரென்று தளர்ந்துபோயின. வெளியே முகம் காட்டவே தைரியமில்லாதவன்போல, அவன் இருந்தான். ரகசியத் திரை நீங்கிவிட்டது போலவும், தன்னைச் சுற்றி நாலு புறமும் பரிகாசங்கள் துள்ளுவது போலவும் அவனுக்குத் தோற்றியது. இப்போதெல்லாம் அவன் ஸேவா சிரமத்திற்கு மிகக் குறைவாகத்தான் வருகிறான்; வந்தாலும் உபாத்தியாயினிகளோடு ஒன்றும் பேசுவதில்லை. அவர்களைப் பார்த்தும் பாராதவன்போல நடந்துகொள்கிறான். மஞ்சுளாவைச் சந்திப்பதற்கே அவன் இடம் வைத்துக்கொள்வதில்லை. சலிப் புற்று அவளாக அவனுடைய வீட்டுக்கு வரும்போது, அவன் வீட்டுக்குள்ளேயே மறைந்துகொண்டு, வெளியே போயிருப்ப தாகச் செய்தி சொல்லியனுப்புகிறான்.

அவனுடைய மனத்திலிருந்த ரகசியத்தை மஞ்சுளா அறிய முடியவில்லை. விமலன் தன் நீள்தவத்தாலும் நல்லெண்ணத் தினாலும் அவளை ஆகர்ஷித்திருக்கிறான் என்பதில் ஐயமில்லை. விமலன்கூட அவளுக்கு உபாஸகனாகி இருப்பதையும், சிறிது தூண்டுதல் கிடைத்தாலே தன்னை அவள் கழல்களில் அர்ப்பித்து விடுவானென்பதையும், அவள் ஒரு பெண்ணுக்கு உரிய ஆழ்ந்த அகப்பார்வையினால் கண்டறிந்திருக்கிறாள். வருஷக் கணக்காக அவள் கழித்த வாழ்க்கையில் காதல் என்ற சொல்லே சூனியமாக இருந்தது. பிறகு, தொண்டையும் கடமையையும் விடாமல் அழுத்திப் பிடித்துக்கொண்டிருந்துங்கூட, அவள் தன் குறையை உணர்ந்த வண்ணமாகவே இருக்கிறாள். தனக்குக் காதலும் நம்பிக்கையும் ஏற்படாத ஒரு புருஷனிடத்தில், அவள் எவ்விதத்தும் நீதி சம்பந்தமாகவோ மத சம்பந்தமாகவோ கட்டுப்பட்டிருக்க உடம்படவில்லை. அவள் தான்தோன்றியாக இருக்க விரும்புகிறாள். சமூகம் அவளுடைய இந்தத் தான்தோன்றித் தன்மையை ஒப்புக்கொள்ளாததனால் அவளுக்கு ஒன்றும் மூழ்கிப்போய்விட வில்லை. அவளுடைய ஆத்மா இவ்விஷயத்தில் தான் சுதந்தரமாக இருப்பதாகவே கருதுகிறது. ஆனால், விமலனிடத்தில் ஆதரவும் பக்தியும் பெறவேண்டுமென்ற ஆசை அவளுடைய இந்த விடுதலை யெண்ணத்தைத் தலைதூக்க விடவில்லை. அவள் விமலனோடு நெருங்கிப் பழக விரும்புகிறாள், தன் சுயமரியாதையைக் காப் பாற்றிக்கொண்டு. அதுமட்டுமின்றி, விமலனுடைய தூய, மாசற்ற வாழ்க்கையைக் கறைப்படுத்தலாகாது என்றும் நினைக்கிறாள். ‘லேசாக ஒரு வாய் மருந்தைக் கொடுத்து விமலனைக் குணப் படுத்திவிடலாம். உடம்பு சொஸ்தமானதும், அவன் நம் மனச்

மஞ்சுளா காணப்பட்டாள். தலையிலிருந்து கால்வரையில் எல்லாம் ஆங்கில வேஷம். முதல் நாள் பார்த்த அதே இளைஞன் இப்போதும் அவளோடு இருந்தான். விமலனால் தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை. மனத்தில் ஒன்றும் தீர்மானம் செய்து கொள்ளாமலே அவன் மஞ்சுளாவின் முன்னே போய் நின்றான்.

அவனைப் பார்த்ததுமே மஞ்சுளா அயர்ந்துபோய் விட்டாள். அவள் முகம் வெளிறியது; ஆனால் மறுகணமே அவள் தன்னைச் சமாளித்துக்கொண்டு முறுவல் பூத்தவண்ணம், ''ஹல்லோ, மிஸ்டர் விமல்! இங்கே எப்போது வந்தீர்கள்?'' என்றாள்.

பிறகு அவள் அந்த இளைஞனையும் விமலனையும் ஒருவருக்கு மற்றவரை அறிமுகம் செய்வித்தாள்: ''இவர் ஒரு மகான்; காசியில் ஸேவாசிரமத்தை நடத்துகிறார். இவர் என் நண்பர் மிஸ்டர் கன்னா; சமீபத்தில்தான் இங்கிலாந்திலிருந்து ஐ. ஸி. எஸ். பட்டம் பெற்று வந்திருக்கிறார்.''

இருவரும் கைகுலுக்கினார்கள்.

''ஸேவாசிரமம் வெகு நன்றாக நடக்கிறதென்று தெரிகிறதே. அதன் வருஷாந்தர அறிக்கையை நான் பத்திரிகைகளில் படித்தேன். தாங்கள் இங்கே எவ்விடத்தில் தங்கியிருக்கிறீர்கள்?'' என்று மஞ்சுளா கேட்டாள்.

விமலன் தான் தங்கியிருந்த ஹோட்டல் பெயரைச் சொன்னான்.

மீண்டும் படம் ஆரம்பமாகிவிட்டது. ''ஆட்டம் தொடங்கி விட்டதே. வாருங்கள், உள்ளே போகலாம்'' என்றான் கன்னா.

''நீங்கள் போய்ப் பாருங்கள், நான் மிஸ்டர் விமலிடம் சற்றுநேரம் பேசவேண்டும்'' என்றாள் மஞ்சுளா.

கன்னா விமலனை நெருப்பைக் கக்கும் கண்களால் பார்த்து விட்டு, 'ஜிவ்'வென்று உள்ளே போய்விட்டான். மஞ்சுளாவும் விமலனும் வெளியே வந்து பச்சைப் பசேலென்றிருந்த புல்லுத் தரையில் உட்கார்ந்தார்கள். விமலனுடைய உள்ளம் பெருமிதத் தினால் பூரித்தது. நம்பிக்கையில் பிறந்த உல்லாசமாகிய தேநிலவு அவன் இருதயத்தில் மலர்ந்திருந்தது.

மஞ்சுளா ஆழ்ந்த குரலில், ''என் ஞாபகம் தங்களுக்கு ஏன் இருக்கப்போகிறது? தங்களுக்குக் கடிதம் எழுதவேண்டுமென்று பல தடவை எண்ணினேன்; ஆனால் சங்கோசத்தினால் எழுத முடியவில்லை. தாங்கள் ஆனந்தமாகவே இருக்கிறீர்களல்லவா?'' என்றாள்.

அவளுடைய இந்தக் குற்றச் சாட்டு விமலனுக்குப் பிடிக்க வில்லை. சற்று நேரம் முன்பு, பரிகாசத்திலும் விநோதத்திலும்

அவள் மூழ்கியிருந்தது என்ன! இப்போது அவனைக் கண்டவுடனே கம்பீரமே உருவெடுத்தாற்போல் ஆகிவிட்டாளே! அவன், வறண்ட குரலில், "உங்கள் ஞாபகம் இல்லாமல் என்ன! வெகு நன்ருக ஞாபகம் இருக்கிறது. நீங்கள் சுகமாகத்தானே இருக்கிறீர்கள்?" என்ருன்.

மஞ்சுளாவின் நெஞ்சம் தழுதழுத்தது. "எனக்கு ஆயுசுக்கும் சுகம் என்பதே கிடையாது, மிஸ்டர் விமல்! போன வருஷம் என் கணவர் இறந்துபோனர். அவர் விட்டுப்போன சொத்தைவிட, கடன்தான் அதிகமாக இருந்தது. அதே சிந்தையில் மூழ்கியிருந்தேன். உடம்பும் கெட்டுப்போயிற்று. டாக்டர்கள், 'மலைக்காற்று வாங்கினல்தான் குணமாகும்' என்ருர்கள். அப்போதிலிருந்து இங்கேயே விழுந்து கிடக்கிறேன்" என்ருள்.

"நீங்கள் இதையெல்லாம் எனக்கு ஏன் எழுதவில்லை?"

"தங்கள் தலையில் ஏற்கனவே மட்டான சுமையா இருக்கிறது? போதாக்குறைக்கு நான் ஏன், என் கவலைச் சுமைகளையும் தங்கள்மீது ஏற்றவேண்டும்?"

"இருந்தாலும், ஒரு நண்பன் என்ற முறையில் எனக்கு விஷயத்தைத் தெரிவித்திருக்கலாமே."

மஞ்சுளாவின் குரலில் சிரத்தை நிரம்பியது; "ஐயா விமலரே, இந்தச் சச்சரவுகளிலெல்லாம் தலையிடுவது தங்கள் வேலையல்ல. ஆண்டவன் தங்களைத் தொண்டுக்காகவும் தியாகத்துக்காகவுமே படைத்திருக்கிருன். அதுதான் தங்களுடைய வேலைக் களம். தங்களுக்கு என்மீது அருள்விழி இருப்பது எனக்குத் தெரியும். அதற்கு நான் எவ்வளவு உயர்ந்த மதிப்புக் கொடுக்கிறேன் என்பதைச் சொற்களால் வெளியிட முடியாது. எப்போதுமே அருளும் காதலும் கிடைக்கப்பெருத ஒருத்தி அவற்றை நோக்கிப் பாய்ந்தால், அவள் மன்னிப்புக்கு உரியவளே. நான் அவற்றைத் துறந்து மிகப் பெரிய தியாகம் செய்திருப்பதாகத் தாங்கள் நினைக்கக் கூடும். ஆனல் நான் அதைத்தான் என் கடமையாக எண்ணினேன். நான் எதை வேண்டுமானுலும் பொறுத்துக் கொள்ள முடியும்; ஆனல் தங்களைத் தெய்விகத் தன்மையாகிய உயர்ந்த ஆசனத்திலிருந்து கீழே வீழ்த்தமாட்டேன். தாங்கள் ஞானி; உலகத்து இன்பங்கள் அநித்தியமானவை என்பதை நன்கு அறிவீர்கள். இவற்றின் மாயவலையில் சிக்காதீர்கள். தாங்களும் மனிதரே; தங்களிடத்திலும் ஆசைகளும், வேட்கைகளும் இருக்கின்றன; ஆனல் அவற்றை யெல்லாம் அடக்கி வெற்றியடைந்த பின்புதான், இந்த உயர்ந்த நிலை தங்களுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த நிலையைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள்.

சோலைக்கு வந்து மலர்களைப் பார்த்து மகிழ்வான். பசும் புல்லுத் தரையில் படுப்பான். பறவைகளின் மதுர கீதத்தைக் கேட்பான்' என்று அவள் நினைத்திருந்தாள். இந்த அளவுக்குத்தான் அவள் அவனிடம் கூட்டுறவை வேண்டினாள். 'விளக்கொளியினால் உண்டாகும் ஆனந்தத்தை, விளக்கிலிருந்து தொலைவில் விலகி இருந்துதான் அநுபவிக்க வேண்டும். அதை அணுகித் தொட்டால் நம்மை நாமே எரித்துக்கொள்ள வேண்டியதுதான்' என்று அவள் நினைத்தாள். ஆனால், இப்போது அந்த ஒரு வாய் மருந்து நோயைத் தீர்ப்பதற்குப் பதிலாக, வேறொரு நோயைக் கிளப்பிவிட்டது. எதிலும் ஒண்டாமல் இருக்கும் சக்தி விமலனிடம் இல்லை. அவன் எந்த விஷயத்தில் புகுந்தாலும், தன் உடலையும் மனத்தையும் அதற்கே ஆக்கிவிடுவான். அவனுடைய இந்தப் புதிய நட வடிக்கையை, மஞ்சுளா தனக்கு ஏற்பட்ட அவமானமென்று நினைத்தாள். அவள் மனம் அந்த இடத்தை வெறுக்க ஆரம் பித்தது.

கடைசியில் ஒரு நாள் அவள் விமலனைக் கையும் பிடியுமாகப் பிடித்துவிட்டாள். அவன் நாள் தவறாமல் ஆற்றங்கரைக்கு உலாவப் போவது அவளுக்குத் தெரியும். ஒரு நாள் அவள் அங்கேயே போய் அவனைச் சூழ்ந்துகொண்டாள்; தன் ராஜீநாமாவை அவன் கையில் வைத்தாள்.

விமலனுக்குத் தன் கழுத்தில் யாரோ சுருக்கிட்டதுபோல இருந்தது. தரையை ஊன்றிப் பார்த்துக்கொண்டே, ''ஏன் இப்படி?'' என்று கேட்டான்.

''நான் இந்த வேலைக்குத் தகுந்தவள் அல்ல என்பதனால்தான்.''

''ஆசிரமந்தான் நன்றாக நடக்கிறதே?''

''அப்படி இருந்தும், எனக்கு இங்கே இருக்க இஷ்டமில்லை.''

''என்னால் தவறு ஏதாவது நேர்ந்துவிட்டதா?''

''உங்கள் மனசையே கேட்டுப் பாருங்கள்.''

இந்த வாக்கியத்துக்கு விமலன் செய்துகொண்ட அர்த்தம் மஞ்சுளாவின் கற்பனைக்கே எட்டாதது. ரத்த ஓட்டமே நின்று விட்டாற்போல, அவன் முகத்தின் ஒளி மங்கியது. அவனிடம் இந்த வாக்கியத்துக்குப் பதிலே இல்லை. இனிமேல் எங்கும் பிராது செய்துகொள்ளவே முடியாத தீர்ப்பு இது.

அவன் அடிபட்டவனைப் போன்ற குரலில், ''உங்கள் இஷ்டம்; என்மீது தயை வைக்கவேண்டும்'' என்றான்.

மஞ்சுளா இளகிய குரலில், ''அப்படியானால் நான் போகலாம் அல்லவா?'' என்றாள்.

''உங்கள் இஷ்டம்!''

கழுத்தில் விழுந்த பாசத்தை விடுவித்துக்கொள்பவனைப்போல அவன் அங்கிருந்து ஒரே ஓட்டமாக ஓடினான். கண்ணெதிரில் படகு மூழ்கிப் போனாற்போல, மஞ்சுளா இரக்கம் நிரம்பிய பார்வையோடு அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

4

சவுக்கடி பட்டதும் விமலன் மீண்டும் ஸேவாசிரமத்து வேலைகளில் உழைக்க ஆரம்பித்தான். மஞ்சுளாவின் கணவர் நோய்வாய்ப் பட்டிருப்பதாகவும் அதனால் அவள் போய்விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. வேலைவெட்டி உள்ளவன் காதல் நோயை வளர்க்கமாட்டான்; கவிதைகள் பாடவும், காதற் கடிதங்கள் வரையவும், நீண்ட பெரு மூச்சுக்கள் விடவும் அவனுக்குப் பொழுது ஏது? அவன் முன்னே கடமையும், முன்னேற வேண்டுமென்ற எண்ணமும், லக்ஷ்யமுமே இருக்கும். விமலன் வேலைகளிலேயே மூழ்கியிருந்தான். எப்போதாவது ஒரு சமயம் தனிமையில் மஞ்சுளாவின் ஞாபகம் வரும். அப்போது அவன் வெட்கத்தினால் தலை குனிவான். அவள் அவனுக்கு நிரந்தரமாக இருக்கும்படி பாடம் கற்பித்துவிட்டாள். பதிவிரதா சிரோமணியான அந்தப் பெண்மணியினிடம் அவன் எவ்வளவு கேவலமாக நடந்து கொண்டுவிட்டான்!

மூன்று வருஷங்கள் கழிந்து போயின. கோடைக்காலம்; விமலன் அந்தத் தடவை மஸூரிக்குக் காற்று வாங்கப் போயிருந்தான். அங்கே அவன் ஒரு ஹோட்டலில் தங்கினான். ஒரு நாள், பாண்டுவாத்தியம் முழங்கும் மேடைக்கருகில் நின்றுகொண்டு பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தான் அப்போது பக்கத்திலுள்ள பெஞ்சு ஒன்றில் மஞ்சுளா உட்கார்ந்திருப்பதைக் கண்டான். ஆபரணங்களும் அலங்காரங்களும் அவள் தேகத்தில் பளபளவென்று ஒளி வீசின. அவள் பக்கத்தில் கோட்டும் நிஜாரும் அணிந்த ஓர் இளைஞன் உட்கார்ந்திருந்தான். இருவரும் கலகலவென்று நகைத்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். இருவர் முகங்களும் மலர்ந்திருந்தன; இருவரும் காதல் வெறியில் மூழ்கியிருந்தனர். விமலனின் மனத்தில், 'இந்த இளைஞன் யார்?' என்ற கேள்வி எழுந்தது. 'அவன் மஞ்சுளாவின் கணவனாக இருக்க முடியாது; அல்லது ஒருகால் அவள் கணவனாகவும் இருக்கலாம். தம்பதிகளுக்குள் இப்போது ஒற்றுமை உண்டாகியிருக்கலாம்' என்று அவன் நினைத்தான். மஞ்சுளாவின் முன்னே போய் நிற்க அவனுக்குத் தைரியம் உண்டாகவில்லை.

மறுநாள் அவன் ஓர் ஆங்கிலப் படம் பார்க்கப் போனான். இடைநேரத்தில் வெளியே வருகையில் 'கபே'யில் மீண்டும்

பாரமார்த்திகத் துறைதான் தங்களுக்கு உதவும். அந்த வழியில் செய்யும் ஸாதனையினால்தான் தங்கள் வாழ்க்கை சாத்துவிக மாகும் ; மனம் வெளுக்கும்'' என்றாள்.

விமலன் சற்று நேரத்துக்கு முந்திதான், கேளிக்கை விளையாடல்களில் மூழ்கியிருந்த மஞ்சுளாவைப் பார்த்திருந்தான். மிஸ்டர் கன்னாவோடு அவளுக்கு எத்தகைய தொடர்பு உள்ளது என்பதையும் அவன் அறிந்திருந்தான். ஆயினுங்கூட, இந்த உப தேசத்தை அவன் உண்மையான அநுதாபம் கலந்த செய்தி யாகவே மதித்தான். விளையாட்டுப் பண்டமாக இருந்த மஞ்சுளா அவன் முன் தெய்வநங்கையாக விளங்கினாள். அவள் மனத்துக் குள் இருந்த அகம்பாவம் அவளுடைய காமப் பித்தைவிட வீறு சான்றதாக இருந்தது. நல்லெண்ணம் துளும்பும் மனத்தோடு அவன், ''தாங்கள் எந்த வார்த்தைகளால் என்னைப் போற்றி னீர்களோ, அவற்றிற்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக் கிறேன், அம்மா ! உங்களுக்கு நான் என்ன தொண்டுசெய்ய முடியுமோ, சொல்லுங்களேன் ?'' என்றான்.

மஞ்சுளா அங்கிருந்து எழுந்தவாறே, ''தங்கள் அருள்விழியே போதும்'' என்றாள்.

அதே சமயத்தில், மிஸ்டர் கன்னா சினிமாக் கொட்டகையி லிருந்து வெளியே வருவது தென்பட்டது.

ரஸிகர்

1

'நவ ரஸம்' என்ற பத்திரிகையின் ஆசிரியரான ராம கிருஷ்ண சர்மாவுக்கு மனைவி இறந்துபோனது முதல், ஸ்திரீ களிடம் தனிப்பற்று உண்டாகிவிட்டது. அவருடைய ரஸிகத் தன்மையின் அளவும் வளர்ந்துகொண்டே வந்தது. ஆண்களின் கதைகள் எவ்வளவு அழகாக இருந்தாலும் அவற்றை அவர் குப்பைக் கூடையில் போட்டுவிடுவார். ஸ்திரீகளின் கட்டுரைகள் - அவை எப்படி இருந்தாலும் சரி - உடனே இடம் பெறும். அநேகமாகக் கட்டுரைகள் கிடைத்தவுடனே அவற்றைப் போற்றிக் கடிதங்களும் எழுதுவார். "தங்கள் கட்டுரையைப் படித்து மகிழ்வுற்றேன். அதைப் படித்தவுடனே பழைய வாழ்க்கை என் கண்முன் உருவெடுத்து நின்றது. தங்களுடைய கருத்துக்கள் இலக்கியக் கடலில் ஒளி வீசும் மாணிக்கங் களாகும்; அவற்றின் ஒளி என்றும் மங்காது. தங்கள் கவிதை களோ உள்ளத்தில் எழும் அலைகள்; வீணையின் அழிவிலா நாத ஸ்வரங்கள்; முடிவிலா உலகின் இனிய துயரங்கள்; இரவின் நிச்சப்தமான பாடல்கள். தாங்கள் எப்போதாவது இவ்வழியாக வந்தால், என்னை மறக்கக்கூடாது. இப்படிப்பட்ட கவிதைகளை ஸ்ருஷ்டித்த தெய்வ மங்கையின் தரிசனம் எனக்குக் கிடைக்கு மாயின், நான் பாக்கியசாலியே" என்று இவ்வாறு ஸ்தோத் திரங்கள் செய்வார்.

இவ்விதமான தூண்டுதல்களினால் ஸ்திரீகள் பரமானந்தம் எய்தினர். பிச்சைக்காரர்களைப்போல் பல இடங்களுக்குப் போய் அலைந்து நிராசையோடு திரும்பிய கட்டுரைகளுக்கு இங்கே கிடைக்கும் மரியாதைதான் என்ன! "உலகத்திலேயே முதல் தடவையாக இப்போதுதான், இலக்கிய ரஸங்களை மதிப்பிடவல்ல பத்திரிகாசிரியன் தோன்றி யிருக்கிறான். மற்ற ஆசிரியர்கள் யாவரும் அகங்காரம் பிடித்தவர்கள்; தம்மைத் தவிர வேறு எவரும் எழுத்தாளரே அல்ல என்று நினைப்பவர்கள். ஆசிரியர் பீடத்தில் ஏறிவிட்டால், ஏதோ பெரிய ஸாம்ராஜ்யம் கிடைத்து விட்டாற்போலத்தான்! இதற்கே இப்படி இருக்கிறதே; இவர் களுக்கு ஏதாவது பெரிய சர்க்கார் உத்தியோகம் கிடைத்து

விட்டால் திமிலோகந்தான்! துரைத்தனத்தார் இவர்களை ஏனென்று கேட்காமலிருக்கிறார்களே, அந்த மட்டும் நல்லதுதான். இவர்கள் பெண்மணிகளைப் பகைப்பதற்குத் தக்க தண்டனை அதுதான். இதோ பாருங்கள்: இவனும் ஒரு பத்திரிகாசிரியன் தான்; மடையனல்ல. அதுவும் உலகப் பிரசித்தி பெற்ற ஒரு பத்திரிகைக்கு ஆசிரியன். 'நவரஸம்'தான் பத்திரிகைகளுக்குள்ளே முதன்மையாக விளங்குகிறது'' என்று எங்கும் பேச்சாக இருந்தது.

'நவரஸ'த்தின் சந்தாதார்களின் எண்ணிக்கை மிகவும் வேகமாகப் பெருகியது. ஒவ்வொரு தபாலிலும் வந்தனங்கள் வெள்ளமாக வரும். பெண்மணிகள் தம் சொந்த விஷயங்களைப்பற்றி அவரையே ஆலோசனை கேட்கலாயினர். மாதந் தோறும் ஏழெட்டுப் பேர் வந்து அவருக்குத் தரிசனமும் அளித்துச் செல்வார்கள். அவர்கள் வரும் செய்தி, தந்தி மூலமோ கடிதத்தின் மூலமோ கிடைத்ததும், சர்மாவே ஸ்டேஷனுக்குச் சென்று அவர்களை வரவேற்பார்; மிகவும் வற்புறுத்தி இரண்டு மூன்று நாட்கள் தம்மிடமே தங்கச் செய்வார். விருந்தோம்பலில் அவருக்கு இணை யாருமே இல்லை என்பது பிரசித்தி. தமக்குக் கிடைக்கும் இலவசச் சினிமாப் பாஸ்களைக் கொண்டு, அவர்களைச் சினிமாவுக்கும் அழைத்துப் போவார். பெண்ணரசிகள் அவருடைய பெருந்தன்மையைக் கண்டு வியப்படைந்து அவரிடம் விடை பெற்றுச் செல்வார்கள்.

ஒரு நாள் ஆசிரியருக்கு ஒரு கவிதை கிடைத்தது. அதை எழுதியவள் தன் தீவிரமான காதலை அதில் வெளிப்படுத்தியிருந்தாள். மற்ற ஆசிரியர்களாயிருந்தால் அதை 'ஆபாசமானது' என்று சொல்லியிருப்பார்கள். ஆனால், சர்மா தாராள மனப்பான்மை உள்ளவரல்லவா? மணிமணியான எழுத்துக்களில் எழுதிய கவிதை; எழுதியவளின் பெயரோ நெஞ்சத்தைக் கவர்கிறது. ஒரு கற்பனைச் சித்திரம் அவர் கண் முன்பு நின்றது. நெஞ்சக் கனிவுள்ள வடிவம்; கோமள காத்திரம்; கோரிக்கை நிரம்பிய கண்கள்; கோவைபோல் சிவந்த இதழ்கள்; சண்பக மலர் போன்ற மேனி நிறம்; சஞ்சலமான அவயவங்கள்; முதலில் கோந்துபோல் உலர்ந்தும் கடுமையாகவும் இருந்தாலும், ஈரம் பட்டவுடனே ஒட்டிக்கொள்ளும் குணமுடையவள். அவர் அந்தக் கவிதையை இரண்டு மூன்று தடவைகள் படித்தார். ஒவ்வொரு தடவையும் அவர் மனத்தில் குறுகுறுப்பு உண்டாயிற்று. மறுபடியும் படித்தார்:

''என்னை விட்டு ஓடிவிடலாமென்று நீ நினைக்கிறாயா?

உன்னால் ஓட முடியுமா?

நான் உன் கழுத்தில் கைபோட்டு விடுவேன் ;
உன் இடுப்பைக் கைகளாகிய பாசத்தால் பிணைத்துவிடுவேன் ;
உன் கால்களைப் பிடித்து உன்னைத் தடுத்துவிடுவேன் ;
பிறகு அவற்றில் தலை கவிழ்ப்பேன்.
என்னை விட்டு ஓடிவிடலாமென்று நீ நினைக்கிறாயா ?
உன்னால் என்னை விட முடியுமா ?
நான் உன் இதழ்களில் என் கன்னத்தை ஒட்டவைப்பேன்.
அந்தக் கிண்ணத்திலுள்ள இன்னமுதத்தை அருந்தி, நீ
பித்தனாகி விடுவாய்.
என் கால்களில் தலையை வைப்பாய்.
என்னை விட்டு ஓடிவிடலாமென்று நீ நினைக்கிறாயா ?

—காமாக்ஷி

சர்மா இந்தக் கவிதையைப் படித்த ஒவ்வொரு தடவையும் புதுப் புதுச் சுவையை அநுபவித்தார். அந்தக் கணமே அவர் காமாக்ஷிக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினார் :

''தங்கள் கவிதையைப் படித்து என் மனம் படும் பாட்டை விவரித்துச் சொல்ல முடியாது. இருதயத்தில் எழுந்த தாகமொன்று என்னைச் சாம்பராக்கிக்கொண்டிருக்கிறது. அதை எப்படித் தணிப்பதோ, தெரியவில்லை. எந்த இடத்திலிருந்து இந்தத் தாகக் கனல் எழுந்ததோ அந்த இடத்திலிருந்தே இதைத் தணிக்கும் அமுதமும் கிடைக்குமென்று நம்புகிறேன். மனம் காற்றாடியைப்போல் தளைகளை அறுத்துக்கொண்டு பறக்கப் பார்க்கிறது. எந்த உள்ளத்திலிருந்து இந்த அருமையான கருத்துக்கள் உதித்தனவோ, அந்த உள்ளம் குன்றாக் காதலின் நிதியாக இருக்கவேண்டும் என்பதில் சந்தேகமே இல்லை. தன்னை ஸமர்ப்பணம் செய்வதிலேயே ஆனந்தமடையும் உயர்ந்த காதல் அது. நான் சத்தியமாகச் சொல்லுகிறேன் : இன்றுவரையில் நான் இப்படிப்பட்ட கவிதையைப் படித்ததில்லை. இது என் மனத்தில் புயலை உண்டாக்கிவிட்டது. என் மன அமைதியை இது குலைத்துவிட்டது. தாங்கள் ஓர் ஏழையின் கூரைக் குடிசையில் நெருப்பை வைத்துவிட்டீர்கள். ஆனால், இது வெறும் வேடிக்கை விளையாட்டாக இருக்கும் என்பதை என் மனம் ஒப்பவில்லை. இந்தச் சொற்களிலே, காதலின் துன்பங்களைச் சகித்துக்கொண்ட — வேட்கையாகிய நெருப்பில் தவித்த - ஓர் உள்ளம் மறைந்திருப்பதை நான் காண்கிறேன். தங்களைத் தரிசிக்கும்

பாக்கியம் கிடைக்குமாயின், அது நான் செய்த பெரும் புண்ணியமாகும். இந்தக் குடிசை, தங்களை ஆவலோடு வரவேற்கத் தவித்துக்கொண்டிருக்கிறது.

இப்படிக்கு
அன்புடன்.''

கடிதம் போட்ட மூன்றும் நாளே பதில் வந்தது. காமாக்ஷி மிகவும் பரிவோடு தன் நன்றியைத் தெரிவித்ததோடு, தான் வரப் போகும் நாளையும் குறித்திருந்தாள்.

2

இன்று காமாக்ஷி வரும் நன்னுள்.

சர்மா காலையிலேயே எழுந்து மழமழவென்று க்ஷவரம் செய்துகொண்டு, நேர்த்தியான கதர்வேஷ்டியும், வெண்மையான கதர் ஜிப்பாவும், மஞ்சள் நிறப் பட்டு அங்கவஸ்திரமும் அணிந்து கொண்டு, கமகமவென்று பரிமளம் வீச, காரியாலயத்தில் வந்து உட்கார்ந்தார். காரியாலயம் முழுவதையும் சுத்தம்செய்து அலங்கரிக்கச் சொன்னுர். தாழ்வாரத்தில் பூஞ்செடிகளும், மேஜையின் மேல் பூங்கொத்துக்களும் வைக்கச் சொன்னுர்.

வண்டி ஒன்பது மணிக்கு வருகிறது. இப்போது மணி எட்டரை. ஒன்பதரை மணிக்கு அவள் இங்கே வந்துவிடுவாள். இந்த மனக் கலக்கத்தில் சர்மாவுக்கு வேலையே ஓடவில்லை. அடிக்கடி கடிகாரத்தைப் பார்க்கிறுர். பிறகு கண்ணுடியில் தம் முகத்தைப் பார்த்துவிட்டு, அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவுகிறுர். மீசையில் நாலைந்து நரை மயிர்கள் இருப்பது இப்போதுதான் தென்படுகிறது. ஆனுல் அவற்றை அகற்ற இப்போது எவ்விதச் சாதனமும் இல்லை. 'பரவாயில்லை. இதனுல் ஒன்றும் முழுகிப் போய்விடாது. சிரத்தையோடு கூடிய காதல் தான் நிலையாக நிற்கும். இளைஞர்களின் காதல் அதிக விலை கொடுத்து வாங்கும் பொருள். ஆனுல் மகாத்மாக்களிடமோ அல்லது அதற்கு அண்மையில் உள்ளவர்களிடமோ வருவோரின் காதல் அதற்கு நேர் மாறுனது; அது சில பொருள்களை அவர் களிடமிருந்தே வாங்கிக்கொள்ளும். இளைஞர்கள் விலையுயர்ந்த பரிசுகள் கொடுத்துச் சாதிக்கும் காரியத்தை இந்த மகாத்மாக்கள் வெறும் ஆசீர்வாதத்தைக் கொண்டே சாதித்துவிடுவார்கள்' என்று சர்மா நினைத்தார்.

சரியாக ஒன்பதரை மணிக்கு வேலைக்காரன் ஒரு 'விஸிடிங் கார்டை'க் கொண்டு வந்தான். அதில், ''காமாக்ஷி'' என்று பொறித்திருந்தது.

சர்மா அவளை அழைத்து வருமாறு உத்தரவு போட்டுவிட்டு, மறுபடியும் ஒரு தடவை கண்ணுடியில் தம் முகத்தைப் பார்த்துக் கொண்டார். பிறகு ஒரு பெரிய புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு அதிலேயே ஒன்றிப்போய்ப் படிப்பவர் போல் அபிநயித்தார். ஒரு கணத்தில் காமாக்ஷி அறைக்குள் காலை வைத்தாள். சர்மாவுக்கு அவள் வருவதே தெரியவில்லை.

அவள் பயந்துகொண்டே அவர் அருகில் சென்ருள். அதே நிமிஷத்தில் சமாதி நிலையிலிருந்து விழித்துக்கொண்டவர்போல, அவர் திடுக்கிட்டு எழுந்து நின்று அவளை வரவேற்ருர். ஆனுல் அவர் கற்பனை செய்திருந்த அந்த வடிவம் அல்ல இது.

கன்னங்கரிய, பருமனுன, வயசான, சஞ்சல ஸ்திரீ ஒருத்தி சர்மாவின் எதிரே நின்ருள். அவள் அவரை விழுங்கிவிடுபவள் போல உற்றுப் பார்த்தாள்.

சர்மாவின் உத்சாகம் முழுவதும் - ஆசை முழுவதும் — தணிந்து போயிற்று. மாதக் கணக்காக அவர் குடித்துக்கொண்டிருந்த மனப்பால் இன்று அவர் வயிற்றில் அஜீர்ணத்தை உண்டாக்கி விட்டது. அவரால் ஒன்றும் பேசமுடியவில்லை. ''ஆசிரியர்களின் வாழ்க்கை எருதுமாடுகளின் வாழ்க்கையைப் போன்றது. தலை தூக்க ஓய்வில்லை. போதாக் குறைக்கு, வேலைமிகுதியால் என் ஆரோக்கியமே கெட்டுப் போயிருக்கிறது. நேற்றிரவு முதல் தலைவலி சகிக்க முடியவில்லை. தங்களுக்கு நான் என்ன வரவேற்பு அளிக்க முடியும் ?'' என்று மட்டும் சொன்ஞர்.

காமாக்ஷியின் கையில் ஒரு பெரிய காகிதக் கட்டு இருந்தது. அதை அவள் மேஜைமேல் எறிந்து, கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு, மிருதுவான குரலில், ''ஐயோ! இது என்ன பெரிய சங்கடமாகப் போய்விட்டதே! நான் என் தோழி ஒருத்தியைப் பார்க்க வந்தேன். அப்படியே வழியில் தங்களையும் தரிசித்துச் செல்லலாமென்று எண்ணினேன். ஆனுல் தங்களுக்கு உடம்பு சரியில்லையே. சில நாட்கள் இங்கே தங்கியிருந்து, தங்கள் தேகம் ஆரோக்கியம் அடைந்த பின்புதான் நான் போக வேண்டும். ஆசிரியத் தொழிலில் நான் தங்களுக்கு உதவி செய்வேன். தங்கள் ஆரோக்கியம் பெண்ணினத்துக்கு மிகவும் மகத்துவம் வாய்ந்த பொருளாகும். தங்களை இந்த நிலையிலே விட்டுவிட்டு நான் இப்போது போகவே முடியாது'' என்ருள்.

இதைக் கேட்டதும் சர்மாவுக்கு ரத்த ஓட்டமே நின்று விட்டது போலவும், நாடி விழுந்துவிட்டது போலவும் தோற் றியது. 'இந்த ஸ்திரீயோடு வாசம் செய்தால் வாழ்க்கையே நரகமாகிவிடும். கவிதை எழுதப் புறப்பட்டுவிட்டாள் இவள்!

எப்படிப்பட்ட கவிதை? ஆபாசம் நிறைந்தது; அதோடு இல்லை; அடியோடு அழுகிப்போனது; துர்நாற்றம் வீசுவது. ஓர் அழகியின் பேனுவிலிருந்து உதித்திருந்தால் அதே கவிதை காமபாணமாக இருக்கும். இந்தப் பிசாசின் பேனுவிலிருந்து பெருகி, அது சாக்கடைச் சேருகிவிட்டது. நான் கேட்கிறேன்: இவளுக்குக் கவிதை எழுத என்ன உரிமை இருக்கிறது? இவள் ஏன் இப்படிப் பட்ட கவிதை எழுதுகிருள்? இவள் எங்காவது ஒரு மூலையில் உட்கார்ந்து ராமபஜனை செய்வதுதானே? "என்னை விட்டு உன்ருல் ஓட முடியுமா?" என்று கேட்கிருள் இவள். "இவளிடம் எவன்தான் ஆகட்டும், ஏன் வருவான்? இவளைத் தூரத்திலிருந்தே பார்த்துவிட்டு ஓடமாட்டாரு?" என்று நான் கேட்கிறேன். என்ன கவிதையப்பா அது! தலையா, காலா - ஒன்றுமில்லை. சந்தமா, சீரா, தளையா - ஓர் இழவும் இவளுக்குத் தெரியாது. கவிதை எழுத ஆரம்பித்துவிட்டாள். இவளுடைய உடம்பில் கவிதை வாசம் செய்தால் கழுதைகூடப் பாடத் தொடங்கி விடுமே; ஒட்டகங்கூட நாட்டியமாடுமே! கவிதை பாடுவதற்கு அழகும் யௌவனமும் வேண்டும், இனிமை வேண்டும், நாசுக்கு வேண்டும் என்பதுகூட இந்த அறுதலிக்குத் தெரியவில்லையே. உடலோ பூதம்போல் இருக்கிறது: இரவில் எவனுவது பார்த் தால் பயந்து நடுங்கிப்போவான். இந்த அழகுக்கு, வெறியூட்டும் பாடல்கள் எழுதுகிருள். ஒருவனுக்கு என்னதான் பசியாக இருக்கட்டும்; சாணத்தைத் தின்பாரு? போதாக் குறைக்கு இந்தத் தடிச்சி இத்தனை பெரிய புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு வந்துவிட்டாள். இதிலும் அதே சாக்கடைச் சேறுதான் இருக்கும்!' என்றெல்லாம் சர்மா எண்ணமிட்டார்.

அவர் அந்தப் பெரிய கிரந்தத்தைப் பார்த்துக்கொண்டே, "நான் தங்களைக் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. இது ஒன்றும் பிரமாதம் இல்லை. இரண்டொரு நாட்கள் இளைப்பாறினுல் உடம்பு சரியாகிவிடும். தங்கள் தோழி தங்கள் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருப்பாள்" என்ருர்.

"தாங்கள் ஏன் இவ்வளவு சங்கோசப்படுகிறீர்கள்? நான் நாலைந்து நாட்கள் கழித்துப் போனுலும் ஒன்றும் முழுகிப்போய் விடாது."

"தாங்கள் இருக்கவேண்டிய அவசியமே இல்லையே!"

"தங்கள் எதிரிலேயே தங்களை ஸ்தோத்திரம் செய்வது சரியல்ல. ஆனுலும் சொல்லுகிறேன். தங்களிடம் நான் கண்ட குணங்களை எங்குமே பார்த்ததில்லை. என் கட்டுரைகளுக்கு ஆதரவு அளித்த முதல் கனவான் தாங்களே. இல்லாவிட்டால்

நான் அடியோடு ஆசையை இழந்திருப்பேன். தங்களுடைய தூண்டுதலின் பயனாகத்தான் நான் இத்தனை கவிதைகள் இயற்றி னேன். தங்களுக்கு இவற்றில் எது வேண்டுமோ வைத்துக் கொள்ளலாம். நான் ஒரு நாடகங்கூட எழுத ஆரம்பித்திருக் கிறேன். அதையும் சீக்கிரமே தங்கள் பார்வைக்கு அனுப்பி வைப்பேன். இதில் நாலைந்து கவிதைகள் படிக்கிறேன். கேட்கிறீர் களா? மறுபடியும் இப்படிப்பட்ட தருணம் எப்போது கிடைக் குமோ? கவிதைகள் எப்படி இருக்கின்றனவோ தெரியாது. ஆனால் தாங்கள் கேட்டு ஆனந்தம் அடைவீர்கள். முன்பு எழுதிய அதே வகையைச் சேர்ந்தவை.''

அவள் அவருடைய உத்தரவை எதிர்பாராமலே, உடனே புத்தகத்தைத் திறந்து கவிதைகளைப் படிக்க ஆரம்பித்தாள். சர்மாவுக்கு, யாரோ தம்மைச் செருப்பால் அடிப்பதுபோல் இருந்தது. ஆயிரம் கழுதைகள், காதுக்கு அருகே நின்றுகொண்டு பாடுவதுபோல அவருக்குத் தோன்றிற்று. பல தடவை அவருக்கு மயக்கம் வந்தது. காமாக்ஷியின் குரலில் குயிலின் இனிமை இருந்துங்கூட அது அவருக்குக் கடுமையாகத் தோற்றியது. உண்மையாகவே அவருக்குத் தலை வலித்தது.

கடைசியில் அவரால் பொறுக்க முடியாமல் போகவே, ''தங்கள் கவிதைகளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? இந்தக் கவிதைத் தொகுதியை இங்கேயே வைத்துவிட்டுப் போங்கள். நான் சாவகாசமாக அவற்றைப் படிப்பேன். இப்போது வேலை நிரம்ப இருக்கிறது'' என்றார்.

காமாக்ஷியும் இரக்கத்தோடு, ''தங்கள் ஆரோக்கியம் இவ்வளவு சீர்கெட்டிருந்தும், வேலைகளில் இப்படி முனைந்திருக் கிறீர்களே. தங்களைக் கண்டால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது'' என்றாள்.

''இது தங்கள் கிருபை.''

''நாளைக்குத் தங்களுக்கு ஒழிவு இருக்குமா? சற்று என் நாடகத்தைப் படித்துக் காட்ட எண்ணுகிறேன்.''

''ஐயோ! நான் நாளைக்குப் பிரயாகைக்குப் போக வேண்டுமே!''

''அப்படியானால் நானும் தங்களோடு வரட்டுமா? வண்டியில் படித்துக்கொண்டே வருவேன்.''

''எந்த வண்டியில் போவேனோ, நிச்சயமில்லை.''

''தாங்கள் எப்போது திரும்புவீர்கள்?''

''அதுவும் நிச்சயம் இல்லை.''

பிறகு அவர் டெலிபோனில் சென்று, "ஹலோ, நம்பர் 77 !" என்று பேச ஆரம்பித்தார்.

காமாக்ஷி அரை மணி நேரம் காத்திருந்தாள். ஆனால் சர்மா ஒரு கனவானோடு முக்கியமான விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தார் ; அவர் பேச்சு முடிவதாகவே தோற்றவில்லை.

நிராசையோடு காமாக்ஷி விடை பெற்றுக்கொண்டாள். சீக்கிரமே மீண்டும் வருவதாகச் சொல்லிப் போனாள்.

அவள் போனதும், சர்மா தாராளமாக மூச்சு விட்டார். அந்தப் புஸ்தகத்தை எடுத்துக் குப்பைக்கூடையில் எறிந்து விட்டு, "ஈசுவரா, மறுபடியும் இவள் தரிசனம் கிடைக்காமல் இருக்கவேண்டுமே ! வெட்கமற்றவள் ; கெட்டுப் போனவள் ; இன்று இவள் என் ஆனந்தத்தை யெல்லாம் கெடுத்து விட்டாளே !" என்றார், எரிச்சலோடு.

பிறகு போர்மனைக் கூப்பிட்டு, "காமாக்ஷியின் கவிதையை இந்த இதழில் போடவேண்டாம்" என்றார்.

போர்மன் ஸ்தம்பித்துப் போய், "பாரம் மெஷினில் இருக்கிறதே !" என்றார்.

"பரவாயில்லை, பாரத்தை இறக்கிப் போடுங்கள்."

"மிகவும் தாமதமாகுமே."

"ஆகட்டும் ; அந்தக் கவிதை நமக்கு வேண்டாம்."

21 NOV 1944
MADRAS

உண்மை

1

அந்த ரகசியம் அமுதனின் மனத்தில் நிலையாகப் பதிந்து விட்டது. அது வெளிப்படவே இல்லை. அவனுடைய பார்வையிலிருந்தோ வார்த்தையிலிருந்தோ அல்லது நடவடிக்கைகளிலிருந்தோ அந்தக் குறிப்பை அவள் அறியவில்லை. அண்டை அயலார்களுடன் எப்படிப் பழகவேண்டுமோ, இளம்பருவத் தோழமையை எப்படிப் பரிபாலிக்க வேண்டுமோ அதைத் தவிர அமுதனுக்கும் தனக்கும் வேறுவிதமான சம்பந்தம் இருக்கிறது அல்லது இருக்கக்கூடும் என்று பூர்ணிமை ஒருபொழுதும் ஐயமுறவே இல்லை.

அவள் குடத்தை எடுத்துக்கொண்டு கிணற்றங்கரைக்குப் போகும்போது அமுதன் எங்கிருந்தோ வந்துவிடுவான். அவள் கையிலிருந்து குடத்தை இழுத்துத் தண்ணீர் தூக்கிக் கொடுப்பான். அவள் மாட்டுக்குத் தீனி வைக்கும்போதும் அவள் கையிலிருந்து தவிட்டுக் கூடையை வாங்கிப்போய்த் தானே மாட்டுக்குத் தீனி வைப்பான்; செட்டியார் கடைக்கு அவள் சாமான் வாங்கப் போகும்போது அவளை இடைமறித்துத் தானே சாமான்களை அவளுக்கு வாங்கிக் கொடுப்பான்.

பூர்ணிமையின் வீட்டில் வேறு குழந்தையோ, புருஷனோ இல்லை. அவள் தந்தை பல வருஷங்களுக்கு முன்னமேயே காலஞ் சென்றுவிட்டார். அவள் தாய் 'பர்தா' வில் இருந்தாள். அமுதன் படிக்கப் போகும்போது பூர்ணிமையின் வீட்டுக்கு வந்து, "கடையிலிருந்து ஏதாவது சாமான் வாங்கி வரவேண்டுமா?" என்று கேட்டுக்கொண்டு போவான். அவனுக்கு வீடு வாசல்களும், நிலபுலன்களும், பசுமாடுகளும், தோட்டந் துரவுகளும் இருந்தன. அவன் யாருக்கும் தெரியாமல் தன் வீட்டில் உள்ள பொருள்களைப் பூர்ணிமைக்கு ஆதரவோடு கொண்டுபோய்க் கொடுப்பான். பூர்ணிமை இந்த உபகாரச் செய்கைகளை அவனுடைய பெருந்தன்மையெனக் கருதி அப்பொருள்களை உபயோகப்படுத்திக் கொள்வாள். இதைத் தவிர அவள் வேறு என்ன செய்வாள்? என்னதான் நினைப்பாள்? எதற்காக நினைக்கவேண்டும்? ஒரு விதமான ரத்த சம்பந்தமோ உறவோ இல்லாமற் போனாலும்

ஒரே கிராமத்தில் இருப்பவர்கள் கிராம வழக்கப்படி உடன் பிறந்தவர்களைப் போலப் பழகுகிருர்கள். ஆகையால் இத்தகைய விஷயங்களிலே தனிப்பட்ட அர்த்தம் ஒன்றும் இல்லை.

ஒரு நாள் பூர்ணிமை, ''நீ நாள் முழுவதும் பள்ளிக்கூடத்திலேயே இருக்கிருய்; எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது'' என்று சாதாரணமாக அவனுடன் சொன்னுள். அமுதனும் நேர்மையுடனே, ''என்ன செய்வது? பரீக்ஷை நெருங்கிவிட்டது'' என்று பதிலளித்தான்.

''நான் போய்விட்டால் உன்னை மறுபடியும் எப்படிக் காண முடியும்? நீ அப்புறம் என் வீட்டுக்கு எதற்காக வருகிருய்? எனக்கு இதே நினைவாக இருக்கிறது'' என்ருள் அவள்.

அமுதன் திடுக்கிட்டான்; ''எங்கே போகப் போகிருய்?'' என்று வினவினுன்.

பூர்ணிமைக்கோ வெட்கம்; ''உன்னுடைய தங்கைமார் எங்கே போனுர்களோ, எல்லாப் பெண்களும் எங்கே போகிருர்களோ, அங்கேதான்'' என்ருள்.

''அப்படியா!'' என்று நம்பிக்கையிழந்தவனைப் போலக் கூறினுன் அமுதன்.

அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. பூர்ணிமை எங்கேயாவது போய்விடுவாள் என்பதை அதுவரையில் அவன் நினைத்ததே இல்லை. அவ்வளவு தூரம் யோசிக்க அவனுக்கு ஒழிவுதான் ஏது?

அமுதன் எவ்வளவு விரைவில் இந்த ஆபத்தைக் கற்பனை செய்யக் கூடுமோ அதைவிட விரைவாக இது அவனுக்குச் செய்தியின் வடிவில் வந்துவிட்டது. பூர்ணிமையின் விவாகம் நிச்சயமாகி விட்டது. நல்ல பணக்கார இடம்; மதிப்பு உள்ள குடும்பம். பூர்ணிமையின் தாய் மிக்க மகிழ்ச்சியுடன் கல்யாணத்துக்கு இணங்கிவிட்டாள். அந்த ஏழைமை நிலையில் அவளுக்குப் பணமே எல்லாவற்றைக் காட்டிலும் பெரிதாக இருந்தது. பூர்ணிமை எல்லா விதத்திலும் சுகமாக இருப்பதற்குரிய வசதிகளெல்லாம் அந்த இடத்தில் அமைந்திருந்தன. அவள் வேண்டிய வரம் அவளுக்குக் கிடைத்துவிட்டது. முன்பு அவள் கவலையே உருவாக இருந்தாள். பெண்ணின் விவாகத்தைப்பற்றி நினைக்கும்போது அவள் நெஞ்சம் திடுக்கிடும். இப்போது இறைவன் அவளுடைய கவலைகளும் கலக்கங்களும் ஒரேயடியாகத் தொலைந்து போகும்படியாகக் கிருபை செய்துவிட்டான்.

அமுதன் இந்தச் செய்தியைக் கேட்டதும் பைத்தியம் பிடித்தவன்போல் ஆனுன். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை.

பூர்ணிமையின் வீட்டுக்கு ஓடினான். ஆனால் வழியிலேயே திரும்பி விட்டான். 'அங்கே போவதனால் பிரயோஜனம் என்ன? இதில் அவளுடைய குற்றம் என்ன? பிறருடைய பிழைதான் யாது?' என்று நினைத்து அவன் வீட்டுக்குத் திரும்பினான்; முகத்தை மூடிக்கொண்டு படுத்திருந்தான். பூர்ணிமை போய் விடுவாள். அவளைப் பிரிந்து அவன் எப்படி இருக்கமுடியும்? அவன் மனம் கலங்கியது. அவன் உயிரைத்தான் ஏன் வைத்திருக்க வேண்டும்? வாழ்க்கையிலே இனிமேல் என்ன சத்து இருக்கிறது? இத் தகைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தன. பிறகு அவை மாறின. புயலுக்குப் பின் வரும் அமைதியைப்போல அவன் மனத்திலும் ஒரு சாந்தம் குடிகொண்டது. அவன் வெறுப்படைந் தவன்போல் ஆனான். பூர்ணிமைதான் போகிறாளே; அவளோடு உறவு என்ன வேண்டியிருக்கிறது? அவளை இனி ஏன் மீண்டும் போய்ப் பார்க்கவேண்டும்? பூர்ணிமைக்கு இனி அவனைப்பற்றி என்ன கவலை? எப்பொழுதுதான் அவள் கவலையெடுத்துக் கொண்டாள்? அவன்தானே அவளுக்குப்பின் நாயைப்போல் வாலை ஆட்டிக்கொண் டிருந்தான்? பூர்ணிமையோ அவனுடன் சரியாக ஒரு வார்த்தைகூடப் பேசினதில்லை. இப்பொழுது அவளுக்குப் பெருமை இல்லாமலா போகும்? ஒரு லக்ஷாதி பதிக்கு மனைவியாகப் போகிறாள். ஜோராக ஆகட்டுமே! அமுதனும் பிழைத்திருப்பான்; சாக மாட்டான். இதுதான் இந்த யுகத்து அன்பின் முறை.

ஆனால் இந்த வேகமெல்லாம் மனத்திற்குள்ளேயே அமிழ்ந்து கிடந்தது; இது பயனற்ற வேகம். பூர்ணிமையின் தாயினிடம் சென்று, ''பூர்ணிமை எனக்கு உரியவள். அவள் என்னிடந்தான் இருப்பாள்'' என்று சொல்ல அவனுக்குத் தைரியம் ஏது? பிரமாத மாகிவிடாதா? ஊர் அமர்க்களப்படுமே! இம்மாதிரி விஷயங்கள் கிராமக் கதைகளிலே வந்திருக்கின்றனவா? அல்லது கிராம வாசிகள் இம்மாதிரியான சம்பவங்களைக் கண்டுதான் இருக் கிறார்களா?

பூர்ணிமையின் நிலைமை என்ன? அவள் நாள் முழுவதும் அவன் வருவானென்று வழிபார்த்துக் கொண்டிருந்தாள். 'வீட்டு வாசல் வழியே போகிறவன், உள்ளே ஏன் வரவில்லை? வழியிலே என்னைக் கண்டால், தன் நிழலையே கண்டு ஓடுபவன்போலப் பதுங்குகிறானே!' என்று அவள் யோசிப்பாள். குடத்தை எடுத்துக்கொண்டு கிணற்றங்கரைக்குப் போய் அவன் வரவை எதிர்நோக்கிக் காத்திருப்பாள். ஆனால் அவன் அங்கே தென் படவே மாட்டான்.

ஒரு நாள் அவள் அவன் வீட்டுக்கு, விடைபெற்றுக்கொள்ளும் பொருட்டுச் சென்றாள். ''இப்பொழுதெல்லாம் நீ ஏன் வருவதே

இல்லை?'' என்று அவனைக் கேட்டாள். உடனே அவளுடைய் தொண்டை அடைத்துக் கொண்டது. 'நாம் இந்த ஊரில் இன்னும் கொஞ்ச நாட்களே இருக்கப் போகிறோம்' என்ற ஞாபகம் அவளுக்கு வந்தது.

அமுதன் பேசாமல், அசையாமல் உட்கார்ந்திருந்தான். அவன் அலக்ஷ்யமாக, ''பரீக்ஷை நெருங்கிவிட்டது; ஒழிவில்லை'' என்று பதிலளித்தான்.

கொஞ்சநேரம் கழித்து மறுபடியும், ''நீ போகிறாய்போல் இருக்கிறது.......'' என்று பேசத் தொடங்கினான். 'இனி அன்பை வளர்த்துப் பயன் என்ன?' என்று அவன் சொல்லக் கருதினான். ஆனால் அது முட்டாள்தனமாக முடியுமென்று அவனுக்குத் தோற்றியது. நோயாளி ஒருவன் இறப்பவனாக இருந்தால், அவன் இறந்துவிடுவானென்ற காரணத்தினாலே வைத்தியம் செய்வதை விட்டுவிடுவார்களா? அதற்கு மாறாக அவனுடைய நிலைமை மிகக் கேவலம் ஆக ஆகத்தான் அதிகக் கவலையோடு அவனுக்கு மருந்து கொடுக்கிறார்கள். அவனுடைய அந்திம காலம் நெருங்கும்போதோ, அலைச்சலுக்கு எல்லையே இருப்பதில்லை.

அவன் பேச்சை மாற்றி, ''அவர்களும் பணக்காரர்களென்று கேள்விப்பட்டேன்'' என்றான். ஒருகால் இந்த வார்த்தைகள் அவளுடைய காதில் விழவில்லையோ அல்லது இதற்குப் பதில் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் கருதினாளோ? அவளுடைய காதுகளில் அவனுடைய முதல் வாக்கியமே ஒலித்துக் கொண்டிருந்தது.

அவள் துயரம் மிக்க பாவனையில், ''இதில் என் தவறு என்ன? நான் என் சொந்தக் கருத்துடனா போகிறேன்? போக வேண்டி யிருக்கிறது; ஆகையால் போகிறேன்'' என்றாள்.

இதைக் கூறியதும் அவள் முகம் வெட்கத்தினால் சிவந்து விட்டது. எவ்வளவு சொல்லவேண்டுமோ, அதற்கு மேலே சொல்லிவிட்டாள் அவள்.

அன்பிலும் சதுரங்க விளையாட்டைப்போலத் தந்திரங்கள் பல உண்டு. அவள் கூறிய இந்த வார்த்தைகளிலே ஏதாவது பொருள் இருக்கிறதா, இல்லையா என்று சோதிப்பவனைப்போல, அவன் அவளைக் கூர்ந்து நோக்கினான். அவனுடைய கண்களிலே இந்த ஓரத்திலிருந்து அந்த ஓரம்வரையில் பார்க்கும் வன்மை இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! எல்லாப் பெண்களுமே, மணம் முடிந்தவுடனே தம்முடைய உயிருக்கே ஆபத்து நேர்ந்தது போல வெறுப்பாகத்தான் பேசுவது வழக்கம். ஆனால் எல்லாப் பெண்களும் ஏதாவது ஒரு நாளில் நல்ல நல்ல நகைகள் அணிந்து

அழகிய சேலை கட்டிக்கொண்டு கணவர் வீடு சென்றுவிடுகிறார்கள். இவ் வார்த்தைகளினால், அவனுடைய மனத்திற்கு ஓர் ஆறுதலும் உண்டாகவில்லை. பின்பு பயத்துடனே, "இனி உனக்கு என் ஞாபகம் எதற்காக வரப்போகிறது ?" என்று வினவினான்.

அவனுடைய உடல் புழுங்கியது. அவனுக்கு அதிக வெட்கம். அறையை விட்டு ஓடிவிடலாமா என்றுகூட நினைத்தான். பூர்ணிமையை நிமிர்ந்து பார்க்க அவனுக்குத் தைரியம் இல்லை. ஒருவேளை அவள் அறிந்துகொண்டாளோ ?

பூர்ணிமை தலை குனிந்தாள் ; 'நீ என்னை அன்பற்றவளென்று நினைக்கிறாய் ? நான் குற்றமற்றவள். நீ என்மீது கோபம் கொள்கிறாய். இந்தச் சமயத்தில் நீ எனக்கு ஆறுதல் சொல்ல வேண்டியிருக்க என்மேல் சினங்கொள்ளுதல் தகுமா ? எனக்கு வேறு வழி ஏது ? நீயே சொல் : என் மனிதர்கள் என்று சொல்லக் கூடியவர்களே என்னை வேற்று வீட்டுக்கு அனுப்புகிறார்கள். அங்கே என்ன நடக்குமோ ? என் நிலைமை எவ்வாறு இருக்குமோ? என் உயிரை வாங்க இந்த ஒரு துன்பமே போதாதா ? நீயும் கோபித்துக்கொள்கிறாயே !' என்று அவள் தன் மனத்தோடு பேசிக்கொண்டாள் போலும் !

அவளுடைய தொண்டை மறுபடியும் அடைத்துக்கொண்டது. பூர்ணிமை இவ்வாறு துன்பப்படுவதையும் கலங்குவதையும் கண்டு, 'இவளிடத்திலும் வேதனை மறைந்திருக்கிறது' என்ற நம்பிக்கை அமுதனுக்கு உண்டாயிற்று. அவனுடைய கேவலத் தன்மையும் சுயநலமும் அவனுடைய முகத்திலே கரிபூசினாற்போல விளங்கின. பூர்ணிமை கூறிய சொற்களில் உண்மை நிறைந்திருந்தது. அதோடுகூடவே, எவ்வளவு விரட்டலும் எவ்வளவு பரிவும் நிரம்பியிருந்தன ! அயலாரோடு யார்தாம் தம் குறையைக் கூறுவார்கள் ? உண்மையிலே இந்த நிலைமையில் அவன் அவளுக்கு ஆறுதல் அளிக்கவேண்டும். அது அவனுடைய கடமை. அதை அவன் மகிழ்ச்சியோடு நிறைவேற்றியிருக்கவேண்டும். பூர்ணிமை அன்பின் புதிய லக்ஷ்யம் ஒன்றை அவன் முன்பு வைத்தாள். அவனுடைய விவேகம், அந்த லக்ஷ்யத்தினின்றும் தப்பிப் போக அவனை விடவில்லை. அன்பும் ஒருவகையான சுயநலத் தியாகமே என்பதில் என்ன சந்தேகம் இருக்கிறது ? அது மிகப் பெரிய தியாகம் ; உள்ளத்தை எரிக்க வல்லது.

"என்னை மன்னித்துவிடு, பூர்ணிமா ! நான் செய்தது பிழை ; முட்டாள்தனம்" என்றான் அவன்.

2

பூர்ணிமைக்கு விவாகமாகிவிட்டது. அமுதன் அவளுடைய விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்

திருந்தான். மணமகன் வயசானவன் ; தொந்திபோட்ட வயிறும் விகாரமான ரூபமும் உடையவன் ; கர்வி ; கெட்டவன். ஆனால் அமுதனே அவனை ஒரு தேவதையைப்போலவும் அவனுடைய புன்சிரிப்பால் ஸ்வர்க்கபதவி யடைவதுபோலவும் கருதி அவனுக்கு அன்புடன் பணிவிடை செய்துவந்தான். பூர்ணிமையோடு பேச அவனுக்கு ஒழிவே இல்லை. ஒழிவு தேட அவன் முயற்சி செய்யவும் இல்லை. அவன் பார்க்கும்போதெல்லாம் பூர்ணிமை அழுதுகொண் டிருந்தாள். அமுதன் பேசாமலே பார்வையாகிய பாஷையால் இயன்ற வரையில் அவளைத் தேற்றினான் ; ஆறுதல் சொன்னான்.

மூன்றாம் நாள் பூர்ணிமை அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகப் புக்ககம் புகுந்தாள். அன்றே அமுதன் கோயிலுக்குச் சென்று நிஷ்டையும் பக்தியும் நிறைந்த மனத்துடன், 'பூர்ணிமை எப்போதும் சுகமாக இருக்கவேண்டும் !' என்று சிவபெருமானைப் பிரார்த்தித்தான். புதிய துன்பத்திலே பயனற்ற பலவித எண்ணங் களுக்கு இடம் ஏது ? துன்பம் ஆத்மாவின் நோய்களைக் களைய வல்லது.

அவன் மனத்திலேமட்டும் ஒரு குறை இருந்தது : தன்னுடைய வாழ்க்கையே பாழடைந்துவிட்டதென்றும் இனி வாழ்க்கையிலே ஒரு லக்ஷ்யமும், ஓர் ஆசையும் இல்லையென்றும் அவன் கருதினான்.

3

மூன்று வருஷங்களுக்குப்பின் பூர்ணிமை மீண்டும் பிறந் தகத்துக்கு வந்தாள். இதன் நடுவிலே அமுதனுக்கும் விவாகமாகி விட்டது ; வாழ்க்கையாகிய ஏரிலே பிணைக்கப்பட்ட அவன், தன் வேலைகளைக் கவனித்துவந்தான். ஆனால் அவனுடைய மனத்தில் புலனாகாத உணர்ச்சி ஒன்று அமுங்கி இருந்தது ; அதற்குப் புலனாகும் உருவத்தைக் கொடுக்க அவனால் இயலவில்லை. அந்த உணர்ச்சி தர்மாமீடரில் இருக்கும் பாதரசத்தைப்போல் அவ னிடத்தில் பத்திரமாக இருந்தது. இப்போது பூர்ணிமை வந்து அதில் உஷ்ணத்தை உண்டாக்கிவிட்டாள். பாதரசம் ஏறி உச்சியின் எல்லைவரையில் சென்றுவிட்டது. அவள் மடியிலே இரண்டு வயசுக் குழந்தை ஒன்று அன்புடன் தவழ்ந்துகொண் டிருந்தது. அமுதன் அந்தக் குழந்தையை அல்லும்பகலும் தூக்கிக் கொண்டு திரிவான். காலையிலும் மாலையிலும் குழந்தையை எடுத்துக்கொண்டு உலாவப் போவான். கடைகளிலுள்ள விதவிதமான பொம்மைகளையும் மிட்டாய்களையும் அதற்கு வாங்கிக் கொடுப்பான். கிழக்கு வெளுத்தவுடனே அதற்கு ஹல்வாவும் பாலும் கொண்டுவருவான். அதைக் குளிப்பாட்டித் தலைமயிரை வாரி ஒழுங்குபடுத்துவான். அதன் உடம்பிலுள்ள சொறி சிரங்குகளைக் கழுவி அதற்கு மருந்து தடவுவான். இந்தப்

பணிவிடைகள் எல்லாவற்றையும் அவன் தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டான். குழந்தையும் அவனை விட்டுக் கணமும் பிரிய விரும்பாது. சில சமயங்களில் அவனிடமே படுத்துத் தூங்கி விடும். பூர்ணிமை வந்து கூப்பிட்டாலும் போகாது.

''நீ யாருடைய பிள்ளை ?'' என்று அமுதன் கேட்பான்.

''உன் பிள்ளை'' என்று சொல்லும் குழந்தை.

பூர்ணிமையின் அழகு இப்போது முன்னிலும் அதிகமாகக் கிளர்ந்தது. மொட்டு மலர்ந்து பூவாயிற்று. இப்போது அவளுடைய ஸ்வபாவத்தில் கொஞ்சம் பெருமையும் அகங்காரமும் கலந்துவிட்டன. செயற்கை அலங்காரங்களிலும் அவளுக்கு விருப்பம் உண்டாயிற்று. பொன் நகைகள் அணிந்து பட்டுத் துகில் புனைந்த அவளிடத்தில் கவர்ச்சி மிகுந்தது. அமுதனிடத்திலிருந்து அவள் தன்னைக் காத்துக்கொள்ள விரும்புகிறுளோ என்று கூடத் தோற்றியது. முக்கியமான வேலை இருந்தாலொழிய அவள் அவனிடம் பேசுவதில்லை. எப்போதாவது கொஞ்சம் பேசினாலும் அமுதனுக்கு ஏதோ ஒரு பெரிய உபகாரம் செய்வதுபோலப் பேசுவாள். அமுதன் அவளுடைய குழந்தைக்காக இவ்வளவு சிரமப்பட்டும், அது விரும்புவதை யெல்லாம் செய்தும், பூர்ணிமையின் நோக்கத்தில் அவன் செய்த அவ்வூழியங்களுக்கு மதிப்பே இல்லை என்றுதான் பார்ப்பவர்களுக்குத் தோற்றும். பணிசெய்து கிடப்பதே அமுதனது கடமைபோலும்! அவன் தன் கடமையைச் செய்துவந்தான். அதற்காக அவன் யாதொரு வந்தனத்துக்கும் நன்றியறிவுக்கும் உரியவனல்ல போலும்!

குழந்தை அழும்போது அவள், ''ஜாக்கிரதை! அழாதே. அழுதால் உன்னேடு மாமா பேசமாட்டார்'' என்று அதைப் பயமுறுத்துவாள். இதைக் கேட்டவுடனே குழந்தை அழுகையை நிறுத்திவிடும்.

அவளுக்கு ஏதாவது வேண்டியிருந்தால் அமுதனைக் கூப்பிட்டுக் கட்டளையிடுவாள். அமுதனும் ஒரு வேலைக்காரனைப்போல் அவளுடைய உத்தரவின்படி நடப்பான். அவளும் அமுதன் தனக்கு அடிமைச் சீட்டு எழுதிக்கொடுத்து விட்டதுபோலவே கருதுவாள்.

ஆறுமாதகாலம் பிறந்தகத்தில் இருந்துவிட்டுப் பூர்ணிமை மீண்டும் புக்ககம் சென்ருள். அமுதன் அவளைக் கொண்டுவிட ஸ்டேஷன்வரையில் வந்தான். அவள் வண்டியில் உட்கார்ந்ததும் அமுதன் குழந்தையை அவளுடைய கையில் கொடுத்துவிட்டான். அமுதனின் கண்களிலிருந்து நீர்த்துளிகள் பலபலவென்று உதிர்ந்தன. அவன் முகத்தைத் திருப்பிக்கொண்டு கைகளால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டான். தன் கண்ணீரை அவன்

பூர்ணிமைக்கு எப்படிக் காட்டுவான்? அவளுடைய கண்கள் ஏற்கனவே வாடியிருந்தன. ஆயினும் அவன் மனம் கேட்க வில்லை. மீண்டும் நாம் எப்போது சந்திப்போமோ என்ற சிந்தனையில் அவன் மூழ்கி யிருந்தான்.

பூர்ணிமை சிறிது அபிமானத்தோடு, "குழந்தை வெகு நாட்கள்வரையில் உனக்காக ஏங்கி அழுதுகொண் டிருக்கும்" என்ருள். அமுதன் அடைத்த குரலில், "என் உயிருள்ள அளவும் நான் இதன் உருவத்தை மறக்க இயலாது" என்ருன்.

"எப்பொழுதாவது ஒன்றிரண்டு கடிதங்கள் போட்டுக் கொண்டிரு."

"போடுவேன்."

"ஆனல், நான் பதில் எழுதமாட்டேன்; இதை அறிந்து கொள்."

"எழுதவேண்டாம். நான் கேட்கவில்லையே! ஆனல் மறக்காதே."

வண்டி புறப்பட்டுவிட்டது. அமுதன் அவள் இருந்த ஜன்னலையே நோக்கிக்கொண் டிருந்தான். வண்டி ஒரு பர்லாங் தூரம் சென்றதும், பூர்ணிமை ஜன்னலிலிருந்து தலையை நீட்டித் தன்னைப் பார்ப்பதையும், குழந்தையைக் கையில் தூக்கித் தன்னைச் சிறிது காண்பிப்பதையும் அவன் கண்டான்.

அமுதனின் உள்ளம் ஒரே கணத்தில் பூர்ணிமையிடம் பறந்து போக விரும்பியது. அவன் தன்னுடைய எண்ணம் நிறைவேறி விட்டதுபோலக் களிப்புற்ருன்.

4

அதே வருஷம் பூர்ணிமையின் தாய் இறந்துவிட்டாள். அச் சமயம் பூர்ணிமை பிரசவ அறையில் இருந்தாள். அவள் தன் தாயை அந்திம காலத்தில் பார்க்க முடியவில்லை. அமுதன் தன்னுல் இயன்றவரையில் பூர்ணிமையின் தாய்க்கு முழு சிகித் ஸையும் செய்தான். அவள் இறந்ததும் ஈமக்கடனைக்கூட அவனே செய்து முடித்தான். தன் தாய் இறந்தது போலவே கருதி அந்தணர்களுக்கும் பந்துக்களுக்கும் உணவளித்தான். அவன் தந்தை இறந்துவிட்டமையால் அவனே வீட்டுக்கு எஜமானுக இருந்தான். அவனைத் தடுப்பவர் யாரும் இல்லை.

பூர்ணிமை இனிமேல் பிறந்தகம் வர என்ன காரணம் இருக் கிறது? இனி அவளுக்கு ஒய்வுதான் ஏது? அவள் வீட்டிற்கு எஜமானி. வீட்டை யாரிடம் விட்டு வருவாள்? அவளுக்குப் பின்னும் புதல்வர்கள் பிறந்தனர். மூத்தவன் பெரியவனுகி

ஹைஸ்கூலில் பயின்றுகொண் டிருந்தான்; இளையவன் கிராம பாடசாலையிலே படித்துவந்தான். அமுதன் வருஷத்திற்கு ஒரு தடவை தன் ஆளை அனுப்பி அவளுடைய யோகக்ஷேமங்களை விசாரித்து வரச்செய்து அறிந்துகொள்வான். பூர்ணிமை எல்லா விதத்திலும் சுகமாகவும் கவலையின்றியும் இருக்கிறாளென்று கேள்வியுற்று அவன் மனம் சமாதானம் அடையும். அமுதனின் பிள்ளைகள்கூட இப்பொழுது வளர்ந்துவிட்டனர். வீட்டுத்தொல்லை அவனுக்குப் பெரிதாயிருந்தது. அவனுக்கு வயசும் நாற்பதுக்கு மேல் ஆகிவிட்டது. ஆயினும் பூர்ணிமையின் நினைவு இப்போதும் அவனுடைய உள்ளத்தின் ஆழத்திலே பத்திரமாக இருந்தது.

5

திடீரென்று ஒருநாள் பூர்ணிமையின் கணவன் இறந்து விட்டானென்ற செய்தி அமுதனுக்கு எட்டியது. அதனால் அவனுக்குத் துன்பமே உண்டாகவில்லை என்பதுதான் ஆச்சரியம். இந்தக் கொடிய கிழவனோடு பூர்ணிமை நடத்தும் வாழ்க்கையைக் கண்டு யாரும் பொறுமை கொள்ளாரென்று அவன் முன்பே நிச்சயித்திருந்தான். கடமையாலும் கற்பைக் காக்கும் சிந்தனையாலும் பிணைப்புண்ட அவள் தன் மனத்துன்பத்தை வெளியிடவில்லை. எல்லாவிதமான சுகங்களும் நிறைந்து கவலையற்றிருந்த போதிலும், வெறுத்தற்குரிய அந்த மனிதனிடத்திலே அவளுக்குக் காதல் இருக்குமென்று யார் கூறமுடியும்?

அவளுடைய மறைந்திருந்த உணர்ச்சிகள் மீண்டும் உயிர் பெறும். அவளிடத்தில் முன்போன்ற கூச்சம் இப்போது இராது. அவளுடைய நாவில் முன்னே இருந்த மௌன முத்திரையும் இப்போது மறைந்துவிடும். அவள் இப்போது விடுதலை பெற்றவள். வயசின் இயல்பினால் அவளிடத்தில் இரக்க உணர்ச்சியும் அதிகமாக இருக்கலாம்; முன்பு இருந்த கர்வமும், அலக்ஷ்யமும் எப்போதோ மலையேறியிருக்கும். முன்பு இருந்த பால்யத்திற்குப் பதிலாக, அன்பை ஏற்றுக்கொண்டு ஆதரிப்பதற்கும் விரும்புவதற்கும் அநுபவமுள்ள பெண்களிடம் காணப்படும் விஷயங்களெல்லாம் அவளிடத்தில் இப்போது நிரம்பியிருக்கும். பூர்ணிமையின் வீட்டுக்குப் போய்த் துக்கம் விசாரித்துவிட்டு அவளையும் அவன் தன்னுடனே அழைத்துவருவான். தன்னால் இயன்றவரையில் அவளுக்குப் பணிவிடை செய்வான். பூர்ணிமை அருகில் இருப்பதொன்றினாலேயே அவனுக்கு மகிழ்ச்சி உண்டாகும். தன்னை அவள் மறவாமல் ஞாபகம் வைத்துக்கொண்டிருப்பதை அவளுடைய வாயிலிருந்து அறிந்து அவன் மனம் பூரிக்கும். இப்போதும் அவள் சிறுபிராயத்தில் இருந்தது

போலவே அவனை நேசிப்பாள். இருபது வருஷங்களுக்கு முன் அவன் கண்ட பூர்ணிமையின் உருவம்: அவள் உடம்பு திரண்டு பருத்திருந்தது; கன்னம் சிவந்திருந்தது; மிருதுவான அங்கங்கள்; அமுதம் நிறைந்த குடத்தைப்போல் இருந்தது அவளுடைய நீண்ட மோவாய்க்கட்டை; அவளுடைய புன்சிரிப்பு மனத்தைக் கவர்ந்தது; மயக்கத்தை உண்டாக்கியது. அதே உருவம் சிறிது மாறுதலுடன் அவன் கண்களிலே புதைந்திருந்தது. பிரிவின் தனிமையை அநுபவித்த கண்களில் அந்த மாறுதல் அவனுக்கு முன்னிலும் இனிமையாகக் காணப்பட்டது. அந்த உருவத்தில் காலத்தின் அடையாளம் படிந்திருக்கலாம். ஆனால் பூர்ணிமையின் உருவத்தில் அழகுக்கும் குறைவுண்டாக்கக் கூடிய மாறுதல் இருக்கு மென்று அவன் கற்பனையிலும் கருதவில்லை. இச்சமயத்தில் அவன் அவளுடைய இனிய மொழிகளைக் கேட்பதற்கு ஆவல்கொண் டிருந்தானேயொழிய அவளது உருவத் தோற்றத்தில் அவனுக்கு அவ்வளவு ஆசை இல்லை. அவளுடைய அன்பு நிறைந்த பார்வை யையும் நம்பிக்கையையுமே அவன் பெரிதும் வேண்டினான். ஆண் மகனுக்குரிய கம்பீரத்தோடு இப்போது நடக்கவேண்டுமென்றும் பொறுப்பற்ற தன்மையினால் பூர்ணிமையின் அன்புணர்ச்சிக்கு இடையிலே அதிருப்தியை உண்டாக்கக் கூடாதென்றும் முன்பு தான் செய்த பிழையைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்றும் கருதினான்.

இவ்வளவும் அவனுடைய மனத்திரையிலே ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றி, அவனுக்குப் புதிய நம்பிக்கையையும் உத்ஸா கத்தையும் உண்டாக்கின.

6

பூர்ணிமை ஒருநாள் தற்செயலாகத் தன் சிறு குழந்தையுடன் தன் சொந்த வீட்டுக்கு வந்துவிட்டாள். விதவையாகிய அவ ளுடைய சிற்றன்னை தன்னுடைய தாயுடன் காலத்தைக் கழித்து வந்தாள். அவளும் இப்போது பூர்ணிமையின் வீட்டில் தங்க லானாள். இவ்வாறு அந்தப் பாழடைந்த வீடு மறுபடியும் குடி வீடாகிவிட்டது.

அமுதன் இந்தச் சமாசாரத்தைக் கேட்டவுடன் மிகவும் உத்ஸாகத்தோடு மதம் பிடித்தவனைப்போல அவளுடைய வீட்டுக்குச் சென்றான். அவன் தன் பால்யப்பருவ நினைவுகளை மனமாகிய பையில் ஜாக்கிரதையாக நிரப்பிக்கொண்டு போனான். தன் தோழனைக் கண்டு அவனோடு விளையாடுவதற்காக உடைந்த பொம்மைகளை எடுத்துக்கொண்டு ஓடும் ஒரு சிறு பாலகனின் நிலையை ஒத்திருந்தது அவன் நிலைமை.

ஆனால் அவளுடைய உருவத்தைக் கண்டவுடனே அவனுடைய முழு உல்லாஸமும் தணிந்துவிட்டது. அவனுடைய மனக்கோட்டைகளெல்லாம் இடிந்துவிட்டன. அவன் திகைத்துப் போய் நின்றான். பூர்ணிமை அவன் முன்பு தலைகுனிந்து நின்றாள். வெள்ளைப் புடைவையின் முன்றானையால் பாதி மறைக்கப்பட்டிருந்தது அவள் முகம். முதுகு வளைந்திருந்தது. புஜங்கள் நூலைப்போல் மெலிந்திருந்தன. கால்களின் பின்பாகத்தில் நரம்புகள் வெளியே தென்பட்டுக்கொண் டிருந்தன. கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகிக்கொண்டிருந்தது. முகம் வெளுத்திருந்தது. சிதையிலே வைக்கப்பட்ட பிணம் நிற்பதுபோலக் காணப்பட்டாள் அவள்.

''வாடா அப்பா! இவளுடைய நிலைமையைச் சிறிது பார். உலர்ந்து சார்க்குச்சியாகிவிட்டாள். ஒரு கணமாவது கண்ணீர் நிற்பதே இல்லை. ஒரே ஒரு வேளைமட்டும் உலர்ந்த ரொட்டிகளைச் சாப்பிடுகிறாள். பால், நெய், உப்பு, புளி எல்லாவற்றையும் விட்டுவிட்டாள். ஏகாதசி, ஞாயிற்றுக்கிழமை, மங்களவாரம் – இப்படி விரதங்கள் வேறே. தரையிலே பாயை விரித்துப் படுக்கிறாள். பொழுதுவிடிய ஒரு ஜாமத்துக்கு முன்னமே எழுந்து பூஜையும் பாராயணமும் செய்கிறாள். பிள்ளைகள் எவ்வளவோ சொன்னார்கள்; மற்றவர்களும் சொல்லிப் பார்த்தார்கள்; யார் சொல்லியும் அவள் கேட்கவில்லை. 'கடவுளே என் மாங்கல்யத்தை நீக்கிவிட்டபோது மற்ற எல்லாம் மித்தியை' என்று சொல்லுகிறாள். மனசிலே சாந்தி உண்டாக வேண்டும் என்று இங்கே வந்தாள்; இங்கும் அழுவதைத் தவிர வேறு வேலை இல்லை. 'கண்ணே, பூர்ணிமா! தலைவிதிப்படி நடந்து விட்டது; மனசைத் தேற்றிக்கொள். உனக்கு இறைவன் குழந்தைகுட்டிகளை அளித்திருக்கிறான். அவர்களைக் காப்பாற்று. ஈசுவரன் உனக்கு வேண்டிய ஸம்பத்தைக் கொடுத்திருக்கிறான். நீ நாலுபேருக்கு உணவளிக்கலாம். மனம் சுத்தமாக இருக்க வேண்டும். உடம்பை வருத்துவதனால் பயன் என்ன?' என்றெல்லாம் என்னால் ஆனவரையில் சொன்னேன். அவள் கேட்கவில்லை. ஒருவேளை நீ சொன்னால் கேட்பாளோ, என்னவோ?'' என்று கூறினாள் பூர்ணிமையின் சிற்றன்னை.

அமுதன் வெளிப்பார்வைக்கு அசைவற்றவன்போல் இருந்தான்; ஆனால் உள்ளே உள்ளத்தைப் பிளக்கும்படியான வேதனை மறைந்திருந்தது. எந்த அஸ்திவாரத்தின்மேல் அவன் தன் வாழ்க்கைக் கட்டடத்தைக் கட்ட ஆரம்பித்தானோ, அது சரிந்து விட்டது. ஜன்மம் முழுவதும் தான் எந்தப் பொருளை உண்மையெனக் கருதியிருந்தானோ அது வாஸ்தவத்திலே கானல் நீர்

அல்லது கனவு என்பதை அவன் இன்றே உணர்ந்தான். பூர்ணிமையின் கடுமையான அடக்கத்தையும் தவசிகளுக்குரிய ஆசாரத்தையும் கண்டு அவனுடைய உணர்ச்சிகளும் அன்பின் அலைகளும் நசித்தொழிந்தன. 'மண்ணைத் தெய்வமாக்கும் சக்தி மனத்துக்கு இருக்கிற தென்றால், மனிதனையும் தெய்வமாக்கும் வல்லமை அதற்கு உண்டு' என்ற ஒரு புதிய உண்மை அவனுக்கு இன்று புலனாயிற்று. வெறுக்கத்தக்க ஒரு மனிதனை - தன் கணவனை - பூர்ணிமை தேவனாக்கிப் பூஜித்துவந்தாள்.

''என்னைப்போன்ற தன்னலப்பித்தர்கள் தபஸ்வினிகளுக்கு என்ன ஆறுதல் கூறமுடியும், சித்தி? அவள் அடியிணைகளைப் பணிவதே நம் கடமை; அவளுக்குச் சமாதானம் சொல்வதல்ல'' என்று அமைதியுடனே பதிலளித்தான் அமுதன்.

''உன் குழந்தை இன்னும் உன்னைப்பற்றியே ஸதா கேட்டுக் கொண்டிருக்கிறது'' என்று முகத்திரையை விலக்கிக்கொண்டே கூறினாள் பூர்ணிமை.

ஜால வித்தை

"நீ ஏன் அவனுக்குக் கடிதம் எழுதினுய்?" என்று நீலா கேட்டாள்.

"எவனுக்கு?" என்ருள் மீனு.

"அவனுக்குத்தான்."

"நீ சொல்வது எனக்குப் புரியவில்லையே?"

"உனக்கு எப்படியடீ புரியும்! என்னை அவமானப்படுத்தி விட்டது போதாதென்று, தெருத் தெருவாக என் பெயரைச் சொல்லி முரசு அடிக்கிருனே, அவனேடு உறவு கொண்டாடுவது உனக்குத் தகுமா?"

"நீ சொல்வது தப்பு."

"நீ அவனுக்குக் கடிதமே எழுதவில்லையா?"

"அடியோடு இல்லை."

"அப்படியாளுல் நான் சொன்னது தப்பு; என்னை மன்னித்து விடு. நீ என் தங்கையாக இல்லாமலிருந்தால் இந்தக் கேள்வி யைக்கூட உன்னிடம் கேட்டிருக்கமாட்டேன்."

"நான் யாருக்கும் கடிதம் எழுதவில்லை."

"இதைக் கேட்டு எனக்கு மகிழ்ச்சி உண்டாகிறது."

"நீ ஏன் லேசாகச் சிரிக்கிருய்?"

"நானு?"

"ஆமாம், நீதான்."

"நான் கொஞ்சங்கூடச் சிரிக்கவில்லையே."

"எனக்கு என்ன, கண் குருடா?"

"நீயாக வேண்டுமென்றே இப்படிச் சொல்லுகிருய்."

"நீ ஏன் சிரித்தாய்? சொல்லு."

"உண்மையாகச் சொல்லுகிறேன்; நான் அடியோடு சிரிக்கவே இல்லையே."

"நான் என் கண்ணுல் பார்த்தேனே!"

"சரி, அப்படியாளுல் உனக்கு நம்பிக்கையுண்டாகும்படி நான் எப்படிச் சொல்வது?"

"நீ என் கண்களில் மண்ணைத் தூவுகிறாய்!"

"சரி, சிரித்தேன். அவ்வளவுதானே! நீ என்ன என் தலையையா வாங்கிவிடுவாய்?"

"பிறரைப் பார்த்துச் சிரிப்பதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது?"

"மீனா, உன் காலில் விழுகிறேன். நீ என்னை விட்டால் போதும். நான் அடியோடு சிரிக்கவே இல்லை."

"எனக்கும் தெரியும். நான் அப்படிப்பட்ட அடிமுட்டாள் அல்ல."

"நீ கெட்டிக்காரி என்பது எனக்குத் தெரியும்."

"நீ என்னை எப்போதும் பொய் சொல்லுபவள் என்றே எண்ணிக்கொண் டிருக்கிறாய்."

"நீ இன்று காலையில் எழுந்திருக்கும்போது யார் முகத்தில் விழித்தாய்?"

"உன் முகத்தில்தான்."

"நீ எனக்குக் கொஞ்சம் விஷம் கொடுத்துவிடுவதுதானே?"

"ஆமாம், நான்தான் கொலைகாரியாயிற்றே."

"நான் அப்படிச் சொல்லவில்லையே?"

"இன்னும் எப்படிச் சொல்லவேண்டும் என்கிறாய்? தமுக்கு அடித்துச் சொல்லவேண்டும் என்கிறாயோ? ஆமாம்; நான் கொலைகாரிதான். மதம் பிடித்தவள்தான். திரிதான். நீ எல்லா நற்குணங்களுக்கும் உறைவிடம்; சீதை; சாவித்திரி. இப்போ தாவது உனக்குச் சந்தோஷந்தானே? சரி, சொல்லிவிடுகிறேன்; நான் அவருக்குக் கடிதம் எழுதினேன். அதைப்பற்றி உனக்கு என்ன? நீ யார், அதைப்பற்றி என்னைக் கேட்க?"

"நீ எழுதியது நல்லதுதான்; நான் உன்னைக் கேட்டேனே, அதுதான் வாஸ்தவத்தில் என் முட்டாள்தனம்."

"என் இஷ்டம்; எனக்குப் பிரியமானவர்களுக்கு நான் கடிதம் எழுதுகிறேன்; இஷ்டப்பட்டவர்களோடு பேசுகிறேன். நீ யார் என்னைத் தடுப்பதற்கு? நீ நாள் தவறாமல் கட்டுக்கட்டாகக் கடுதாசிகள் எழுதுகிறாயே; உன்னை நான் ஏதாவது எப்போ தாவது கேட்டது உண்டா?"

"நீதான் வெட்கம், மானம் என்பதையே காற்றில் பறக்க விட்டுவிட்டாயே. என்ன இஷ்டமோ செய். உனக்கு உரிமை உண்டு."

"அப்படியா! நீ எப்போதிலிருந்தடி நாணமும் மடமும் அச்சமும் பயிர்ப்பும் உள்ளவளாகி விட்டாய்? அம்மாவிடம்

முறையிடலாமென்று நினைத்துக்கொண் டிருக்கிறாய்போல் இருக்கிறது. இங்கே யாரும் அதைப்பற்றிச் சட்டை செய்பவர்கள் இல்லை. நான் அவருக்குக் கடிதமும் எழுதினேன்; 'பார்க்'கில் போய்ச் சந்திக்கவும் சந்தித்தேன்; நேரில் பேசவும் பேசினேன். போய் எல்லாவற்றையும் அம்மாவிடம் சொல்லு; தாத்தாவிடம் சொல்லு; ஊர் முழுவதுங்கூடச் சொல்லிவிடு."

"விதைத்தவன் அறுப்பான். யாரிடந்தானுகட்டும், நான் எதற்காகப் போய்ச் சொல்லவேண்டும்?"

"ஓஹோ! அடி தைரியக்காரியே, 'திராக்ஷைப் பழங்கள் புளிக்கின்றன' என்று சொல்லிவிடுவதுதானே; அதற்கு ஏன் இவ்வளவு பயந்து சாகிறாய்?"

"நீ என்ன சொன்னாலும் அதுவே சரி."

"உனக்கு உள்ளம் கொதிக்கிறது!"

"கொதிக்கிறது, உன் தலை!"

"கொஞ்சம் அழு, பார்க்கலாம்!"

"நீதான் அழுவாய். நான் எதற்கு அழவேண்டும்?"

"எனக்கு அவர் ஒரு கைக்கடிகாரம் பரிசு அளித்திருக்கிறார்; காண்பிக்கட்டுமா?"

"நீயே பத்திரமாக வைத்துக்கொள். அதைப் பார்ப்பதால் என் கண் எரிச்சல் தீர்ந்துவிடாது."

"நான் கேட்கிறேன்: நீ ஏன் இப்படிக் கொள்ளியாக இருக்கிறாய்?"

"நான் உன்னைக் கண்டு பொறாமைப்பட்டால் என் கண்கள் குருடாகிவிடும்."

"என்னைப் பார்த்து நீ மன எரிச்சல் படப் பட, நானும் உன்னைச் சீண்டிக்கொண்டே இருப்பேன்."

"நான் எரிச்சல் படவே இல்லையே."

"உன் எரிச்சல்தான் ஸ்பஷ்டமாகத் தெரிகிறதே."

"சரி, நிச்சயதார்த்தம் எப்போது?"

"எரிச்சல் பட்டுச் செத்துப்போ!"

"உனக்குத் தாலி கட்டுவதைப் பார்த்துவிட்டு அல்லவா சாகவேண்டும்?"

"தாலி கட்டிக்கொள்ள வேண்டுமென்று ஆசை உனக்குத்தான்."

"அப்படியா! தாலி இல்லாமலா கல்யாணம் நடக்கும்?"

''அந்த மூடப் பழக்கங்கள் எல்லாம் உன்னோடு இருக்கட்டும். எனக்குக் காதல் ஒன்றே போதும்.''

''அப்படியானால் உண்மையாகவே நீ தாலி கட்டிக்கொள்ளப் போவதில்லையா? ஊரார் ஏதாவது......''

''எனக்கு யாரிடமும் பயம் இல்லை.''

''ஓ! அவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டாயா? அப்படி இருக்கும்போது, நீ அவனுக்குக் கடிதம் எழுதவில்லை என்று முதலில் ஏன் சாதனை செய்தாய்? வாதாடினாய்?''

''என் மனசிலுள்ள அந்தரங்கத்தைப் பிறருக்கு எதற்காகச் சொல்லவேண்டும்?''

''நான் உன்னை ஒன்றும் கேட்கவே இல்லையே, நீயாகத்தானே எல்லாவற்றையும் உளறிக் கொட்டினாய்?''

''நீ ஏன் சிரித்தாய்?''

''அந்தப் பாவி என்னை ஏமாற்றிக் கெடுத்ததுபோல் உன்னையும் கெடுப்பானே; என்னைப் போலவே உன்னையும் ஊர் முழுதும் தூற்றுவானே. அப்புறம் நீயும் என்னைப்போலவே அவன் பெயரைச் சொல்லி அழுவாயே என்பதற்காகவே சிரித்தேன்.''

''உன்னிடம் அவருக்குக் காதல் இருக்கவில்லை!''

''என்னிடத்திலா! யார் சொன்னது? என் கால்களில் அவன் தலைவைத்து அழுதான்; 'நீ இல்லாவிட்டால் நான் செத்துப் போவேன், விஷம் குடித்து இறப்பேன்' என்று சொன்னான்.''

''உண்மையாகவா சொன்னார்?''

''முற்றும் உண்மையாக.''

''என்னிடமும் அவர் இதைத்தான் சொல்லுகிறார்!''

''உண்மையாகவா?''

''சத்தியமாக.''

''இப்போதுதான் அவன் இரை தூவுகிறான்போல் இருக்கிறது என்றல்லவா நான் நினைத்துக்கொண்டிருந்தேன்!''

''அவன் வாஸ்தவத்தில்......''

''பெருத்த வேட்டைக்காரன்தான்.''

மீனா தலையில் கை வைத்த வண்ணம் சிந்தையில் மூழ்குகிறாள்.

மிஸ் பத்மா

1

சட்டங்களின் நுணுக்கத்தை ஆராய்ந்து வாதம் செய்து வெற்றியும் புகழும் பெறும் நிலையை அடைந்துவிட்ட பிறகு, மிஸ் பத்மாவுக்கு ஒரு புதிய அநுபவம் உண்டாயிற்று. தன் வாழ்க்கையில் சூனியத்தன்மை படர்ந்திருப்பதை அவள் உணர்ந் தாள். மணம் செய்துகொள்வது இயற்கைக்கு மாறுன ஒரு பந்தனம் என்று கருதி, தான் சுதந்தரமாகவே இருந்து வாழ்க்கை இன்பங்களை நுகரவேண்டுமென்று அவள் தீர்மானித்திருந்தாள். எம். ஏ. பட்டம் பெற்றதும், அவள் சட்டப் பரீக்ஷைக்குப் படித்துத் தேர்ச்சி பெற்று, வக்கீல் தொழில் பயில ஆரம்பித்தாள். அவள் அழகி ; இளவயசு மங்கை ; இனிமையாகப் பேசத் தெரிந்தவள் ; கற்பனைகளுக்கு இருப்பிடம். அவளுடைய போக்கிலே தடை ஏதும் இல்லை. பார்த்துக்கொண்டே இருக்கையில், கூட்டாளி களான இளம் வக்கீல்கள் யாவரும் பின் தங்கிவிட, அவள் மட்டும் மிகவும் முன்னல் போய்விட்டாள். இப்போது அவளுக்கு ஆயிரக் கணக்காக வருமானம் கிடைத்துவருகிறது. முன்னைப்போல் வழக்குகளுக்காக அவ்வளவு உழைப்பும் சிந்தனையும் செய்ய வேண்டியிருப்பதில்லை. பெரும்பாலான வழக்குகள் அவள் நன்கு அநுபவப்பட்டவையாகவே இருந்தன ; அவற்றின் விஷயமாக எவ்விதமான முன்னேற்பாடும் செய்துகொள்ளவேண்டிய அவசியமே இருக்கவில்லை. தன் சாமர்த்தியத்தின்மீதும் அவளுக்கு நம்பிக்கை உண்டாகிவிட்டது. வழக்குகளில் வெற்றி பெறுவ தற்குத் தேவையான சில சூத்திரங்களும் அவளுக்குத் தெரிந் திருந்தன. ஆகவே, இப்போதெல்லாம் அவளுக்கு நிரம்ப ஓய்வு இருந்தது. கதைகள் படிப்பதிலும், உலாவுவதிலும், சினிமாப் பார்ப்பதிலும், பெரிய மனிதர்களைச் சந்திப்பதிலும் அவள் பொழுது போக்கிவந்தாள்.

ஏதாவது ஒரு பொழுதுபோக்கை ஏற்படுத்திக்கொண்டால் தான் வாழ்வில் இன்பம் கிடைக்கும் என்று அவள் நினைத்தாள். பூஞ்செடிகள் வைத்து வளர்ப்பதை அவள் பொழுதுபோக்காகக் கொண்டாள். பல இடங்களிலிருந்து விதவிதமான விதை களையும் செடிகளையும் வருவித்து, அவை வளருவதையும்

பூப்பதையும் கண்டு அவள் சந்தோஷித்துவந்தாள். அப்போதுங் கூட, வாழ்க்கையில் தான் கண்ட சூனியத்தன்மையின் அநுபவம் அவளை விட்டு நீங்கவில்லை.

ஆண்களிடம் அவளுக்கு விரக்தி உண்டாகிவிட்டது என்றும் சொல்ல முடியாது. அவளைக் காதலித்தவர்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை. அழகும் இளமையும் மட்டும் இருக்கும் இடத்திலேயே இத்தகைய உபாசகர்களுக்குக் குறைவு இராது; இவளிடத்திலோ அழகோடும் இளமையோடுங்கூடப் பணமும் இருந்தது. ஆகவே, ரஸிகர்களின் கூட்டத்துக்குக் கேட்க வேண்டுமா! பத்மாவுக்குக் கேளிக்கையிலே வெறுப்பு இல்லை; பராதீன வாழ்வைத்தான் அவள் வெறுத்தாள்; விவாகத்தை வாழ்க்கையிலே ஒரு வியாபாரமாக்குவதைத்தான் வெறுத்தாள். சுதந்தரமாக இருந்து சுகபோகங்களை நுகர முடியும் என்ருல், அப்படியே ஏன் செய்யக்கூடாது? சுகபோகத்தில் அவளுக்கு எவ்விதமான அநீதியும் தோன்றவில்லை; அது ஒருவகையான உடற்பசி என்றே அவள் கருதினுள். இந்தப் பசியை, ஒழுங்காகவும் சுத்தமாகவும் இருக்கும் ஒரு கடையிலே போய்க்கூடத் தணித்துக்கொள்ளலாமே என்பது அவள் சித்தாந்தம். அதற்கேற்ப, ஒழுங்காகவும் சுத்தமாகவும் இருக்கக்கூடிய கடையை அவள் எப்போதும் தேடிக்கொண்டே இருந்தாள்.

கடையிலிருந்து தனக்கு வேண்டிய பொருளைத்தான் வாடிக்கைக்காரன் வாங்குவான். பத்மாவும் அந்தப் பொருளைத்தான் வாங்க விரும்பினுள். அவளைக் காதலிப்பவர்கள் டஜன் கணக்காக இருந்தார்கள்; அவர்களில் சிலர் வக்கீல்கள்; சிலர் புரொபஸர்கள்; சிலர் டாக்டர்கள்; ஜமீன்தார்கள் சிலர். ஆனுல் இவர்கள் யாவருமே வெறும் கேளிக்கைப் பிரியர்களாக இருந்தனர்; துளியாவது கவலை என்பதே இல்லை; சுவையுண்டதும் பறந்துபோகும் வண்டுகளாக இருந்தார்கள். அவள் நம்பிக்கை வைக்கக் கூடியவனுக ஒருவனேனும் இல்லை. தன் மனம் வெறும் சுகபோகத்தை மட்டுமே நாடவில்லை; வேறு ஏதோ ஒன்றையும் விரும்புகிறது என்பதை அவள் இந்தத் தருணத்தில்தான் அறிந்தாள். அந்தப் பொருள் என்ன? முற்றும் ஆத்ம சமர்ப்பணம். அது அவளுக்குக் கிடைக்கவில்லை.

அவளுடைய காதலர்களில் மிஸ்டர் பிரஸாத் என்பவன் ஒருவன் இருந்தான். பேரழகன், நிரம்பப் படித்தவன். ஒரு காலேஜில் புரொபஸராக இருந்தான். அவனும் சுகபோகத்தில் விடுதலையையே லக்ஷ்யமாகக் கொண்டவன். பத்மா அவன்மீதே கண்ணுக இருந்தாள். அவனைக் கட்டிப் பிடித்து வைத்து,

முற்றும் தன்னுடையவனுக்கிவிட விரும்பினாள். ஆனால், அவன் அவள் பிடிக்குள் அடங்கவில்லை.

மாலை நேரம். பத்மா உலாவப் புறப்படும்போது, எதிரே பிரஸாத் வந்துவிட்டான். உலாவப்போவது நின்றுவிட்டது. உலாவுவதைவிட அவனோடு பேசுவதில் பத்மாவுக்கு மிகுந்த ஆனந்தம். மேலும், இன்று அவள் அவனோடு ஏதோ ரகசியம் பேசுவதாக இருந்தாள். பல நாட்கள் சிந்தித்த பிறகு, இன்று அதைச் சொல்லியே விடுவது என்று அவள் தீர்மானித்திருந்தாள்.

அவனுடைய சுழலும் கண்களில் தன் கண்களைப் புதைத்துக் கொண்டு, ''நீங்கள் இங்கே என் பங்களாவிலேயே ஏன் வந்து இருக்கக்கூடாது?'' என்றாள் அவள்.

பிரஸாத் வேடிக்கை செய்யும் பாவனையில், ''அதற்குப் பலன், இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு நம்முடைய இந்தச் சந்திப்பும் நின்றுபோகும்'' என்றான்.

''நீங்கள் சொல்வது புரியவில்லையே? உங்கள் கருத்து என்ன?''

''நான் சொல்லுகிறேனே, இதுதான் கருத்து.''

''ஏன் அப்படி ஆகும்?''

''நான் என் சுதந்தரத்தை இழக்க விரும்பமாட்டேன்; நீ உன் சுதந்தரத்தை இழக்க விரும்பமாட்டாய். உன்னிடம் உன் காதலர்கள் வருவார்கள்; எனக்கு எரிச்சல் உண்டாகும். என்னிடம் என் காதலிகள் வருவார்கள்; உனக்கு எரிச்சல் உண்டாகும். நமக்குள்ளே மனஸ்தாபம் உண்டாகும்; விரோதம் ஏற்படும்; பின்பு நீ என்னை வீட்டைவிட்டுத் துரத்திவிடுவாய். வீடோ உன்னுடையதாகிவிட்டது. எனக்கு அது கெடுதலாகப் படும். பிறகு இந்த நட்பு வளருவதேது?''

இருவரும் சில நிமிஷம் மௌனமாக இருந்தனர். நிலைமையை மிகவும் தெளிவாகவும், எதிலும் பட்டுக்கொள்ளாமலும், வெளிப் படையாகவும் பிரஸாத் விளக்கிவிட்டான்; இனி ஏதும் சொல்ல இடமே இல்லை.

கடைசியில் பிரஸாத் தானே வழியைக் கண்டுபிடித்தான். ''இதோ பார் பத்மா; 'நான் உன்னுடையவன்; நீ என்னுடை யவள்' என்று நாம் இருவரும் பிரதிக்கினை செய்துகொள்ளாத வரையில், ஒன்றாக ஒத்திருக்க முடியாது'' என்றான்.

''நீ இந்தப் பிரதிக்கினையைச் செய்கிறாயா?''

''முதலில் நீ சொல்.''

''நான் பிரதிக்கினை செய்கிறேன்.''

"அப்படியானால், நானும் செய்கிறேன்."

"ஆனால், இந்த ஒரு விஷயத்தைத் தவிர மற்றவைகளி லெல்லாம் நான் சுதந்தரமாக இருப்பேன்."

"நானும் இது ஒன்றைத் தவிர மற்ற விஷயங்களில் சுதந் தரமாக இருப்பேன்."

"சரி; ஒப்புக்கொள்கிறேன்."

"நானும் ஒப்புக்கொள்கிறேன்."

"எப்போதிலிருந்து?"

"நீ எப்படிச் சொல்கிறாயோ அப்படி."

"நாளையிலிருந்தே ஆரம்பிக்கலாமென்று நான் சொல் கிறேன்."

"சரி; அப்படியே! ஆனால், நீ இதற்கு விரோதமாக நடந்து கொண்டால்?"

"நீ அப்படிச் செய்தால்?"

"நீ என்னை வீட்டிலிருந்து துரத்திவிடுவாய்; ஆனால் நான் உனக்கு என்ன தண்டனை கொடுக்க முடியும்?"

"நீ என்னைத் துறந்துவிடு; அவ்வளவுதானே?"

"அப்படியல்ல; அதனால் மட்டும் என் மனத்துக்குத் திருப்தி உண்டாகாது. அப்பொழுது நான் உன்னைச் சித்திரவதை செய்ய, கொலை செய்ய, விரும்புவேன்."

"உங்களுக்குக் கொஞ்சமாவது இரக்கமே இல்லையே, பிரஸாத்?"

"நாம் இருவரும் சுதந்தரமாக இருக்கும் வரையில் ஒருவரை மற்றவர் எதுவும் சொல்ல உரிமை இல்லை; ஆனால் ஒரு முறை பிரதிக்கினையில் கட்டுப்பட்ட பின்பு அதற்கு மீறி நடப்பதை நானும் பொறுத்துக்கொள்ள முடியாது; நீயும் பொறுத்துக் கொள்ள முடியாது. உன்னிடம் தண்டிப்பதற்கு ஏற்ற சாதனம் இருக்கிறது; என்னிடம் அது இல்லை. சட்டப்படி எனக்கு எவ்வித உரிமையும் இல்லை. நான் என் மிருகபலத்தைக்கொண்டு பிரதிக்கினைக்குத் தக்கபடி நடக்கவேண்டுமென்று உன்னை வற் புறுத்தலாம்; அது ஒன்றுதான் நான் செய்யக்கூடியது. ஆனால், உன்னுடைய இவ்வளவு வேலைக்காரர்களின் முன்பு நான் தனி யாக என்ன செய்ய முடியும்?"

"இந்த விஷயத்திலுள்ள பாதகங்களை மட்டுமே நீங்கள் பார்க்கிறீர்கள். நானே உங்களுடையவளாகிவிட்ட பின்பு, இந்த வீடும், வேலையாட்களும், சொத்து சுதந்தரமும் - எல்லாம் உங்களுக்கே சொந்தமானவை அல்லவா? சமூகத்தில், பொரு மையைவிட அதிகமாக வெறுக்கத்தக்க பாவம் வேறு இல்லை

என்பது நம் இருவருக்கும் தெரியும். உங்களுக்கு என்னிடம் காதல் உண்டா இல்லையா என்று நான் சொல்ல முடியாது; ஆனால் உங்களுக்காக நான் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளவும், எதையும் செய்யவும் தயாராக இருக்கிறேன்.''

''இதை நீ மனப்பூர்வமாகச் சொல்கிறாயா, பத்மா?''

''ஆம்; உண்மையான மனத்தோடு சொல்கிறேன்.''

''ஆனால், ஏனோ எனக்கு உன்மேல் நம்பிக்கை விழவில்லையே?''

''என்வரைக்கும் நான் உங்களைப் பூர்ணமாக நம்புகிறேன்.''

''நான் உன் வீட்டில் விருந்தாளியாக இருக்கமாட்டேன்; வீட்டுக்கு எஜமானனாகத்தான் இருப்பேன் என்பதை நினைவில் வைத்துக்கொள்.''

''வீட்டுக்கு எஜமானராக மட்டும் அல்ல; எனக்கு எஜமானராக இருங்கள். நான் உங்களுக்கு எஜமானியாக இருப்பேன்.''

2

புரொபஸர் பிரஸாதும் மிஸ் பத்மாவும் இப்போது ஒன்றாகவே ஆனந்தமாக வாழ்கிறார்கள். வாழ்வின் எந்த லக்ஷ்யத்தை அவர்கள் தம் மனத்தில் ஸ்திரப்படுத்தியிருந்தனரோ, அது உண்மையாயிற்று. பிரஸாதுக்கு மாதம் இருநூறு ரூபாய்தான் சம்பளம்; ஆனால் அவன் தன் சம்பளத்துக்கு இரட்டிப்பாகச் செலவழித்தாலும் பாதகமில்லை. முன்பெல்லாம் அவன் எப்போதாவது ஒரு சமயம் மதுபானம் செய்வது உண்டு; இப்போதெல்லாம் அவன் இரவும் பகலும் மதுவிலேயே மூழ்கிக் கிடக்கிறான். இப்போது அவனுக்குத் தனியாகக் 'கார்' இருக்கிறது; தனியாக வேலையாட்கள். விலையுயர்ந்த விதவிதமான சிங்காரப் பொருள்களை அவன் வாங்கிவரச் சொல்வான்; பத்மா மிகச் சந்தோஷத்தோடு அவனுடைய வீண் செலவுகளைத் தாங்கி வருகிறாள். அல்ல, இது தாங்கிவரும் விஷயமே அல்ல; அவனுக்கு நல்ல உடுப்புக்களை அணிவித்து, ஆடம்பரமான வேஷத்தில் அவனைப் பார்ப்பதில் அவளுக்கு ஆனந்தம்.

புரொபஸர் பிரஸாதிடம் இப்போது இருக்கும் கைக்கடிகாரத்துக்கு ஈடானது, நகரத்தில் பெரிய பெரிய ஜமீன்தார்களிடங்கூட இராது. பத்மா அவனிடம் தாழ்ந்து போகப் போக, அவன் மேலும் மேலும் அவளை அமுக்கிக்கொண்டே இருக்கிறான். சில சமயம் அது அவளுக்குப் பிடிப்பதில்லை; ஆயினும், தனக்கே தெரியாத ஏதோ காரணத்தினால் அவள் அவனுக்கு வசமாகிவிட்டாள். பிரஸாத் ஒரு நிமிஷம் சோர்வுற்றாலோ கவலையுற்றாலோ, அவள் மனம் அலைபாய்கிறது. அவனைப்பற்றி ஊரில்

பலவிதமான பேச்சுக்கள் ;-பலவிதமான நிந்தனைகள். அவளுடைய பழைய காதலர்கள் நேரிலே அவளைச் சீண்டி வயிற்றெரிச்சலைக் கிளப்புவார்கள்; ஆனால், பிரஸாத் அருகில் வந்தவுடனே அவள் யாவற்றையும் அறவே மறந்துவிடுவாள். பிரஸாத் அவள்மீது தன் முழு ஆதிக்கத்தையும் செலுத்தினான். தான் அப்படிச் செய்வது அவனுக்கு நன்றாகத் தெரியும். கூரிய பார்வைகொண்டு, பத்மாவின் குணதோஷங்களை அவன் பயின்றிருக்கிறான்; ஆகவே அவளைத் தனக்கு முற்றும் வசமாக்கிவிட்டான்.

ஆனால், அரசியலில் அதிகாரத்தைத் துருபயோகப்படுத்துவதுபோலவே, காதல் விஷயத்திலும், தம் உரிமையைக் கோணல் வழியில் செலுத்துபவர்கள் இருக்கிறார்கள். பலவீனர்கள் அவர்களுக்குத் தண்டம் தொலைக்கவேண்டி யிருக்கிறது. சுயமதிப்புள்ள பத்மா இன்று பிரஸாதுக்கு அடிமையாகி யிருந்தாள். அவளுடைய பலவீனத்தைப் பயன்படுத்திக்கொள்ள அவன் தவறுவானா? ஆணியின் மெல்லிய கூர்முனையை அவன் முதலில் பதித்துவிட்டான்; பிறகு மிகத் திறமையாக அதை மேலும் மேலும் உள்ளே அடித்துக்கொண்டு போனான். இரவில் அவன் மிகவும் நேரங் கழித்து வீட்டுக்கு வரத் தலைப்பட்டான். பத்மாவை அவன் எங்கும் தன்னோடு அழைத்துப் போவதில்லை; தனக்குத் தலைவலி, கால்வலி என்று ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லுவான். அவள் வெளியே உலாவப் போனதும், காரை எடுத்துக்கொண்டு பறந்துவிடுவான். இப்படியே இரண்டு ஆண்டுகள் கடந்தன. பத்மா கர்ப்பம் தரித்தாள். அவள் உடலும் பருக்க ஆரம்பித்தது. அவளுடைய எழிலில் முன் போன்ற புதுமையும் மயக்கும் இல்லை. பழகிப் பழகிப் பாலும் புளித்துத் தானே போகிறது?

ஒரு நாள் இப்படித்தான் பத்மா வெளியே உலாவிவிட்டுத் திரும்பி வரும்போது பிரஸாதைக் காணவில்லை. அவளுக்கு எரிச்சலாக வந்தது. சில நாட்களாகவே அவனுடைய நடவடிக்கை மாறிவருவதை அவள் கவனித்துக்கொண்டுதான் இருந்தாள். இன்று எப்படியாவது அவனிடம் மனம் விட்டுக் கேட்டுவிடுவது என்று தீர்மானித்து, அதற்கு வேண்டிய தைரியத்தைச் சேகரித்தாள். மணி பத்து அடித்தது; பதினொன்று ஆயிற்று; பன்னிரண்டும் ஆகிவிட்டது; அவன் வரவை எதிர்பார்த்து அவள் உட்கார்ந்திருந்தாள். சோறு சில்லிட்டுப் போயிற்று; வேலைக்காரர்கள் தூங்கிவிட்டனர். அவள் அடிக்கடி எழுந்து வாசலுக்கு வந்து, அவன் வருகிறானா என்று பார்ப்பாள். கடைசியில், ஒரு மணி சுமாருக்கு அவன் வீடு வந்து சேர்ந்தான்.

பத்மா தைரியத்தைச் சேகரித்திருந்தது வாஸ்தவம்; ஆனால் அவன்முன் போகும்போதே அவள் தன் பலவீனத்தை உணர்ந்தாள். ஆயினும் சற்றுக் கடுமையான குரலில், "இன்று ஏன் உங்களுக்கு இவ்வளவு நேரம்? மணி என்ன ஆயிற்று என்று ஏதாவது தெரியுமா?" என்று கேட்டாள்.

அந்தச் சமயத்தில், அவளைக் கண்டபோது கோரமே உருவெடுத்தாற்போல இருந்தது அவனுக்கு. காலேஜ் மாணவி ஒருத்தியோடு அவன் சினிமாப் பார்த்துவிட்டு வந்திருந்தான். "நீ பாட்டுக்குச் சுகமாகத் தூங்கியிருக்கவேண்டும். இப்போது உள்ள நிலையில் உனக்கு நிரம்ப ஓய்வு தேவை" என்றான் பத்மாவிடம்.

பத்மாவின் தைரியம் சிறிது வலுத்தது; "அதெல்லாம் இருக்கட்டும்; நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள். என்னை நீங்கள் நரகத்துக்கு அனுப்பிவிடுங்கள்" என்றாள்.

"அப்படியானால் நானும் உன்னோடு நரகத்துக்கு வரலாமோ இல்லையோ?"

"சில நாட்களாக உங்கள் குணமே மாறிக்கொண்டிருப்பதை நான் பார்த்துத்தான் வருகிறேன்."

"உன்னுடைய கண்களின் ஒளி சற்று அதிகமாகியிருக்கும்!"

"நீங்கள் எனக்குத் துரோகம் செய்வதைத் தெளிவாகப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன்."

"நான் என்னை உனக்கு ஒன்றும் விற்றுவிடவில்லை; உனக்கு என்னைப் பிடிக்காவிட்டால், இப்போதே வெளியே போகத் தயார்."

"எதற்காக இந்த மிரட்டல்? நீங்கள் இங்கே வந்து பெரிய தியாகம் ஒன்றும் செய்துவிடவில்லை."

"நான் தியாகம் செய்யவில்லையா! உனக்கு எவ்வளவு அசட்டுத் தைரியம் இருந்தால் இதைச் சொல்லுவாய்? நானுந்தான் பார்க்கிறேன்: உனக்கு ஒன்றும் தலைகால் தெரியவில்லை. இவனை நாம் முடவனாக்கிவிட்டோம் என்று நீ நினைக்கிறாய்; ஆனால் இதே நிமிஷம் உன்னை உதறித் தள்ள நான் தயாராக இருக்கிறேன்; இதே நிமிஷம், இதே நிமிஷம்!"

பத்மாவின் தைரியம் அணைந்துபோயிற்று. பிரஸாத் தன் சாமான்களை எடுத்துப் பெட்டியில் வைத்துக்கொண்டிருந்தான். அவள் அவனிடம் சென்று, இரக்கமான குரலில் பேசலானாள்: "உங்களுக்கு இத்தனை கோபம் வர, நான் அப்படி ஏதும் சொல்லவில்லையே. இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தீர்கள் என்று சாதாரணமாகத்தானே கேட்டேன்? எனக்கு இந்த உரிமையைக்

கூட நீங்கள் கொடுக்க முடியாதா? உங்கள் விருப்பத்துக்கு மாருக நான் ஏதும் செய்வதில்லே; அப்படி இருந்தும், எடுத்ததற் கெல்லாம் என்னே மிரட்டுகிறீர்கள். என்மீது உங்களுக்குக் கொஞ்சமும் இரக்கம் இல்லையா? உங்களுடைய அநுதாபம் சிறிதளவாவது எனக்குக் கிடைக்கத்தானே வேண்டும்? உங்களுக்காக நான் என்ன வேண்டுமானுலும் செய்யத் தயாராயிருக்கிறேனே! இன்று நான் இந்த நிலைமையில் இருக்கும்போது, என்னே உதறித் தள்ளிவிட்டு........."

அவளுக்கு நெஞ்சு அடைத்துக்கொண்டது; மேஜைமீது தலையைச் சாய்த்து விக்கி விக்கி அழலானுள்.

முழு வெற்றியும் பிரஸாதுக்கே கிடைத்தது.

3

இந்தத் தருணத்தில், பத்மாவுக்குத் தாய்மை சங்கடமான நிலையாக இருந்தது. கவலே அவளே வாட்டிவந்தது. சில சமயம் பயத்தினுல் நடுநடுங்குவாள்; பச்சாத்தாபப்படுவாள். பிரஸாதின் தான்தோன்றித்தனம் நாளுக்கு நாள் வளர்ந்தது. என்ன செய்வதென்றே அவளுக்குத் தெரியவில்லே. நிறைப்பிள்ளேத் தாய்ச்சி; கோர்ட்டுக்குப் போவதில்லே. நாள்முழுதும் தனியே உட்கார்ந்திருப்பாள்.

பிரஸாத் சாயங்காலம் வருவான்; தேநீர் அருந்திவிட்டு மீண்டும் பறந்துவிடுவான்; பிறகு, இரவில் பன்னிரண்டு மணிக்கு முன்னுல் திரும்பமாட்டான். அவன் எங்கே போகிருன் என்பதும் அவளுக்குத் தெரியாமலில்லே. தன்னேக் கண்டாலே அவனுக்கு வெறுப்பு என்பதும் தெரியும். பூர்ண கர்ப்பம்; வெளுத்த முகம்; கவலே, ஐயம், சோர்வு – இவ்வளவும் இருந்துங்கூட, அவனேத் தன் அணிகளாலும் ஆபரணங்களாலும் பிணித்துவைக்க அவள் முயன்ருள். ஆனுல், அவளுடைய முயற்சி வலுக்க வலுக்க, அவனுடைய மனத்தில் வெறுப்பும் வலுத்துக்கொண்டே வந்தது. இந்த நிலேயில் அவளுடைய அலங்காரங்கள் பின்னும் கோரமாக அவனுக்குத் தோற்றின.

பத்மா பிரசவவேதனேப்பட்டுக்கொண்டிருந்தாள்; பிரஸாத் இருக்குமிடம் தெரியவில்லே; அவளருகில் நர்ஸ் இருந்தாள்; லேடி டாக்டர் இருந்தாள்; ஆனுல் அவன் இல்லாதது அவளுடைய வேதனேயைப் பின்னும் பயங்கரமாக்கியது.

குழந்தையை மடியில் கண்டதும் அவள் உள்ளம் மலர்ந்தது. ஆனுல் தன் முன்னுல் பிரஸாத் இல்லாமற் போகவே, குழந்தையைப் பாராமல் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். இனிய கனியில் புழுப்பட்டாற்போல ஆயிற்று.

பிரசவ அறையில் ஐந்து நாட்கள் இருந்துவிட்டு, சிறையிலிருந்து விடுபடுவதுபோல, பத்மா வெளியே வந்தாள். இப்போது உருவிய கத்தியைப்போல இருந்தாள் அவள். தாயானதும், தன்னிடத்தில் ஓர் அற்புதமான சக்தியை அவள் உணர்ந்தாள்.

வேலைக்காரனிடம் ஒரு 'செக்'கைக் கொடுத்து, பாங்கிக்கு அனுப்பினாள். பிரசவ சம்பந்தமான பல பாக்கிகளைத் தீர்க்க வேண்டியிருந்தது. அவன் வெறுங்கையோடு திரும்பி வந்தான்.

"பணம் எங்கே?" என்றாள் பத்மா.

"பாங்கிக் குமாஸ்தா சொன்னாரம்மா; பணத்தையெல்லாம் ஐயா வாங்கிக்கொண்டு போய்விட்டாராம்."

பத்மாவின் நெஞ்சில் குண்டு பட்டாற்போல இருந்தது. இருபதினாயிரம் ரூபாயை அவள் உயிரைப்போலச் சேமித்து வைத்திருந்தாள், இந்தக் குழந்தைக்காக. அந்தோ! வெளியே போய் விசாரித்ததில், காலேஜ் மாணவி ஒருத்தியை அழைத்துக் கொண்டு பிரஸாத் இங்கிலாந்துக்குப் பயணம் செய்ததாகத் தெரிந்தது. மனக் கொதிப்போடு அவள் வீட்டில் நுழைந்தாள்; பிரஸாதின் படத்தை எடுத்துத் தரையில் வீசியெறிந்து, அதைக் கால்களால் நொறுக்கினாள்; அவனுடைய சாமான்களையெல்லாம் எடுத்துக் குவித்து, அவற்றிற்குத் தீ வைத்தாள்; அவன் பெயரைச் சொல்லிக் காறித் துப்பினாள்.

ஒரு மாதம் கடந்தது. தன் பங்களாவின் வாசலில், பத்மா குழந்தையை வைத்துக்கொண்டு நின்றிருந்தாள். இப்போது அவளுடைய கோபம், சோகம் நிரம்பிய ஆசாபங்கமாக மாறியிருந்தது. குழந்தையிடம் சில சமயம் இரக்கமும், சில சமயம் அன்பும், சில சமயம் வெறுப்பும் காட்டுவாள். சாலையில் ஓர் ஐரோப்பிய மங்கையும் அவள் கணவனும் தம் குழந்தையைச் சிறு வண்டியில் உட்காரவைத்துத் தள்ளிக்கொண்டே போய்க் கொண்டிருப்பதை அவள் கண்டாள். பொறாமை நிரம்பிய பார்வையோடு, அந்தப் பாக்கியசாலிகளான தம்பதிகளைப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் துளும்பியது.

மனநிலை

1

ஓர் அழகி, இளநங்கை, காலைவேளையில் காந்தி பார்க்கில் உள்ள பளிங்குக் கல் மேடைமீதில் படுத்துத் தூங்குகிருள். இந்தச் செய்தி யாரைத்தான் உலுக்காது? எத்தனையோ அழகிகள் பார்க்கில் உலாவ வருகிருர்கள்; சிரிக்கிருர்கள்; ஓடுகிருர்கள்; பூஞ்செடிகளோடு விளையாடுகிருர்கள். இவர்களையெல்லாம் யாரும் கவனிப்பதில்லை. ஆனல், ஓர் இளநங்கை பாதையை ஒட்டியுள்ள மேடைமீது தன்னையறியாமல் தூங்குவது அசாதாரணமான விஷயம்; யாரும் அவளைப் பார்க்காமல் செல்வதில்லை. பார்க்கிலுள்ள அந்தப் பாதைவழியே பலர் போகின்றனர். கிழவர்களாகட்டும், இளைஞர்களாகட்டும் - யாராக இருந்தாலும், கணப்பொழுது அங்கே திகைத்து நிற்கிருர்கள்; அந்தக் காட்சியை ஒரு பார்வை பார்த்துவிட்டுத்தான் மேலே நடக்கிருர்கள். இளைஞர்கள் ஏதோ ரகசியத்தைக் கற்பனை செய்துகொண்டு நகைத்தவாறு செல்கின்றனர்; கிழவர்கள் ஏதோ கவலைப்பட்டவர்களாய்த் தலையை ஆட்டிக் கொண்டு போகிருர்கள்; இளவயசு மங்கையர் வெட்கத்தால் தலை குனிந்துகொண்டு நடக்கிருர்கள்.

2

வசந்தனும் ஹாசிமும் 'நிக்கரு'ம் 'பனியனு'ம் அணிந்து வெறுங் காலோடு ஓடுகிருர்கள். கிறிஸ்துமஸ் விடுமுறையில் 'ஒலிம்பியன் ரேஸ்' நடக்கப்போகிறது. இருவரும் அதற்காக ஒத்திகை நடத்துகிருர்கள். ஓடிவந்தவர்கள் இருவரும் இந்த இடத்தை அடைந்ததும் நின்றுவிடுகிருர்கள். ஓரக்கண்ணுல் அந்த மங்கையைப் பார்த்துவிட்டுத் தமக்குள்ளே ஆலோசனை செய்கிருர்கள்.

''இவளுக்குப் படுத்துத் தூங்க வேறு எங்கும் இடம் கிடைக்கவில்லையா?'' என்கிருன் வசந்தன்.

"இவள் வேசிப் பெண்போல இருக்கிறது'' என்று பதில் சொல்லுகிருன் ஹாசிம்.

''வேசிப் பெண்கள்கூட இவளைப்போல இவ்வளவு வெட்கங் கெட்டவர்களாக இருக்கமாட்டார்கள்.''

"வேசிப் பெண் வெட்கங் கெட்டவளாக இல்லையென்றால், அவள் வேசிப் பெண்ணே அல்ல."

"உனக்குத் தெரியாது, ஹாசிம். பல விஷயங்களிலே குடும்பப் பெண்களும் வேசிகளும் ஒரேவிதமாகத்தான் நடந்து கொள்கிறார்கள். எந்த வேசியும் சாதாரணமாக நடுத்தெருவில் படுத்துத் தூங்க விரும்ப மாட்டாள்."

"தேக சௌந்தர்யந்தான் அழகை எடுத்துக் காட்டும் புதிய கலையாக இருக்கிறது!"

"மறைத்து வைப்பதிலேதான் கலையழகு இருக்கிறது; எடுத்துக் காட்டுவதிலே அல்ல. இந்த ரகசியம் வேசிக்கு நன்றாகத் தெரியும்."

"அவள் மறைத்து வைப்பதெல்லாம், தன்னிடம் பிறருக்குக் கவர்ச்சியூட்டத்தான்."

"இருக்கலாம். ஆனால் இவள் இங்கே தூங்குவதனாலேயே வேசிதான் என்று தீர்மானித்துவிட முடியாது. இவள் நெற்றியிலுள்ள குங்குமப் பொட்டைப் பார்த்தால், குடும்பப் பெண் என்றே தோற்றுகிறது."

"சந்தர்ப்பம் வரும்போது வேசிகளும் குடும்பப் பெண்களாகி விடுவதுண்டு. இரவு முழுவதும் மதுக் கிண்ணங்கள் காலியாகியிருக்கும். காமலீலைகள் நடந்திருக்கும். களைத்துப் போனதால், ஜில்லென்ற காற்றுப் பட்டதும் தூங்கிப் போயிருப்பாள்."

"எனக்கு என்னவோ இவள் குடும்பப் பெண் என்றே தோற்றுகிறது."

"குடும்பப் பெண் பார்க்கிலா தூங்க வருவாள்?"

"வீட்டில் ஏதாவது கோபித்துக்கொண்டு வந்திருக்கலாம்."

"அருகில் போய் நேராகவே கேட்டுவிடுவோமே?"

"போடா முட்டாள்! முன்பின் பழக்கமில்லாமல் எப்படி இவளை எழுப்புவது?"

"அடே, பேசினால் தானாகப் பழக்கமாகிவிடுகிறது. போதாக் குறைக்கு நமக்கு வந்தனமும் செலுத்துவாள்."

"சள்ளென்று எரிந்து விழுந்தால்?"

"எரிந்து விழுவதற்குக் காரணமே இல்லையே. அன்பு கனிந்த மொழிகளை அள்ளிப் பொழிவோம். நம் தேன்மொழிகளைக் கேட்டு எந்த இளநங்கையும் கோபங்கொள்ளவே முடியாது. நீ என்னப்பா, வயசான பெண்களுக்குக்கூட ரஸம் சொட்டும் வார்த்தைகளைக் கேட்டால் உள்ளம் மலர்ந்து விடுகிறது.

இவளோ வயசுப் பெண். இவ்வளவு அழகும் இளமையும் சேர்ந்த வடிவத்தை நான் இதுவரையில் பார்த்ததே இல்லை.''

''இந்த அழகு வடிவம் என் இருதயத்தில் அசையாமல் பதிந்து விட்டது. என் வாழ்க்கையில் என்றைக்குமே இவளை மறக்க முடியாது.''

''இவள் வேசிப் பெண் என்றுதான் நான் மறுபடியும் சொல்வேன்.''

''அழகுத் தெய்வத்தை - வேசியாக இருந்தாலுங்கூட - வழிபடுவதுதான் நம் கொள்கை.''

''நீ இங்கேயே நின்றுகொண்டு, கவிகளைப்போல வாய்ப் பந்தல் அமைத்துக்கொண்டே இருக்கப் போகிருயா, அல்லது என்னேடு இவளருகில் வரப்போகிருயா? நீ சும்மா நின்று கொண்டிரு; நான் வலை வீசுகிறேன்.''

''அவள் யாரோ ஒரு குடும்பப் பெண்.''

''குடும்பப் பெண் பார்க்கில் வந்து தூங்கினுல், அவள் பிறரைத் தன்னிடம் ஆகர்ஷிக்க விரும்புகிருள் என்பதைத் தவிர இதற்கு வேறு அர்த்தமில்லை. வேசியின் மனப்பான்மைதான் இது.''

''இந்தக் காலத்தில் பெண்கள்கூடத்தாம் 'முன்னேற்றவாதி' களாக இருக்கிருர்கள்.''

'''முன்னேற்றவாதி'களான பெண்கள் இளைஞர்களைக் கண்டு பதுங்குவதில்லை.''

''அது வாஸ்தவம். இருந்தாலும், இவள் யாரோ குடும்பப் பெண். இவளோடு எதையும் பேசுவது அநுசிதம் என்றே எனக்குத் தோன்றுகிறது.''

''அப்படியானுல் வா, ஓடுவோம்.''

''ஆனுல் இந்த அழகு வடிவம் என் மனத்தில் ஓடிக்கொண் டிருக்கிறதே.''

''அப்படியானுல் இங்கேயே உட்கார்ந்திருந்து, இவள் எழுந்து நடந்ததும் இவள் பின்னுலேயே போவோம். இவள் வேசிப் பெண் என்றே நான் சொல்கிறேன்.''

''நான் சொல்கிறேன்: இவள் குடும்பப் பெண்.''

''நமக்குள்ளே பத்து ரூபாய் பந்தயம் போட்டுக்கொள் வோம். யார் ஜயிக்கிருர்களோ, பார்க்கலாம்.''

* * * *

இரண்டு கிழவர்கள், இழந்துபோன இளமையைத் தேடுபவர்கள்போலத் தரையை உற்று நோக்கிக்கொண்டே

மெதுவாக நடந்து வருகிறார்கள். ஒருவருக்கு இடுப்பு வளைந்திருக்கிறது; கறுத்த கேசம்; ஸ்தூல சரீரம். மற்றொருவருக்குத் தலை நரைத்துவிட்டது; ஆனால் இடுப்பு நேராக இருக்கிறது. ஒற்றை நாடியான சரீரம். இருவருக்குமே பல் இல்லை; பொய்ப் பல் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இருவரும் மூக்குக் கண்ணாடி அணிந்துள்ளனர். ஸ்தூலதேகி வக்கீல்; ஒல்லியாக இருப்பவர் டாக்டர்.

''பார்த்தீர்களா, இருபதாம் நூற்றாண்டின் அதிசயம் இது!'' என்கிறார் வக்கீல்.

''பார்த்தேனையா பார்த்தேன். இந்தியா மட்டும் உலகத்திலிருந்து தனிப்பட்டதா என்ன?'' என்கிறார் டாக்டர்.

''ஆனால் இதை நீங்கள் ஒழுங்கானது என்று சொல்ல முடியாதே?''

''ஒழுங்கைப்பற்றிப் பெருமை பேசும் காலமல்ல இது.''

''யாரோ பெரிய மனிதர் வீட்டுப் பெண்போலத்தான் இருக்கிறது.''

''வேசிப் பெண்ணையா இவள்; இதுகூடத் தெரியவில்லையா உங்களுக்கு?''

''வேசிப் பெண் இவ்வளவு அசடாக இருக்கமாட்டாள்.''

''பெரிய மனிதர் வீட்டுப் பெண்கள்தாம் அசடுகளாக இருப்பார்களோ?''

''புதிய சுதந்தரம், ஐயா; புதிய வெறி!''

''நல்லதோ, கெட்டதோ – நம்முடைய காலத்தைக் கழித்து விட்டோம். இனிமேல் வருகிறவர்கள் பாடு திண்டாட்டந்தான்.''

''இனி நரக வாழ்க்கையே தேவலை என்று ஆகிவிடும்.''

''இந்தச் சமயத்தில் நாம் இளமையை இழந்துவிட்டதுதான் வருத்தமாக இருக்கிறது.''

''அவ்வளவுதானே! கண்களை இழக்கவில்லையே? அந்த மனசு என்னும் பொருளை இழக்கவில்லையே?''

''ஆமாம்; கண்களால் பார்ப்போம். நெஞ்சு எரியும்; மனசு தவியாகத் தவிக்கும்.''

''எனக்கு என்னவோ மீண்டும் இளைஞனாகிவிட்டால் நல்லது என்று தோன்றுகிறது. இந்தக் காலத்து வாழ்க்கைதான் ஐயா, 'ஜோர்'! நம்முடைய காலத்திலே இந்த அழகுக் காட்சியெல்லாம் ஏது? இன்று எங்கே பார்த்தாலும் அழகுத் தெய்வங்கள்தாம் காட்சியளிக்கின்றன.''

''இளம்பெண்களுக்கு உலகத்தில் அடியோடு பிடிக்காத பொருள் கிழவனே என்று நீங்கள் கேள்விப்பட்டதில்லையா?''

"நான் அதை அவ்வளவாகப் பாராட்டுவதில்லை. ஆணின் மகிமை அவனுடைய இளமையிலே இல்லை; அவனுடைய பராக்கிரமத்தில்தான் இருக்கிறது. எத்தனையோ கிழவர்கள் இளைஞர்களைக் காட்டிலும் பராக்கிரமசாலிகளாக இருக்கிறார்கள். இதை அடிக்கடி என் அநுபவத்தில் பார்த்துவருகிறேன். என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன்; எந்த இளைஞனையும் விட என்னை நான் குறைவாக மதிப்பதில்லை."

"இதெல்லாம் சரி, ஐயா; ஆனால் கிழவர்களின் மனம் பலவீனமாகி விடுகிறதே! இல்லாவிட்டால், இந்தப் பெண் இப்படிப் படுத்திருப்பதைக் கண்டும் நாம் இப்படியா போய் விடுவோம்? இவளைக் கண்ணாரப் பார்க்கக்கூட என்னால் முடிய வில்லையே. எங்கே கண் விழித்துக்கொள்வாளோ, நான் உற்றுப் பார்ப்பதைக் கண்டால் மனசில் என்ன நினைத்துக் கொள்வாளோ என்று எனக்குப் பயமாகவே இருந்தது."

"பயம் என்ன? கிழவர்களைக்கூட மயக்கிவிட்டோமே என்று அவள் சந்தோஷப்படுவாள்."

"சும்மா இரும் ஐயா."

"நீங்கள் கொஞ்ச நாளைக்கு 'ஒகாஸா' உட்கொள்ளுங் களேன்?"

"சந்திரோதயம் சாப்பிட்டுப் பார்த்தாயிற்று; எல்லாம் பகற் கொள்ளை!"

"'மங்கீ கிளாண்டு' வைத்துக்கொள்ளுங்களேன்?"

"எனக்காக இவளோடு பேசி முடித்துவையுங்கள்; நான் அதற்குத் தயார்."

"சரி; அந்தப் பொறுப்பு என்னுடையது. ஆனால் எனக்கும் பங்கு உண்டு."

"என்ன பங்கு?"

"எப்போதாவது ஒரு சமயம் நானும் உங்கள் வீட்டுக்கு வந்து கண் குளிரப் பார்த்து மகிழ்வேன்."

"நீங்கள் இந்த எண்ணத்தோடு வந்தால் நான் உங்களுக்கு எதிரியாகிவிடுவேன்."

"ஓஹோ! 'மங்கீ கிளாண்டு' என்ற பேரைக் கேட்டவுடனே உங்களுக்கு இளமை திரும்பிவிட்டதே?"

"பணத்தைக் கொள்ளையடிக்கத்தான் டாக்டர்கள் இந்தத் தந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. அப்படித்தானே?"

"இந்த மங்கையின் ஸ்பரிசத்தில் மின்சாரம் இருக்கிறது, ஐயா! இவளுடைய ஒவ்வோர் அங்கத்திலும் ஒவ்வொரு

குறுநகையிலும், ஒவ்வொரு கேளிக்கையிலும் மின்சாரம் நிரம்பிக் கிடக்கிறது. ஒரு மங்கைநல்லாளைக் கட்டியணைப்பது நூறு 'மங்கீ கிளாண்டு'க்குச் சமானம்."

"சரி, நடையைக் கட்டுங்கள். வீட்டில் கட்சிக்காரர்கள் வந்து உட்கார்ந்திருப்பார்கள்."

"இந்த எழிலுருவம் மனசை விட்டுப் போகவில்லையே."

"மீண்டும் அதை ஞாபகப்படுத்திவிட்டீர்களே !"

"இவள் படுத்திருப்பதைத்தான் பாருங்களேன். ஜனங்கள் தன் அழகையும், உடலமைப்பையும், விரிந்த கூந்தலையும், திறந்திருக்கும் கழுத்தையும் பார்த்துப் பார்த்து வயிறு எரியவேண்டும் என்றுதானே இவள் இப்படிப் படுத்திருக்கிறாள் ? நீங்கள் இவ்விதம் போய்விடுவது அநியாயம் ஐயா ! இவள் கூப்பிடுகிறாள் ; நீங்கள் இப்படித் தலைதெறிக்க ஓடுகிறீர்களே ?"

"நாம் மனசோடு காதலிப்பதுபோல இளைஞர்களால் முடியாது."

"நூற்றுக்கு ஒரு வார்த்தை ! ரஸிகர்களாக இருக்கும் கிழவர்களைத் தேடித் திரியும் பெண்களை நான் பார்த்திருக்கிறேன். இளைஞர்கள் எப்போதும் மேற்போக்காகவே இருப்பார்கள் ; கட்டில் அடங்க மாட்டார்கள் ; எதிலும் நிலை இல்லை ; கர்வம் பிடித்தவர்கள். காதலுக்குப் பதிலாக ஏதாவது வேண்டும் என்று அவர்கள் விரும்புவார்கள். நம்முடைய விஷயம் அப்படியல்ல; சற்றும் தன்னலமின்றி ஆத்ம சமர்ப்பணம் செய்துவிடுகிறோம்."

"உங்கள் பேச்சைக் கேட்டு மனசில் குளுகுளுப்பு உண்டாகிறது."

"ஆனால் ஒன்று மட்டும் ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள் : அவளுக்கு எவனாவது இளைஞனான காதலன் கிடைத்துவிட்டால் ?"

"பேஷாகக் கிடைக்கட்டுமே ! இதற்கெல்லாம் நான் பயந்து சாகவில்லை, ஐயா !"

"நீங்கள் கல்யாணம் செய்துகொள்வதாக இருந்தீர்களே, அது என்ன ஆயிற்று ?"

"ஆமாம் ; இருந்தேன். ஆனால் நாம் பெற்ற பிள்ளைகளே நமக்குச் சத்துருக்களான பின்பு என்ன செய்வது ? என் மூத்த மகன் யசவந்தன் என்னைச் சுட்டுவிடுவதாகப் பயமுறுத்துகிறான். காலமே கெட்டுப் போயிருக்கிறது."

கோடை வெயில் கடுமையாக எறிகிறது. நண்பர்கள் இருவரும் நடையைக் கட்டினார்கள்.

2

இரண்டு பெண்மணிகள் – ஒருத்தி கிழவி, மற்ருருத்தி இளநங்கை – 'பார்க்கு' வாசலில் காரிலிருந்து இறங்கி, உலாவ வருகிருர்கள். அவர்களும் தூக்கத்தில் ஆழ்ந்த அந்தப் பெண்ணைப் பார்க்கிருர்கள்.

''அடியோடு வெட்கமே இல்லையே!'' என்கிருள் கிழவி.

''இளநங்கை அவளை வெறுப்போடு பார்த்துக்கொண்டே, ''மேலுக்குப் பார்த்தால், யாரோ பெரிய மனிதர் வீட்டுப் பெண்போலக் காண்கிருளே!'' என்கிருள்.

''அதெல்லாம் மேலுக்குத்தான். இதனல்தான் பெண் களுக்குச் சுதந்தரம் கொடுக்கக்கூடாது என்று ஆண்கள் சொல்லுகிருர்கள்.''

''எனக்கு என்னவோ இவள் வேசி என்று தோற்றுகிறது.''

''வேசியாகத்தான் இருக்கட்டுமே; இவ்வளவு வெட்க மற்றுப்போய், பெண் சமூகத்தை அவமானப்படுத்த இவளுக்கு என்ன உரிமை இருக்கிறது?''

''தன் வீட்டிலேயே தூங்குவதுபோல, சுகமாகக் குறட்டை விடுகிருளே!''

''வெட்கங் கெட்டவள். பெண்கள் திரைக்குள்ளே பதுங்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆண்களுக்கு அடிமை யாகவும் அவர்கள் இருக்கவேண்டாம். ஆனல், பெண்மைக்குரிய கௌரவத்தையும் நாணத்தையும் அவர்கள் விடக்கூடாது. எவளாவது ஒரு பெண்மணி சாலையில் ஸிகரெட் பிடித்துக் கொண்டு போவதைப் பார்த்தால், என் நெஞ்சம் கொதிக்கிறது. பாதி மார்பை மறைக்கும் ஜம்பர் போட்டுக்கொள்பவர்களைக் கண்டால், எனக்குப் பற்றி எரிகிறது. நம்முடைய தர்மத்தின் பெருமையை விட்டுவிடுவதனல்தான் நாம் முன்னேற்றக்காரர்கள் என்று தெரியுமா என்ன? புருஷர்கள் தம் மார்பையோ முதுகையோ திறந்து விட்டுக்கொண்டு திரிகிருர்களா?''

''நான் சொன்னல் உங்களுக்குக் கோபந்தான் வரும். ஆண் சுதந்தரமானவன்; தான் சுதந்தரமானவன் என்று அவனுக்குத் தெரியும். அவன் சுதந்தர வேஷம் போடுவதில்லை. பெண், தான் சுவாதீனமற்றவள் என்று நினைக்கிருள்; ஆகையால் தனக்குச் சுவாதீனம் இருப்பதாகப் பாசாங்கு செய்கிருள். பலசாலிகள் வீம்பு பேசமாட்டார்கள். பலவீனர்கள்தாம் எகிறுவார்கள். தம்முடைய கண்ணீரைத் துடைத்துக்கொள்ள, இந்த உரிமையைக்கூட நீங்கள் அவர்களுக்குத் தரக்கூடாதா?''

"நான் சொல்கிறேன்: பெண் தன்னை மறைத்துக்கொண்டு ஆடவனை எவ்வளவு ஆட்டிவைக்க முடியுமோ, அவ்வளவு தன்னைத் திறந்துகொண்டு அவள் செய்யமுடியாது."

"பெண் மட்டும் ஆணின் கவர்ச்சியைப்பற்றிக் கவலை கொள்வானேன்? ஆண்கள் ஏன் பெண்ணிடமிருந்து எதையும் மறைத்துவைப்பதில்லை?"

"என் வாயைக் கிளறுதே, மீனு! இந்தச் சிறுக்கியை எழுப்பி, வீட்டுக்குப் போய்த் தூங்கச்சொல். இங்கே இத்தனை பேர் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். இந்த வெட்கமற்றவள் இவள் பாட்டுக்குக் காலைப் பரப்பிக்கொண்டு படுத்திருக்கிறாளே! இவளுக்கு இங்கே எப்படித் தூக்கம் வந்தது?"

"இரவெல்லாம் ஒரே வெப்பமாக இருந்ததே, அம்மா! இங்கே ஜில்லென்று இருக்கவே, பாவம், கண்ணயர்ந்துவிட்டாள்."

"இரவெல்லாம் இவள் இங்கேதான் இருந்திருக்கிறாள். எனக்கும் கொஞ்சம் விஷயம் தெரியும்."

மீனு அந்த இளமானிடம் சென்று, அவள் கையைப் பிடித்து அசைத்து, "இங்கே ஏனம்மா தூங்குகிறீர்கள்? வெயில் ஏறிவிட்டதே. எழுந்து வீட்டுக்குப் போங்கள்" என்கிறாள்.

அவள் மெதுவாகக் கண்ணைத் திறந்து, "ஐயோ! இவ்வளவு நேரமாகிவிட்டதா? நான் தூங்கிப் போய்விட்டேனா? எனக்கு அடிக்கடி மயக்கம் வருவது வழக்கம். காற்றாட உலாவப் போனால் ஏதாவது குணம் தெரியலாம் என்று இங்கு வந்தேன். வந்தவுடனே மயக்கம் வந்ததால் இந்த மேடைமேல் உட்கார்ந்தேன். பிறகு என் நினைவே இல்லை. இப்போதும் என்னால் நிற்க முடியாது. விழுந்து விடுவேன்போல் தோற்றுகிறது. எவ்வளவோ வைத்தியம் செய்தும் பலன் இல்லை. டாக்டர் சியாமநாத் உங்களுக்குத் தெரிந்திருக்கலாமே; அவர் பிள்ளைக்குத்தான் என்னைக் கொடுப்பதாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்" என்றாள்.

"அப்படியா! சியாமநாத் இப்போதுதான் இந்த வழியே போனார்" என்று மீனு ஆச்சரியத்தோடு சொன்னாள்.

"உண்மையாகவா! ஆனால் அவருக்கு என்னை எப்படித் தெரியும்? இன்னும் கல்யாணம் ஆகவில்லையே!"

மீனு முறுவல் பூத்துக்கொண்டே, "வசந்தனும் இப்போது இந்த வழியாகத்தான் போனார். காலேஜில் அவர் எனக்குப் பழக்கமானவர்" என்றாள்.

"அப்படியா! ஆனால் அவரும் என்னைப் பார்த்ததில்லையே."

"சரி, நான் ஓடிப்போய் டாக்டரைக் கூப்பிட்டு வரட்டுமா?"

"வேண்டாம்; சற்று நேரத்தில் எனக்குச் சரியாகிவிடும்."

"வசந்தன் அதோ நிற்கிறார்; கூப்பிடட்டுமா?"

'வேண்டாம்; யாரையும் கூப்பிடவேண்டாம்."

"அப்படியானால் எங்கள் காரில் வா; உன்னை உங்கள் வீட்டில் கொண்டுவிடுகிறோம்."

"மிக்க வந்தனம்."

"எந்த இடத்துக்குப் போகவேண்டும்?"

"பேகம்கஞ்ச்: மிஸ்டர் ஜயராமின் வீட்டுக்கு."

"நான் இன்றைக்கே வசந்தனிடம் சொல்கிறேன்."

"அவர் இந்தப் 'பார்க்கு'க்கு வருகிறார் என்பது எனக்கு என்ன தெரியும்!"

"இருந்தாலும், யாரையாவது கூடவே அழைத்து வந்திருக்க வேண்டாமா?"

"எதற்கு? ஒன்றும் அவசியம் இல்லையே."

ரவீந்திரரின் கடிதங்கள்

அவர் தம் மனைவிக்கு எழுதியவை

உலக மகாகவியாகிய ரவீந்திரநாதர் கடிதங்கள் படித்து அனுபவிப்பதற்கு உரியவை. கவிஞர் எண்ணங்கள் கடித உருவத்தில் எப்படி எப்படி இருக்கின்றன என்பதை இவற்றிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

தம்முடைய மனைவிக்கு எழுதிய கடிதங்களால் அவர் ஒரு குடும்பத் தலைவருக்குரிய பொறுப்புக்களை எவ்வாறு பார்க்கிறாரென்பதை உணர்ந்துகொள்ளலாம். அவருடைய குடும்ப வியவகாரத்தை அறிந்துகொள்வதற்கும், மனைவி மக்களிடத்தில் அவருக்கு உள்ள அன்பைத் தெளிவதற்கும் இக்கடிதங்கள் தக்க கருவியாக உதவும்.

ஸ்ரீ த. நா. ஸேனாபதி மொழிபெயர்த்தது

விலை ரூ. 1/4

மானேஜர்

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர் — சென்னை